AR
649

# மாறனலங்காரம்

## பொருளணியியல்

[1 முதல் 15 அணிகள்]

மூலமும் உரையும்

★

பதிப்பாசிரியர் :
புலவர் இரா இளங்குமரன்

★

கழக வெளியீடு

மாறனலங்காரம்

பொருளணியியல்

(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர் :

புலவர் இரா இளங்குமரன்

கழக வெளியீடு : கஙிகச

உ

# மாறனலங்காரம்

## பொருளணியியல்

[1 முதல் 15 அணிகள்]

(மூலமும் உரையும்)

★

பதிப்பாசிரியர் :

புலவர் இரா இளங்குமரன்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1974

இராமு இளங்குமரன் (1930)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

*Branches* :
Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam Tiruchirappalli-2

Ed 1 September 1974

P31,JxJ50,1
N74

MAARANALANKARAM
(MOOLAMUM URAIYUM)

Thiruvaranganar Achakam, Madras-13. (I/1)

# பதிப்புரை

தமிழ் மொழியில் ஐவகை இலக்கணங்களையும் எடுத்துக் கூறும் நூல்கள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானது தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் அணி யிலக்கணத்தை உவமவியலுள்ளும், செய்யுளியலுள்ளும் கூறுகின்றது. தொல்காப்பியர்க்குப்பின் வந்த புலவர்கள் உவமை அணியிலிருந்து பலவகை யணிகளைத் தோற்றுவித்துக் கொண்டனர்; அவற்றுக்குத் தனித்தனியே பல பெயர்களைச் சூட்டினர். அங்ஙனம் எழுந்த அணியிலக்கணங் கூறும் நூல்கள் பல. அவற்றுள் தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன சிறந்து விளங்குவன. அணியியல் என்னும் நூல் ஒன்று முற்காலத்து இருந்தமை பண்டை நூல்களால் அறியக் கிடக்கின்றது. வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் முத்துவீரியம் என்பன தமிழ் மொழியின் ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல்கள்.

மாறனலங்காரம் என்னும் இந்நூல் மாறன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற நம்மாழ்வாரைத் தலைவராகக் கொண்டு இயற்றப் பெற்றதாகும். மாறன் என்னும் நம்மாழ்வார் பாண்டிய நாட்டிலுள்ள பொருநை யாற்றங்கரையில் விளங்கும் திருவழுதி வளநாட்டின் சிற்றரசர் எனக் குறிக்கப் பெறுகிறார்; இவர் ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர்.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர். இவருக்குச் ‘சடையன்’ என்னும் இயற் பெயருண்டு. இந்நூலின் உரையாசிரியர் தென்திருப்பேரையிற் பிறந்த காரிரத்ந கவிராயர் என்பவர்.

மாறனலங்காரம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் உரையுடன் ஐம்பது ஆண்டுகட்குமுன் வெளியிடப் பெற்றது. கிடைத்தற்கரிய இந்நூலை வெளியிட்டமைக்குத் தமிழ் உலகம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு நன்றி செலுத்துங் கடப்பாடு உடையது.

இந்நூலுள் பாயிரம், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்னும் பகுதிகள் உள்ளன. அவற்றுள் மதுரைப் பல்கலைக்கழகத்தார் புலவர் இறுதித் தேர்வுக்கு இந்நூலின் பொருளணியியலில் உள்ள முதல் பதினைந்து அணிகளை உரை விளக்கங்களுடன் படித்துப் பயன் பெறுமாறு பாடமாக அமைத்துள்ளனர். எஞ்சிய பகுதியும் இணைத்து முழு நூலாகப் பின்னே வெளிவரும்.

இலக்கணப் புலமைமிக்க புலவர் இளங்குமரன் அவர்கள் மாணவர் விரும்பிக் கற்கும் வகையில் இந்நூலினை ஒழுங்குபடுத்தி அடிக்குறிப்பு முதலியன எழுதியுதவினர்கள். அவர்கட்குக் கழகத்தின் நன்றியுரியது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தன்மையலங்காரம் | க |
| 2. | உவமையலங்காரம் | ஙசு |
| 3. | உருவக அலங்காரம் | கூச |
| 4. | உள்ளுறையுவமம் | கஉஉ |
| 5. | ஒட்டலங்காரம் | கஙசு |
| 6. | உல்லேக அலங்காரம் | கரு௦ |
| 7. | ஒப்புமைக்கூட்ட அலங்காரம் | கருஉ |
| 8. | வேற்றுமையலங்காரம் | கருச |
| 9. | இட்டூந்த அலங்காரம் | கருகூ |
| 10. | தற்குண அலங்காரம் | கசுச |
| 11. | பிரத்தியனீக அலங்காரம் | கசுரு |
| 12. | சந்தய அலங்காரம் | கசுசு |
| 13. | அற்புத அலங்காரம் | கசுஅ |
| 14. | நிதரிசன அலங்காரம் | கசுகூ |
| 15. | தற்குறிப்பேற்ற அலங்காரம் | கஎக |
| | நூற்பா அகரவரிசை | கஎரு |
| | மேற்கோள் நூற்பா அகரவரிசை | கஎசு |
| | இலக்கிய மேற்கோள் அகரவரிசை | கஎஎ |
| | பொருளடைவு | கஅக |

உ

# மாறனலங்காரம்

---

## உ. பொருளணியியல்

### 1. தன்மையலங்காரம்

1. பொருளினுஞ் சொல்லினும் புனையுறு செய்யுட்
கணிபெறப் புணர்த்தலின் அணியெனும் பெயர்த்தே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னுதலிற்றோவெனின் ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயர் உரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்? 'பொருளணியிய' லென்னும் பெயர்த்து; பொருளானும் அணிகள் உணர்த்தினமையின். ஆயின், இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின்? சொல்வான் தொடங்கிய அணியென்பவற்றிற்குக் காரணம் இவை என்பதூஉம் அவை செய்யுட்கு இன்ன சிறப்புடைத்தாகப் புணர்த்தலின் இப் பெயர்த்தாயிற்று என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இதன் பொருள்) புலவரால் தொடுக்கப்பட்ட கவிகட்குப் பொருளானும் சொல்லானும் அழகெய்தப் புணர்ப்பதால் அணியென்னும் பெயரை யுடைத்தாயிற்று இவ்வலங்காரம்; என்றவாறு.

புலவரால் என்பதூஉம் அலங்காரம் என்பதூஉஞ் சொல்லெச்சம். அணி இரண்டனுண் முன்னையது [1]அழகாம். பின்னையது [2]பூணும். என்வே, [3]பொருளானுஞ் சொல்லானும் அணி இரண்டென்பதாயிற்று.



---

1 அணிபெற - அழகுபெற.

2. அணிஎனும் - அணிகலம் என்னும்.

3. அழகு சுட்டும் அணி சொல்; அணிகலம் சுட்டும் அணி பொருள். முறை பிறழக்கூறியது பொருளணி சொல்லணி என்னும் வழக்கியல் குறித்தாம்.

2. அவற்றுள்,
புவனம் போற்றிய பொருளணி புகலின்
தவலரும் பாண்மைத் தன்மை உவமை
உருவகம் உள்ளுறை ஒட்டுல் லேகம்
ஒப்புமைக் கூட்டம் வேற்றுமை திட்டாந்தம்
தற்குணம் பிரத்திய னீகம் சந்தயம்
அற்புதம் நிதரிசனம் தற்குறிப் பதிசயம்
சிலேடைபின் வருநிலை தீபகம் நிரனிறை
பூட்டுவில் இறைச்சிப் பொருள்கோள் பொருண்மொழி
அதிகம் வகைமுத லடுக்கிணை யெதுகை
விரோதம் உபாயம் விசேடம் சமாயிதம்
ஏதுச் சுவைபரி யாயம் இலேசம்
தற்பவம் அசங்கதி தடுமா றுத்தி
புணர்நிலை வேற்றுப் பொருள்வைப்பு விபாவனை
ஆர்வமொழி நெடுமொழி பரிவ ருத்தனை
காரண மாலை காரிய மாலை
ஏகா வளிபிர தீபம் பிறவணி
 முன்ன விலக்கப நுதிநிந் தாத்துதி
புகழ்வதின் இகழ்தல் மாறுபடு புகழ்நிலை
பரிசங்கை காவிய லிங்கம் பரிகரம்
உறுசுவை விநோத்தி சமுச்சயம் உதாத்தம்
ஆசி சங்கரம் சங்கீ ரணமே
பாவிகம் எனவறு பானுன் காகும்.

எ - ன். வைத்த முறையானே பொருளானும் அணிகளது பெயரும் முறையும் தொகையு முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அங்ஙனம் இரண்டு கூற்றவாகிய அணிகளுள் உயர்ந்தோர் முதலெனப் போற்றப்பட்ட பொருளணியொன் றனையுங் கூறுமிடத்துத் தன்மை முதலாகப் பாவிகம் ஈறாக அறுபத்து நான்காமென்றவாறு.



இவற்றிற்கெல்லாம் எண்ணும்மை தொக்குநின்றன. 'என' என்பது எண்ணிடைச் சொல்; என்னை?

"என்று மெனவு மொடுவு மோரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறும் நேரும்"

என்பதனால், எனவென்பதனைத் [1]தன்மை முதலாக எண்ணிய எங்கும் ஒட்டுக.

அஃதாக; இச் சூத்திரத்துள் சிலேடை, பின்வருநிலை, தீபகம், நிரனிறை முதலிய சொல்லானும் அணிகளும் இதனுட் கூறுநிற்பப் பொருளணியியல் என்பது என்னையெனின், மிகுதி பொருண் மேலவாதலின் மிக்கவற்றாற் பெயர் கொடுத்தார்; அஃது யாவதுபோல வெனின், [2]அங்கராகமாகிய சந்தனத்துடன் குங்கும கற்பூர கத்தூரி கூடினும் பூசியது சந்தனம் என்பது போலக் கொள்க.

அற்றேல் இவை முறையாயினவாறு என்னையோவெனின், இயல்பு விகாரமென இரண்டாகிய அவற்றுள், தன்மை இயல்பாகலான் முற்பட முறைமைத்தாக வைக்கப்பட்டது. உவமையை [3]மூன்றுறுப்படக்கிய பிண்டமாகுந் தொல்காப்பியத்துள் இறுதி நின்ற பொருளகத்து அகப்பட்டதாக அலங்காரத்தினையுங் கூறிய ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரும் உவமையென்பது ஒன்றாகத் தொகை பெற்று வினை முதலிய நான்காய் வகுத்துப் பலவேறு விரிவாய் நின்று விகாரமாயது அன்றிப் பிற அலங்காரங்கட்கும் உபகார

1. தன்மையென, உவமையென - என்று அறுபத்து நான்கு அணிகளுடனும் இயைக்க.

2. அங்கம் - உடல். ராகம் - நிறம் செய்வது. அஃதாவது உடலிற் பூசப்பெறும் மணக்கலவை. "அங்கராகம் அணியரா மார்ப" வில்லி. மணி. 109. இது மிகுதியால் பெற்றபெயர். இவ்வாறு பெயர் பெறுதலை, "மிகுதியால் பெயர் பெற்றது களவியல்" என்பதனால் (நன். 49) அறிக.

3. பிண்டம் - பலபொருட்டொகுதி. (தொல். சொல். 90 சேனா) எழுத்து சொல் பொருள் ஆகியவை உறுப்புக்கள்.

முடைத்தாகலானும் அஃதொன்றினையுமே முக்கியமாக்கி அதனுடன் உருவகமும் உள்ளுறை யுவமமும் வகுத்துக் கூறிய முதன்மையானும், இதற்குத் [1]தனியே முதனூல் செய்த [2]தெண்டியாசிரிரும் அவர் நோக்கமே தாமும் உடம்பட்டாராகத் தன்மையின்பின் உவமையை வைத்தாராகலானும், இருவர் நோக்கமும் உட்கொண்டு இந் நூலுடையார் அவையிரண்டிற்கும் இந்நூல் வழி நூலாகலானும் தன்மையை முதல் வைத்து அதன் பின்னர் உவமையையும் முதல் வைத்தது முறையெனக் கொள்க.

உருவகமும், உவமையும், பொருளும் வேறுபட்டு நில்லாது ஒன்றென்னும் பான்மைத்தாய மாட்டேற்றும் உவமையாதலானும் உள்ளுறை உவமமும் இசை திரிந்து இசைக்கப்படுவதாய் உவமையோடு உவமிக்கப்படும் பொருள் பிறிதோராறு தாராது அவ்வந் நிலங்களிற் பிறந்த கருப்பொருளோடுஞ் சார்த்தி உள்ளுறுத்திக் கொள்ளும் உவமையாதலானும் அவை முறையே வைக்கப்பட்டன.

ஒழிந்த ஒட்டு உல்லேக முதலியனவும் உவமையைப் பின் சென்றிருத்தலானவை வைத்த முறையும் உய்த்துணர்ந்து கொள்க. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். உவமையைப் பின் சென்றனவல்லாத அலங்காரங்களையும் தமக்குப் பொருந்தின முறையே வைத்த முறையும் உய்த்துணர்ந்து கொள்க. அவையும் ஈண்டுரைப்பிற் பெருகும்.

அஃதாக; ஆனால், இந் நூலுடையார் முதனூல்களிற் கூறியபடியே வழிநூலிற் சிறிது [3]புடைநூல் இலக்கணம்

1. அணியிலக்கணத்திற்கெனத் தனியே முதனூல் செய்த.

2. தண்டியாசிரியரை இவ்வாறு மேலும் கூறுவார். தண்டி என்றும் கூறுவார். 'தண்டியலங்காரம்' என்னும் பெயருண்மையும், இப்பெயருடைய பெரியார் ஒருவர் 'நாட்டமிகு தண்டி' என்று நம்பியாரூரரால் குறிக்கப் பெறுதலுண்மையும் அறிக.

3. புடைநூல் - சார்பு நூல்.

"இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்."—நன். 8.



தவறாது கூறப்புகுந்து மிகவும் இதன் முதனூலாகிய தண்டி கூறிய அணிகளுள் நுட்பமென்னும் அலங்காரத்தைக் குறைத்துப் பிற முதனூலணிகள் கூறிய அணிகளையும் திரட்டிக்கூறி; முந்து நூல்களுட் கூறாத பூட்டுவில், இறைச்சிப் பொருள்கோள், பொருண் மொழியென்னு மூன்றினோடும் வகை முதலடுக்கு, இணைமெதுகை, உபாயம், உறுசுவை, புகழ்வதின் இகழ்தல் என்னும் அலங்காரங்களையுங் கூட்டி அறுபத்து நாலாக மிகுத்ததூஉம் ஒருவழிக் குன்றக் கூறல் மிகைபடக்கூற லென்னுங் குற்றமாம் பிறவெனின், ஆகாது; என்னை? [1]நுட்பம் என்பது பரிகரத்துள் அடங்குமெனக் குறைத்துக், செய்யுட்கு அணிபெறப் புணர்ப்பதெல்லாம் அணியெனப்படுதலான் [2]முன்னைய மூன்றுஞ் சொல்லிலக்கணத்தினும் பொருளியலினும் புறத்திணையினுங் கூறியபடியே செய்யுட் கழகாதலின் அணியிற் கூட்டி மிகுத்தார்; ஏனைய ஐந்தும் அழகெய்துவதாய் இலக்கியங் கண்டதற்கிலக்கண மியம்பியதாக்கி மிகுத்தார் ஆகலான் என்றுணர்க.

அன்றியும், வழி நூலும் புடை நூலுஞ் செய்தற்கு ஏதுத் [3]தொகுத்தல் முதலிய நான்கினுள்ளும் முதலான இரண்டும் மிகவும் ஏதுவாகலானும் கூறப்பட்டன. அற்றேல் [4]ஐயமும், தெரிதரு தேற்றமும், பொது நீங்குவமையும் தெண்டியாசிரியர் உவம விரியுட் புணர்க்க, அவற்றை ஏனை

1. பரிகர அலங்காரத்தை, "நிபுணர் நுட்ப மெனூஉ, ஆங் குரைத்ததுமாய்" என்பார் முன்னரும். (மாறன். 233)

2. சொல்லிலக்கணத்தில் கூறப்பெறுவது பூட்டுவிற் பொருள்கோள். நன். 415. பொருளியலிற் கூறப்பெறுவது இறைச்சிப் பொருள்கோள். தொல். பொருள். பொருள்: 35-37. புறத்திணையில் கூறப்பெறுவது பொருண்மொழி. புறப்பொருள் வெண்பா. 271.

3 தொகுத்தல் முதலிய நான்காவன:

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்(து)
அதர்ப்பட யாத்தல்"—தொல். மரபு. 98.

4. ஐயவுவமை, தெரிதருதேற்றவுவமை, பொது நீங்குவமை என்பன.

வாசிரியர் வேறு வேறு அணியாகப் புணர்க்க இந் நூலுடையார் முதலிரண்டும் பிறர் நோக்கத்தோடும் கூட்டிப் புணர்த்ததூஉம் குற்றமாம் எனின், குற்றமன்று. இருவர்க்கும் முதலான தொல்காப்பியனார்,

"தடுமாறுவமம் கடிவரை யின்றே"

என வழுவமைதி வாய்பாட்டாற் கூறினமையானும் அவற்றுள் உவமவுருபு புணராமையானும் உவமையைப் பின் சென்ற பிறிதோரணியாகப் 'பிறருடம்பட்டது தானுடம்படுதல்' என்னும் உத்தியான் உடம்பட்டும், ஏனையது,

"தானே தனக்குவமைதான்"

என உவம வாசகம் புணர்ந்தமையானும்,

"ஓரீஇக் கூறலு மரீஇய பண்பே"

என்றாராதலானும் 'பிறர் மதங்களைத'லென்னும் உத்தியானுங் கூறப்பட்டது.

இங்ஙனம் பெயரும் முறையும் தொகையும் ஆகிய அணிகளை முதனூலாசிரியர் வகைப்படுத்தியும் விரித்தும் கூறிய நோக்கத்தோடும் சிலவற்றை இந் நூலுடையார் 'தன்கோட் கூறல்' என்னும் உத்தியானுந் 'தன் குறியிடுத'லென்னும் உத்தியானும் வகுத்ததன்மேல் விரித்து வகுத்தும், விரித்ததன்மேல் விரித்ததையும் அவ் வணிகட்கு உணர்த்தும் பீடிகை முதலாய உரைநடை நோக்கங்களான் ஆங்காங்குக் கண்டுகொள்க. அவை யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். (௨)

**3. வழுவா மரபினைப் பொருளையும் விகாரம்**
**தழுவா நடைபெறப் புணர்ப்பது தன்மை.**

எ - ன். மேல் நிறுத்த முறையானே தன்மையென்னும் அலங்காரத்தினது பொதுவிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இருதிணையுட் குற்றமில்லாத இலக்கணத்தை யுடைய எவ்வகைப்பட்ட பொருள்களையும் உவமை முதலிய



விகார வணிகள் கூடாதே [1]சுபாவ நடைபெறப் புலவன் பாடுவது தன்மையென்றும் அலங்காரமாம் என்றவாறு.

நடை - ஒழுக்கம். குற்றமில்லாத எவ்வகைப்பட்ட பொருளையும் எனவே குற்றமுள்ளவற்றின் சுபாவத்தைப் பாடுவதும் தன்மையாம் எனினும் அலங்காரத்தின்பாற் கூடாதென்பதாம்.

'வழுவாத மர'பென்னும் வினையெதிர் மறுத்த பெயரெச்ச வாய்பாடு செய்யுள் விகாரத்தால் தொக்கு ஈற்றுயிர்மெய் [2]கோவாமுத்தம் என்பதுபோலக் குறைந்து நின்றது. 'தழுவா' என்பதும் அது. [3]விகாரம் ஆகுபெயர். (௩)

**4. அதுவே,**
**ஒண்பொருள் மக்கள் உயிருள அஃறிணை**
**சினைவினை பண்பிடம் எனவும் சிவணும்.**

எ - ன். தன்மையின் சிறப்பிலக்கணப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அத் தன்மையென்னும் அணி, உயர்திணையிடத்துப் பொருட்டன்மையும், மக்கட்டன்மையும், அஃறிணையிடத்து உயிருள்ள அஃறிணைத் தன்மையும், உயிரில்லாத அஃறிணைத் தன்மையும் [4]அப் பொருளின் சினைத்தன்மையும், வினைத்தன்மையும், பண்புத்தன்மையும், இடத்தன்மையும் எனத் தனித்தனி புலப்படப் பொருந்தும் என்றவாறு.

'அதுவே' என்பது,

"சீர்கூ றுதல் நேரடிக் குரித்தே"

என்பதனாற் சீர்கூறுயிற்று. இவற்றிற்கெல்லாம் எண்ணும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குவிரிந்தன. [5]உயிரில்லஃறிணை

---

1. சுபாவம் - இயல்பு; தன்மை.
2. கோவாத முத்தம். 'தழுவாத' என்பது தழுவா என நின்றது.
3. விகாரப்பட்ட சொல்லை 'விகாரம்' என்றதனால் ஆகுபெயர்.
4. அஃறிணைப் பொருள்.
5. உயிரில்லாத அஃறிணை; உயர்திணை அல்லாத அஃறிணை.

என்பதும் உயர்திணையென்பதும் எதிர்மறை யெச்சமாகி விரிந்தன. இன்னும் [1] அவ்விலேசானே உயிருள அஃறிணையுள் இயங்குதிணையும் உயிரில்லவற்றுட் கருத்துப் பொருளுங் கொள்க.[2] (ச)

5. அவற்றுள்,

**பொருவியல் பாண்பெண் எனவிரு புலப்படும்.**

எ - ன். இதுவும் பொருட்டன்மைக்கோர் பகுதி யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சொல்லப்பட்ட உயர்திணை அஃறிணையுட் பொருட்டன்மை ஆடூஉப் பொருட்டன்மை, மகடூஉப் பொருட் டன்மை என இருவகைத்தாய்த் தோன்றும் என்றவாறு. (ரு)

6. **அரும்பெறல் மக்கட் டன்மையும் அற்றே.**

எ - ன். இதுவும் உயர்திணைக்கண் மக்கட்டன்மைக்கோர் கூறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெறுதற்கரிய மக்கட்டன்மையும் பொருட் டன்மைபோல இருவகைப்படும் என்றவாறு.

அற்று உவமவுருபு. அஃறிணைக்கு ஒருமை பன்மை என்பதல்லாது ஆண் பெண் என்பது சிறப்பின்மையாற் கூறாராயினர்; என்னை?

''ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை''

''ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை''

என்பதனால் அறிக.

இவற்றிற்கெல்லாம் செய்யுள் வருமாறு:—

1. குறிப்பால் பொருள் விளக்கும் சொல் 'இலேசு' என்பதாம்.
2. ''எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்''

எனவும்,

''அதுவே,
பொருள்குணம் சாதி தொழிலொடு புலனும்''

எனவும், கூறுவார் தண்டியலங்கார முடையார். 28, 29.



**நேரிசை ஆசிரியப்பா**

செம்பொன் ஆடை செறிதிரு மருங்கினன்
அம்புயத் தனிமலர் அலர்ந்த உந்தியன்
கவுத்துவக் கடவுட் கவினிழல் முழுமணி
பவித்திரத் திருமகள் பதிந்த மார்பினன்
வலம்பயில் முப்புரி நூலொடும் வாடா
திலங்கிய வனமா லிகைபுனை இணைப்புயன்
இகல்புரி திகிரிசங் கேந்திய கரத்தினன்
கதிர்மணி மௌலி கவித்த சேகரன்
மதிதவழ் சோலை மலையலங் காரன்
பூதலந் தாய பொன்னடி
காதலித் தவர்வல் வினைகடந் தவரே.

இஃது ஆடூஉப் பொருட்டன்மை.

திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து.

[1] உரையிற்கோடல் என்பதனால் உரையெழுத வேண்டுவ தில்லை.

பா - நேரிசையாசிரியப்பா.

**சிந்தடி வஞ்சிப்பா**

கனையிருள்கடி வயிரப்பரல் செறிதமனியப்
புனைகழலொடு வனைபரிபுரப் பூந்தாளினன்
குறங்கிணையொடு மருங்கினைவளை பொலந்துகிலினன்
அறந்தழைதரும் அயன்றனையருள் அலருந்தியன்
கவுத்துவமணி வனமாலிகை கலந்தொளிர்திருப்
பவித்திரமுடன் மலர்மாமகள் பயின்மார்பினன்
வான்றோய்கதிர்னிற்றிகிரியை வலனேந்தியும்
மீன்றோய்மதி யினில்வரிவளை இடனேந்தியும்
மகரக்குழை தழைகாதினன் மணிமௌலியன்

1. உத்திவகைகளுள் ஒன்று. அது மூலத்தில் சொல்லாதவற்றையும் உரையிற் சொல்லுதல்.

சிகரப்பல தலைசேர்திரு மலைமேலுறை
செல்வனை,
மனமொழி மெய்களின் வழிபடு பவராய்ப்
புனைநறு மலர்பொழி பவர்பாற்
கனவிலும் உருன்கொடுங் கணிச்சி யோனே.

கனையிருள் - செறிந்தவிருள். வயிரப்பரல் - வயிரமணி; [1]உள்ளீடு ஆயது அரி. 'தமனியப்புனைகழல்' - பொன்னாற் புனையப்படும் வீரக்கழல். 'பூந்தாள்' என்றது பொலிவினையுடைய சீபாதம். 'வான்றோய் மதி....ஏந்தியும்'-வானிடத்து [2]அலமரல் பொருந்திய கதிராற் கொண்ட சக்கரத்தை வலத்தே தரித்தும். 'மீன்றோ... இடனேந்தியும்' - நாண்மீனோடு பொருந்திய மதியாற் கொண்ட வலம்புரியை இடத்தே பொறுத்த என்க. என்னை? வான்றோய் கதிர் போன்ற திகிரியை, மீன்றோய் மதி போன்ற வலம்புரியை என உவமைத் தொகைத் தொடர் மொழியன்றோ வெனின், அன்று;

"இமையாதமுக்கண் [3]மூவரிற் பெற்றவர்"

என்பதுபோலக் கொள்க.

[4]ஈரிடத்தும் 'இன்' சாரியை. 'ஆல்' என்னும் உருபு இன்னென மூன்றாவது ஐந்தன் உருபாய் மயங்கின. 'கொண்ட' என்னும் வினையுந் தொக்கது. 'செல்வனை' என்பது தனிச்சொல். சீபாத முதலியவற்றை உடையனாகித் திருமலைமேல் நிலைபெற்ற திருவுடையானைத் திரிவித கரணங்களாலும் அருச்சனை செய்பவராய்க் கைகளால் நறுமலர் தூயவரிடத்துக் காலன் நனவினுங் கனவினும் அணுகான் என்றவாறு.

---

1. அரி - சிலம்பு முதலிய அணிகளின் உள்ளிடு மணி; 'பரல்' என்பதும் அது.
2. அலமரல் - சுழற்சி. "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" தொல். உரி. 13.
3. மூவரொடு.
4. கதிர் இன் இல், மதி இன் இல் என்பவற்றில் உள்ள இன், இல் என்பவற்றை.



இது பத்தடியாய்ச் செல்வனை என்னுந் தனிச்சொல் பெற்று மூன்றடி நேரிசையாசிரியச் சுரிதகத்தால் இற்ற சிந்தடி வஞ்சிப்பா.

அலங்காரமும் திணையும் துறையும் இதுவும் அது.

### நேரிசை வெண்பா

பூங்கமலக் கோயிலாள் புத்தமிர்தி னுட்பிறந்தாள்
வீங்கு துணைமுலையாள் வெண்ணகையாள்—ஓங்குபுனற்
பொன்னி நடுவுட் பொருண்மார் பகத்தாளென்
சென்னி பிரியாத் திரு.

இது மகடூஉப் பொருட்டன்மை.

இதனுள், 'பொன்னிநடுவுட் பொருள்' என்றது இரண்டு ஆற்றிடைக்கண் வளர்ந்த நம்பெருமாள்.

திணை - இதுவுமது. துறை - பெண்பாற் கடவுள் வாழ்த்து.

### நேரிசை வெண்பா

முப்புரிநூல் மார்பினன் முக்கோல்கைக் கொண்டுளான்
பொய்ப்புலனை வென்ற பொறையுடையான்—மெய்ப்பொருளைச்
சேவிக்கு நுண்ணுணர்வான் சீநிவா தன்றமியேன்
ஆவிக் கருள்புரிந்தாள் வாள்.

இஃது ஆடூஉ மக்கட்டன்மை. 'ஆவியை' என்பது ஆவிக்கென இரண்டாவது நாலாவதாயிற்று.

திணை - வாகை. துறை - தாபதவாகை; என்னை?

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்
ஒருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே"

"மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே"

"நிறுத்திய மனத்தினை நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்துதல் நினைவே"

என்ற முறையே தொகைநிலை, பொறைநிலை, நினைதல் என்னும் மூன்றும் இப் பாட்டினுள்ளே கூறினமையான்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்"

என்னுஞ் சூத்திரத்துள்,

[1]"நாலிரு வழக்கிற் றாபத பக்கமும்"

என்னும் எட்டனுள் தவஞ்செய்து யோகம் பயில்வார்க்குரிய இம் மூன்றும் வந்தமையால் எனக் கொள்க.

நேரிசை வெண்பா

கூரெயிற்றார் உண்கண்ணார் கொம்மை யிளமுலையார்
வார்புருவத் தார்திலக வாணுதலார்—காரகத்தெம்
மால்வலரையார் எண்ணிறந்த மாதருள்ளின் றுற்குறித்த
கோல்வளையார் ஆரிறைவ கூறு.

இது மகடூஉ மக்கட்டன்மை.

கூரெயிறு - கூரிய பல். உண்கண் - மையுண்கண். கொம்மை - திரட்சி. இளமை - மேனிவனப்பு. வார் புருவம் - நீண்ட புருவம். கோல்வளை - திரண்டவளை. வாணுதல் - ஒளி பொருந்திய நுதல்.

பகுதி - [2]சேட்படை. துறை - அறியாள் போன்று அவன் வினவு கேட்டல்.

நேரிசை வெண்பா

வள்ளுகிரும் தோலடியும் செவ்வாயும் வார்சிறைகூர்
புள்ளியுமென் சூட்டுமுறு பொற்பினதாம்—ஒள்ளியரை
மாறிவரு வாதியரை வென்ற மகிழ்மாறனூர்
ஏறிவரு வெள்ளோ திமம்.

1. நாலிரு வழக்கில் தாபதப் பக்கமாவன, யோகம் செய்வார்க்குரிய இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்பன. தொல். புறத். 20 நச்.

2. சேட்படை - தலைவன் தலைவியொடு சேராதவாறு தோழி தடுத்தல். சேண் - தொலைவு. படை - படுத்துதல். அஃதாவது விலக்குதல்.



இஃது உயிருளதாய் இயங்கும் அஃறிணைத்தன்மை. வள் - கூர்மை. தோலடி - என்பில்லாத அடி. புள்ளி - பொறி.

திணை - பாடாண் பொதுவியல். துறை - அன்ன வாழ்த்து. என்னை ?

"பாலறி மரபிற் பொருநர் கண்ணும்"

வாகைத்திணையுட் கூறிய சூத்திரம்போல வென்றி கூறுது அன்னத்தினது தன்மை கூறியதனாலும் வாழ்த்தெல்லாம் பாடாண் ஆதலாலும் உணர்க.

தரவு கொச்சகக் கலிப்பா

பரியரைத்தாய்த் திணிவயிரம் பயின்றுநிலங் கிளைமுதற்றாய்
விரிசினைத்தாய்ப் பசுந்தழைத்தாய் விரைமலர்த்தாய்
[விழைகனித்தாய்ப்
பெரியகதி ரவன்மறைந்த பிழம்பிருட்கு முறங்காது
வீரிவளை யூர்புனற்குருகூர் மகிழ்மாறர் திருப்புளியே.

இஃது உயிருளதாகி இயங்கா அஃறிணைத்தன்மை. இவையிரண்டும் கடவுட்டன்மை யுடைத்தாயினும் உலகின்கட் டோன்றும் வடிவம் அஃறிணைத்தன்மைய ஆதலின் இங்ஙனம் கூறுவதாயிற்று. [1]இருள் - ஆகுபெயர்.

திணை - இதுவுமது. துறை - தாவர வாழ்த்து.

பா - தரவு கொச்சகக் கலிப்பா.

பஃறொடை வெண்பா

ஆதார பீடத் தமர்ந்துயர்ந்த பாதசெடி
மீதாய் அழுந்த மிதித்துநிமிர் தாட்டுணைத்தாய்த்
தாழ்ந்த துதிக்கையினைத் தாவி யிருகைபற்ற
வாழ்ந்த பகுவாய் அகத்தோங்கு நாவின்
வளையெயிற்றுக் கூர்ங்கோட்டு வான்பிடர் வீழ்கற்றை
உளைவனப்பிற் பாங்கர் உயர்செவித்தாய் ஒண்கருக்கின்
ஊழொன் றியசேர்த்தோ டேற்றமும் ஆளியின்மேல்

1. இருள் - இருட்பொழுதுக்கு (இரவுக்கு) ஆயது.

ஆழுங் குடைத்தாய் அதன்மேற் கொளாளியதாய்
நான்றதலைப் போதிகைத்தா [1]நாவீறர் வண்புளிக்கீழ்த்
தோன்றுதிருக் காவணக்கற் றாண்.

இஃது உயிரில் அஃறிணைத்தன்மை.

இது பத்தடியான் வந்த பஃறொடை வெண்பா.

திணை - இதுவுமது. துறை - [2]மதலை வாழ்த்து.

நேரிசை வெண்பா

நீண்ட செவியுறவின் நீள்புருவத் திம்பரொளி
கூண்டுபய நோக்கமும்கைக் கொண்டதாம்—பாண்டவர்தம்
தேர்ப்பாக னை சிறுபுலியூ ரானுலகம்
காப்பான்றன் மால்வரையாள் கண்.

இது சினைத்தன்மை.

[3]உபய நோக்கம் - அருணோக்கமும் மருணோக்கமும்.

பகுதி - சேட்படை. துறை - கண்கயப்பு உரைத்தல்.

---

1. நாவீறர் - மாறனும் சடகோபர். இதனை,

"பாராத கல்விப்ர பந்தப் பொருளனைத்தும்
நேராக முன்வந்து நிற்குமே - தேராது
தேவீறு கொண்ட திருமாலை முத்தமிழ்தேர்
நாவீறனைத்துதித்த நாள்"

என்பதனாலும், "நாவீறன் என்றது சடகோபரை. இவர் திருவாய்மொழி அருளிச் செய்த காரணத்தால் இப்பெயர் பெறுவர்" என்பதனாலும் அறிக. (செந்தமிழ். 4 : 180)

2. மதலை - தூண்; பற்றுக்கோடுமாம்.

"முதலிலார்க்(கு) ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை"

என்பதனாலும்,

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு'

என்பதனாலும் மதலை பற்றுக்கோடாதல் அறிக.

3. உபய நோக்கம் - இருநோக்கம்.



நேரிசை வெண்பா

கைச்சிரத்தா னுந்துதிப்பக் கன்றினரா கந்திறந்து
பச்சிரத்த முண்டுயிருண் பான்மைத்தே—வச்சிரத்தாற்
குன்றெறிந்தா னும்பரவுங் கோயிலான் பாரதப்போர்க்
கன்றெறிந்த வன்சக் கரம்.

இது வினைத்தன்மை.

ஆகம் - மார்பு. திறத்தல - பிளத்தல். பச்சிரத்தம் - குளிர்ந்த ரத்தம். அன்று - முற்காலத்து. [1]குவ் வுருபு மயக்கம்.

திணை - வாகை. துறை - [2]திகிரி வென்றி.

நேரிசை வெண்பா

பூரித் துடலம் புளகித் திடப்புலமை
சீரித் துயிர்தளிர்ப்பச் சேர்ந்துருகும்—பாரித்த
முத்தமிழ்மா றன்ஞான முத்திரைக்கை கண்டுதொழும்
உத்தமராய் வாழ்வார் உளம்.

இது பண்புத்தன்மை.

பூரித்தல் - தடித்தல். புளகித்தல் - உரோமஞ் சிலிர்த்தல் புலமை - அறிவின்றன்மை. சீரித்தல் - இடைவிடாமற் பழகுதல். தளிர்த்தல்-தழைத்தல். சேர்ந்துருகுதல்-பரத்துவ சொரூபத்தை யோகித்துக் குழைதல். பாரித்தல் - விரித்துரைத்தல். முத்தமிழ் - சித்து அசித்து ஈச்சுரம் மூன்றும் கூறும் தமிழ்; அது திருவாய்மொழி. உளம் - ஆன்ம ஞானம். "முத்தமிழ் மாறன் ஞான முத்திரைத் திருக்கையைக் கண்ணினால் கண்டும் கையினால் தொழுதும் உத்தமராய் வாழ்வாரது ஆன்ம ஞானமானது உடலம் தடித்து உரோமம் சிலிர்ப்பப் பரத்துவ

---

1 போர்க்கு என்பதில் உள்ள உருபு. 'இல்' என்னும் ஏழாம் உருபு நான்காம் உருபாக மயங்கியது.

2. திகிரி - சக்கரப்படை; ஆழிப்படை என்பதும் அது.

ஞானத்தோடும் பயின்ற பரத்துவ சொரூபத்தை யோகித்துக் குழையுக்'' எனக் கூட்டுக.

திணை - பாடாண். துறை - [1]பழிச்சினர்ப் பரவல்.

### நேரிசை வெண்பா

உற்றபர மேட்டிமுதல் ஓங்கியவைம் பூதநிலை
பெற்றுளதாய்ச் சோதிப் பிழம்பதாம்—பற்றிலர்பேர்
ஆனந்தம் எய்துவதாம் ஆதியிடை யென்பவுடன்
தானந்தம் இல்லான் தலம்.

இஃது [2]இடத்தன்மை.

பரமேட்டி முதலாய ஐம்பூதமாவன :—பரமேட்டி, புமான், விச்சுவம், நிவிர்த்தி, சருவன். இது பரமபதமாகிய இடத் தன்மை.

திணை - பாடாண் பொதுவியல். துறை - புலவரேத்தும் புத்தேளுடு வாழ்த்து. புலவர் - நித்திய சூரியர்.

[3]ஏழா வரண மிசைந்தீர்ந்தண் புனற்பொன்னி
சூழா மணிமாடஞ் சூழ்ந்துளதா—வாழ்மறையோர்

---

1. வாழ்த்தினராய் வணங்குதல். இதனைப் 'பழிச்சினர்ப் பணிதல்' என்பார் வெண்பாமாலையுடையார் 232.

''வயங்கிய புகழ் வானவனைப்
பயன்கருதிப் பழிச்சினர்ப் பணிந்தன்று''

2. இடம் - வானோர் உலகம். புத்தேள் நாடு என்பதும் அது. புத்தேள் - தேவர்.

3. ஏழாவரணம் - சத்தாவரணம் என்பர். இதனை,

''மாட மாளிகை சூழ்திரு வீதியும்
மன்னர் சேர்திரு விக்ரமன் வீதியும்
ஆடன் மாரன் அகளங்கன் வீதியும்
ஆலி நாடன் அமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியும்
குலவி ராச மகேந்திரன் வீதியும்
தேடு தரும வருமாவின் வீதியும்
தென்ன ரங்கர் திருவா வரணமே'' —பெருந்தொகை. ௨.

என்பதனால் அறிக.



வேத வொலியும் விழாவொலியுங் கூர்தகைத்தீ
நாத னரங்க நகர்.

இதுவும் இடத்தன்மை. திணை - இதுவுமது. துறை-நகர் வாழ்த்து.

தேவும் புவனமூன் றிரண்ட மன்னுயிர்
யாவும் யாவரு மிறந்தொடுங் கியஞான்
றொருபெருந் திருமா லுந்தியங் கமலத்
தருள்பகி ரண்டகோ டிகளெனு மவற்று
ளொன்றய னுலகாதி யாயவீ ரேழி
னயனிலை மேரு நடுக்கொள்பூ லோக
நவகண் டமதா நாவலந் தீவொடு
முவரொன் றியநீ ருடைக்கருங் கடலொடு
மேழ்பெருந் தீவு மேழ்பெருங் கடலும்
வாழ்வுடைத் தாகியும் வானவர் வைகு
மேம பூதல மிடையிடு திகிரிக்
காமர் மால்வரை கடந்தநள் ளிருளா
யண்ட பித்தியினகத் தண்டகோ ளகைக்கீழ்
மண்டுமாழ் புனற்குமேல் வடக்கொடு குணக்கெதி
ரைம்பது கோடியோ சனைத்தென வளவை
யும்பரோ டிம்பரு முணர்வுற வுணர்வான்
றீதரு பான்மையீற் றெருட்டும்
போதமுற் றோங்கிய புராணசித் தமதே.

இதுவும் இடத்தன்மை. திணை - இதுவுமது. துறை - பேரண்ட வாழ்த்து. இதனுள், தே என்றது அன்னிய தெய்வங்கள். புவனம் - இருநூற்றொருபத்து நாலு புவனமும். யாவும் யாவரும் - அஃறிணைகளும் உயர்திணைகளும். மேருநடுக் கொள் பூலோகம் - மேருவைத் தனது மத்திமத்தே தாங்கிக் கொண்ட பூலோகம். வானவர் வைகுமேமபூதல மிடையிடு திகிரிக் காமர் மால்வரை - கடவுளர் அரமகளிரோடு மின்ப மெய்தி வைகும் ஏமபூதலத்தை நல்ல தண்ணீர்க் கடற்குந் தனக்கும் நடுவாக வைத்த சக்கரவாளகிரி யென்னும் அழகிய பெரிய மலை. மண்டு மாழ்புனல் - [1]கெர்ப்போதகம். வடக்கோடு குணக்கெதிர் என்பது வடதிசைக்குங் கீழ்த்திசைக்கும் அவற்றிற் கெதிரான தென்றிசைக்கு மேற்றிசைக்கு மென்பதாம். புராண

---

1. கெர்ப்பம் + உதகம். உதகம் - நீர்.

[1]சித்தம் - ஆகுபெயர். ஒழிந்த அகலமு முறையிற் கொள்க. பா - நேரிசையாசிரியம். 'எனவும்' என்னும் உம்மை எச்சவும்மை யாதலால் காலத்தன்மையும் உள.

நேரிசை வெண்பா

சித்தமாய் மூன்று நெறித்தாய் இலவமுதல்
வைத்தபான் மைக்குரித்தாம் மாண்பிற்றே—அத்திகிரிச்
செங்கண்மால் உந்தியின்மேற் செங்கமலத் தோன்முதலாம்
அங்கண்ஞா லம்புகழ்கா லம்.

இது காலத்தன்மை.

இதனுள் மூன்று நெறியென்றது இறப்பு, எதிர்வு, நிகழ்வு. [2]இலவ முதலியனவும் முறையே [3]பிரமகற்பம் ஈருக உணர்ந்து கொள்க.

திணை - பொதுவியல். துறை - பருவ வாழ்த்து. (௫)

தன்மையலங்காரம் முற்றிற்று.

———

1. சித்த்தை உடையதைச் சித்தம் என்றதால் ஆகுபெயர்.

2. இலவம் - ''கண்ணிமைப் பொழுதில் அறுபதில் ஒன்று'' என்றும், ''முப்பத்தாறு இமை அல்லது இரண்டு காட்டை கொண்ட நேரம். அது கணம் எட்டுக் கொண்டது'' என்றும் கூறுவர்.

3. பிரமகற்பம் ஈருனவை:

நிமிடம், காட்டை, கலை, மூகூர்த்தம், சாமம், பகல், இரவு, நாள், வாரம், பக்கம், மாதம், இருது, அயனம், வருடம், சந்தியம்சம், சந்தி, யுகம், சதுர்யுகம், மகாயுகம், பிரளயம், கற்பம், பரார்த்தம், பரம் என்பன.—வெள்ளி விழாப் பேரகராதி.

பரமாவது பிரமகற்பம். ஆவது பிரமன் ஆயுட்காலம். அது பிரம வருடம் நூறு கொண்டது என்பர். பிரமன் ஆயுளில் பாதி பரார்த்தம் என்பர். அப்பரார்த்தத்தின் அளவு ஆயிரங்கோடா கோடி என்பர்.—கதிரை வேற்பிள்ளை தமிழ்ச் சொல்லகராதி.

## 2. உவமையலங்காரம்

7. உவமையின் வகையே உணருங் காலை
வினைபயன் உறுப்புரு என்ற நான்கினும்
தமிதமி நிகழ்ந்தும் தம்மின் விரவியும்
காதல் சிறப்பே நலன்வலி யுடனிழி
போதிய வைந்தும் உறுநிலைக் களனுய்
இருதிணை ஐம்பால் இவற்ருெடு மயங்கியும்
முதலொடு சினைகளின் முறைமையிற் பிறழ்ந்தும்
முதல்சினை வினைகுணம் இன்றியும் உயர்ந்தும்
பெருமையும் சிறுமையும் பெற்றியிற் சிறந்தும்
எண்மெய்ப் பாட்டின் எழில்பெற மரீஇ
அகத்தினும் புறத்தினும் அமர்தரு நெறித்தாய்
உரனுடை உரவோர் உளங்கொள முதனூல்
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் ருகும்.

எ - ன். வைத்த முறையானே உவமையென்னும் அலங்காரத்தினது பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமை யென்னும் அலங்காரத்தினது கூறுபாட்டை ஆராயுமிடத்து வினையும் பயனும் உறுப்பும் உருவும் என்னும் நான்கும் காரணமாகத் தோன்றுவனவாகியும், அங்ஙனந் தோன்றுவன ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமம் செய்யும் வழி ஒன்றேயன்றி இரண்டு மூன்று விரவுவனவாகியும், காதலுஞ் சிறப்பும் நலனும் வலியும் அவற்ருெடுங் கிழக்கிடும் பொருளும் ஆகிய ஐந்துந் தமக்கு நிலைக்களனுகியும், உயர்திணைக்கு உயர்திணையும் உயர்திணைக்கு அஃறிணையும் அஃறிணைக்கு அஃறிணையும் அஃறிணைக்கு உயர்திணையும் ஆண்பாற்கு ஆண்பாலும் ஆண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற்கு ஆண்பாலும் ஒருமைப்பாற்கு ஒருமைப்பாலும் ஒருமைப்பாற்குப் பன்மைப்பாலும் பன்மைப்பாற்குப் பன்மைப்

பாலும் பன்மைப்பாற்கு ஒருமைப்பாலும் மயங்காதும் மயங்கியும், முதற்கு முதலும் முதற்குச் சினையும் சினைக்குச் சினையுஞ் சினைக்கு முதலுமாகப் பிறழாதும் பிறழ்ந்தும், முதலும் சினையும் வினையும் குணனும் இன்றியும் உவமம் கூறுவனவாகியும், பொருளினும் உவமம் உயர்ந்தும் இறப்பவுயர்வும் இறப்ப இழிபும் உவமிக்குங்கால் இன்னவாகச் செய்யாது கேட்போர் மனங்கொள்ளும்படி சிறப்பில் திராவாகிச் சேர்தல் இயல்பு சிறந்தும், [1]எட்டு மெய்ப்பாட்டினொடுங் கூடி யழகுபெறும் நிலைமைத்தாகி, அகப் பொருளினும் புறப் பொருளினுஞ் சென்று பொருந்து நெறியை யுடைத்தாய்க் கற்றுவல்ல அறிவுடையோர் அறிவிற்குப் பொருந்த முதனூல் வரலாற்று முறைமையில் திரியாது சேர்க்கப்பெறும் பெருமையை யுடைத்தென்றவாறு.

இதனுள், நான்கினும் என்ற உம்மை எச்சவும்மையாகலான் அவை நான்குமே காரணமாகி அவற்றோடுஞ் சொற்பொருள் காரணமாகவும் உவமை பிறக்கு மென்றவாறு. அவை மேற் கூறப்படும். மயங்கியும் பிறழ்ந்தும் என்பது 'எதிரது போற்றல்' தந்திரவுத்தி. இவற்றிற்கெல்லாம் உதாரணம் உரைநடையானுஞ் செய்யுள் நடையானும் வருமாறு :—

'புலியன்ன மறவன்' என்பது வினையுவமம்.

'மாரியன்ன வண்மை' என்பது பயனுவமம்.

'துடியன்ன இடை' என்பது உறுப்புவமம்.

'செவ்வானன்ன மேனி' என்பது உருவுவமம்.

'செவ்வானன்ன மேனி'யென்பது வண்ணமொன்றுமே பற்றி உவமஞ் சென்றது.

---

1. மெய்ப்பாடு எட்டாவன :

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் வெகுளி பெருமிதம் உவகையென்
றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப."

—தொல். மெய்ப். 3



"ஊர்ந்த தேரே சேர்ந்தோ னுமையே
[1]செவ்வா னன்ன மேனி யவ்வரின்
இலங்குபிறை யன்ன இலங்குவால் வையெயிற்று"

என்பது வண்ணத்தோடு வடிவும் பற்றி உவமஞ் சென்றது.

### நேரிசை வெண்பா

வள்ளைக் கொடிமிசைபாய் மைக்கயல்போல் வார்குழையின்
உள்புக் குலாவருமை யுண்கண்ணாய்—புள்வார்
வகுளாம் புயன்வரைமேல் வான்பிறைக்குன் செங்கை
முகுளாத தென்னோ மொழி.

இதனுள், வினையும் உருவும் உறுப்புமாகிய மூன்றுவமையும் ஒரு பொருட்கண்ணே பிறிதொரு பொருளுங்கூடி வந்தவாறு காண்க. இவை [2]விரவுவமை.

பகுதி - [3]நாண நாடல். துறை - பிறைதொழு கென்றல்.

உவமை நிலைக்களம் :

"பாவையன்ன பலராய மாண்கவின்"

என்பது மகள்கட் சென்ற காதல் உவமைக்கு, நிலைக்களனாயிற்று. [4]'என்னனை'யென்பதும் அது.

"முரசு முழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிக"

---

1. செவ்வான் அன்னமேனி - வண்ணம். பிறையன்ன எயிறு - வண்ணமும் வடிவும்.

2. விரவுவமை : ஒருபொருளோடு ஒரு பொருளை உவமஞ் செய்யும்போது வினை பயன் உறுப்பு உரு என்பனவற்றுள் ஒன்றே யன்றிப் பல வருதல்.

3. நாண நாடல் : தோழி, தலைவியின் கூட்ட முண்மையை அறியுமாறு அவள் நாணத்தக்கன செய்து அறிதல். கற்புடையாள் தெய்வமும் பிறையும் பிறவும் தொழாஅள் ஆகலின் அவ்வாறு தொழச் சொல்லி மாட்டாமையால் அறிதல் பிறை தொழுகென்றல்.

என்பது சிறப்பினாற் பெற்ற உவமம். ஆதலிற் சிறப்பு நிலைக்களனாயிற்று. உலகத்துள் இயல்பு வகையானன்றி விகார வகையாற் பெறுஞ் சிறப்பு.

'ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்' என்புழி அந் நகரின் செயற்கை நலந் தோன்றக் கூறினமையின் நலன் நிலைக்களனாயிற்று. நலன் என்பது அழகு.

"அரிமா வன்ன அணங்குடைத் துப்பிற்
திருமா வளவன் றெவ்வர்க்கு"

என ஒருவன் வலி நிலைக்களனாயிற்று.

"அரவுநுங்கு மதியின் நுதலொளி கரப்ப"

என்றது ஒன்றின் இழிபு தோன்ற உவமித்தலின் இழிபு நிலைக்களனாயிற்று.

நேரிசை வெண்பா

குமர னனையானுங் குறமகளன் னாளும்
அமரர் குழாமெனக்கூண் டன்பர்—தமரணங்கே
நின்றிறைஞ்சு மாயோனை [1] நின்றவூ ரங்கிதன்முன்
சென்றிறைஞ்சு வார்நீ திரும்பு.

இதனுள், உயர்திணைக்கு உயர்திணையும் ஒருமைப்பாற்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாற்குப் பன்மைப்பாலும் ஆண்பாலுக்கு ஆண்பாலும் பெண்பாற்குப் பெண்பாலும் வந்து திணையும் பாலும் மயங்காது உவமையாயிற்று.

பகுதி - உடன்போக்கு. துறை - இயைபெடுத்துரைத்தல். நகரடைந்தமை கூறலுமாம்.

"மகிழ்வார்க்கும் அல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறையூரனி"

"கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்"

1. திருநின்றவூர்.



என்பன இவை ஆண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற்கு ஆண்பாலும் மயங்கி வந்து உவமையாயின.

நேரிசை வெண்பா

அரிக்குழாம் அன்ன அடலரக்கர் வாவும்
பரிக்குழாந் தேர்க்குழாம் பாயும்—கரிக்குழாம்
ஓர்வாளி பட்டுருள்வான் ஓங்குசிலைக் கால்வளைகைக்
கார்வான மாலிமையோர் கண்.

எனவும்,

நேரிசை வெண்பா

பிறைபுரைவெண் கோட்டுப் பிணர்த்தடக்கை வேழத்
திறைபுரந்த பொன்னகருக் கிப்பார்—உறைதருவான்
பூணவா வற்றெனமால் பொற்புடை யாட்கிரங்கும்
வேணவா நெஞ்சே விடு.

எனவும் வரும். இவற்றுள் உயர்திணையாண்பாற் பன்மைக்கு அஃறிணையாண்பாற பன்மையும், அஃறிணைப் பன்மைச்சினைக்கு உயர்திணை யொருமை முதலும் மயங்கி வந்து உவமையாயின. வேழத்தையுடைய இறை - ஈண்டு இந்திரன். அற்றென - அது போலுமென. பூணவா - மனத்துப் பூண்ட ஆசை. வேணவா - வேட்கைப் பெருக்கம்.

இவ் விரண்டினுள் முன்னது : திணை-வாகைப் பொதுவியல். துறை - வில் வென்றி ; அல்லது திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்துமாம்.

பின்னது : பகுதி - இரவுக்குறி. துறை - அருமை கேட்டழிதல்.

நேரிசை வெண்பா

மூத்த நகைவெம் முலைபோன் மலைகொடியே
யெய்த்த விடைநுதலுக் கேந்திழாய்—ஒத்ததுதான்
நேற்றுருவங் கொண்ட நிலாத்தளிரே கூற்றுருவம்
வேற்றுருவங் கொண்டனையாண் மெய்.

இதனுள், [1]பன்மைச்சினைக்குப் பன்மைச்சினையும், பன்மைச்சினைக்கு ஒருமை முதலும், ஒருமைச்சினைக்கு ஒருமை முதலும், ஒருமைச்சினைக்கு ஒருமைச்சினையும், பெண்பாற்கு ஆண்பாலும் மயங்காதும் மயங்கியும் வந்து உவமையாயின. இதனுள், முத்தமும் நகையும் முலையும் [2]சாதி ஏகவசனம்.

பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக் கவயவங் கூறல்.

'கருஞாயி றன்னான்'

'விசும்பு தோலுரிப்பனபோல'

'மலைநடந் தனைய'

'அமிர்து புளித்தாங்கு'

இவை [3]முதலுஞ் சினையும் வினையுங் குணமும் இல்லாதன உவமையாயின.

"கடல் கண்டன்ன கண்ணகன் பரப்பின்"

"மாரியன்ன வண்மைத்
தேர்வேளாயைக் காணிய"

"தெள்ளமிர் தென்னத் திருந்திய தேமொழி"

"ஏறுபோற் பீடுநடை"

என்பன உவமையினது உயர்ச்சியாற் பொருட்குயர்ச்சியாயின.

---

1. பன்மைச்சினைக்குப் பன்மைச்சினை - பற்களுக்கு முத்துக்கள். பன்மைச்சினைக்கு ஒருமை முதல் - முலைகட்கு மலை. ஒருமைச்சினைக்கு ஒருமை முதல் - இடைக்குக் கொடி. ஒருமைச்சினைக்கு ஒருமைச்சினை - அடிக்குத் தளிர். பெண்பாற்கு ஆண்பால் - ஏந்திழைக்குக் கூற்றுவன்.

2. சாதி ஒருமை. அஃறிணைப் பொருட் பன்மையை ஒருமையாகக் கூறுதல்.

3. ஞாயிற்றுக்குப் பிறிதொன்றின்மையும், விசும்பிற்கு உறுப்பு இன்மையும், மலைக்கு இயங்குதல் வினை இன்மையும் அமிழ்திற்குப் புளிப்புக் குணம் இன்மையும்.



"அவாப்போ லகன்ற அல்குன்மேற் சான்றோர்
[1]உசாப்போல வுண்டே மருங்குல்"

என்பன கழிய பெரியவாயினுங் கழிய சிறியவாயினுஞ் சிறப்பிற்றீரா வுவமையாயின. சிறப்பிற்றீர்வனவும் உவமவொழிபிற் கூறுப. எண் மெய்ப்பாட்டினும் [2]அகத்தினும் புறத்தினும் வருவன மூந்து நூல்களுட் கண்டுகொள்க.

அஃதாக ; இதன் முதனூல் செய்த தண்டியாசிரியர் பண்பு முதலாக் காரண மூன்றென்ப துணர்ந்தும் இந் நூலுடையார் உருப்பினைக் கூட்டிக் காரணம் நாலென்பதூஉம் நிலைக்களன் ஐந்தென்பதூஉம் மிகைபடக் கூறலென்னுங் குற்றம் ஆமாலோ எனின் ? ஆகாது ; என்னை ? தண்டியாசிரியர்,

"வடிவி னளவின் வண்ணத்தின் வருஉ"

என்னுஞ் சூத்திரம் நோக்கி வடிவும் பண்பினுளடங்குமென்று உட்கொண்டாரேனும் இந் நூலுடையார், உற்றுணரும் பண்புங் கட்புலனும் பண்பும் எனப் பண்பினை வேறுபடக் கொண்டார், அங்ஙனங் கோடல் வடிவு பற்றிய பண்பு இருளின் கண்ணும் உற்றுணரப்படும் ; வண்ணமாகிய கட்புலனும் பண்பு அவ்வாறுணரப் படாதாதலால் வடிவினைக் கூட்டி நாலென்றார். அன்றியும்,

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமைத் தோற்றம்"

எனவும் இக் கருத்தேபற்றி முதனூல் செய்த ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனாரும் கூறினர் ; இதற்கு அதுவும் மூந்து நூலாகலின் அவர் கருத்தே இந் நூலுடையாரும் உட்கொண்டாரென உணர்க.

அன்றியும்,

"விரவியும் வருஉ மரபின வென்ப"

"சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் சொல்லு நிலைக்கள னென்ப"

"கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்"

---

1. உசா - ஆராய்ச்சி. நுண்மை சுட்டியது. மருங்குல் - இடை.
2. அகப்பொருள், புறப்பொருள்.

"முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கும்
நுதலிய மரபி னுரியவை யுரிய"
"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை"
"பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக்
குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய"
"பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப"

எனவும் கூறிய சூத்திரங்களானும் ஏனையவும் உணர்க. (தொல். உவம இயல்) (எ)

8. அதுவே,

நிறைவினும் குறைவினும் நிகழ்த்துதல் நெறித்தாய்த்
துறைதொறும் பழமையும் புதுமையும் தோய்ந்து
விரியினும் தொகையினும் விழுமிதின் நடைபெறும்.

எ - ன். இதுவும் அவ் வுவமைக்காவதோர் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அதுவே - அவ் வகைப்பட்ட வுவமை என்னும் அது, நிறைவுவமை குறைவுவமையெனப் புலவராற் கூறுதலைத் தனக்கு இலக்கண நெறியாக வுடைத்தாய் [1]வினை முதலாய் நால்வகைப்பட்ட இடந்தோறும் முந்துநூற் புலவராற் கூறப்பட்ட தொன்மைத்தாகியும், அதன் பின்னர் அவ்வக் காலத்துப் புலவராற் புதுவது புதுவதாகக் கூறப்பட்டு வருவனவுமாகப் பொருத்தமுற்று விரியுவமை தொகை யுவமையென இரு திறத்தினும் விழுமிதாக நடைபெறும் என்றவாறு.

'விழுமிதின்' என்று சிறப்பித்த அதனால் இவை நான்கும் இனி மேல்வரும் விரியுவமை யனைத்திற்கும் பொதுவாமெனவும், இன்னும் அவ்விலேசானே அவற்றுள் விரியுவமையுந் தொகை யுவமையும் வினை முதலிய நான்கினோடும் எட்டாமெனவும் கொள்க; என்னை?

"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே"

என்றாராகலின். (அ)

1. வினையும் பயனும் உறுப்பும் உருபும்.



9. அவற்றுள்,

முக்கியப் பொருட்டிறம் முற்றுதல் நிறைவே.

எ - ன். நிறைவுவமையினது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமேயத்தின் நான்கு கூறுபாடும் உவமையினும் முற்றக் காண்பன நிறைவுவமையாம் என்றவாறு.

ஆரா அமுதம் அளித்ததிருப் பாற்கடலுள்
நாரா யணனு கணைமீது—நேரிழாய்
எப்படியே கண்வளரா நின்றான் எனுமரங்கத்
தப்படியே கண்வளர்வா னும்.

இது நிறைவுவமை.

இதனுள், திருப்பாற்கடலுதன் உவமை. ஆரியர் இதனைப் பூரண வுவமை என்ப. அங்ஙனமாதல், அவன் கண்வளரா நின்றதுபோல இவனுங் கண்வளரா நின்றானென வினையுவமையும், அவன் திருமேனி எப்படியே யிருக்குமென்னும் அப்படியே இவன் திருமேனியும் இருக்கும் எனவே வடிவினோடு [1]காந்தியாகிய பண்பும், அவனைச் சேவிப்பார்க்கு அச் சேவை காரணமாக முத்தியாகிய காரியம் பயக்குமதுபோல இவனைச் சேவிப்பார்க்கும் முத்தியாகிய காரியம் பயக்குமெனப் பயவுவமையும் உவமையாகிய திருப்பாற் கடலிடத்தும் வினை முதலிய நான்கும் பூரணமாகி உவமை உயர்ந்தபடியுங் காண்க. 'எப்படியே கண்வளரா நின்றானெனும்' என்பது பிரமன் முதலாயினர் புராணங்கள் எப்படியே கூறும் என்பதாம். பயவுவமை என்பது ஒன்றன் தொழில் ஏதுவாகப் பிறக்குங் காரியம். அஃது எச்சமாயிற்று. 'நேரிழாய்' என்பது மகடூஉ முன்னிலை. இரண்டு ஆற்றிடை அரங்கத்துத் திருமதிட்குப் பாற்கடல் [2]நள்ளிடை [3]ஆவரணம் உவமை.

திணை - பாடாண். துறை - கண்படை வாழ்த்து.

1. ஒளிமிக்க நிறம்.
2. நடுவிடம். நள்ளிரவு, நண்பகல் போல்வது.
3. ஆவரணம் - கோயிற் றிருமதில்.

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

பனிமதிக் கிரணம் வியன்கள நடுவட்
பரந்துடல் கதுவுபோர்ப் பாய்மா
முனியுறப் பொழியும் இருண்மத முடுக்க
முரணிழந் திரியல்போம் வேடர்
குனிதிரைத் திருப்பாற் கடலினைக் கடைநாட்
கொதித்தெழுங் கருவிடந் தொடரத்
தனிதனி யுலக்கற் றறிவிழந் திரிந்த
தலைமைவா னவரையொத் தனரே.

இதுவுமது.

இதனுள், திருப்பாற்கடல் ஈன்ற கருவிடம் தொடர்ந்தது, வெண்ணிலவு வியன்கள நடுவட் பரந்து உடல் கதுவிய போர்ப் பாய்மாப் பொழியும் இருண்மத முடுக்கினதற்கு உவமை. [4]'முரணிழந் திரியல்போம் வேடர்' என்பது தனித்தனி ஒருவர்க்கொருவர் உதவாது ஓடின தலைமை வானவரை ஒத்தனர் என்றவாறு.

'இருண்மத முடுக்க' எனவே பண்பும் வடிவும் வினையுவமையும், 'அறிவிழந்து' எனவே அதனால் ஆய காரியம் ஆதலாற் பயனுவமையும் ஆகிப் பூரணவுவமை ஆயவாறு காண்க.

(கூ)

**10. ஒன்று தியசில வொப்பது குறைவே.**

எ-ன். குறைவுவமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) உவமேயத்தின் வினை முதலிய கூறுபாடு நான்கும் ஒவ்வாது அவற்றுள் ஒன்று முதன் மூன்றொருப்பது குறைவுவமையாம் என்றவாறு.

இஃது,

"ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே"

என்பதன்பாற் படும்.



### நேரிசை வெண்பா

வாவித் திருக்குருகூர் மாறனின் வண்டமிழென்
நாவிற் கினிமை நயப்பதால்—தேவர்
மருந்துநிகர் என்றே மதித்துரைப்பன் முற்றப்
பொருந்துவமற் றின்மையினிப் போது.

இஃது [1]ஒன்றொருத்த குறைவுவமை.

### நேரிசை வெண்பா

வெள்ளைப் பிறைக்கோட்டு வெங்கரியை வென்றவிரற்
பிள்ளைப் பெருமான்தென் பேரைவாழ்—வள்ளைக்
குழையாரைத் தோய்ந்தகன்ற கொற்றவனைக் காய்ந்த
பிழையார் பொறுப்பார் பிறர்.

இஃது [2]இரண்டு பெற்றவுவமை.

### நேரிசை வெண்பா

பாயுங் கருங்கயல்போற் பாங்கியிவ ளென்றுமருங்
கேயும் படிதா வினதியற்பாத்—தோயும்
புவிநா வலர்புகழ்மால் புட்குழியாள் செவ்விக்
கவினு னனத்துலவுங் கண்.

இது தொழில் பண்பு வடிவு மூன்றும் பெற்று ஒன்று குறைந்த வுவமை.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி"

என்பனவும் எடுத்துக்காட்டுவமை எனவும், [3]ஒன்றொருத்த குறைவுவமை எனவும் படும்.

---

1. இனிமைப் பண்பு ஒன்று.
2. வண்ணம், வடிவு இரண்டு.
3. முதன்மைத்தன்மை; ஒளித்தன்மை.

செய்ய கமலமுகம் செங்கனிவாய் முத்தநகை
வெய்ய களபமுலை மின்மருங்குல்—மொய்யிழாய் !
பையரவப் பாயலான் பாடகத்தான் மால்வரைவாழ்
தைய லடிமாந் தளிர்.

இதுவுமது.

பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக்கு அவயவங் கூறல்.

வடநூலார் [1] உலுத்தவுவமை என்பதும் இது.

முந்து நூற்புலவராற் கூறப்பட்டுத் தொன்று தொட்டுவரும் உவமையாவன :—

'புலிபோற் பாயுமறவன்'
'மாரியன்ன வண்மை'
'துடிபோற்சுருங்கு மருங்குல்'
'பவளம்போன்ற செவ்வாய்'
'குறைபடுமதியந்தேயக் குறுமுயல் தேய்வதே போல்'
'நஞ்சு மமிர்தமுமே போல் குணத்த'
'கருமணியம் பாலகத்துப் பதித்தன்ன'
'பொருகயற் கண்'

என்பன முதலியன.

அதன் பின்னர், ஆகுங் காலங்கள்தோறும் புலவராற் புதுவது புதுவதாகப் புணர்த்தவற்றுட் சில வருமாறு :—

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

[2] கோழரைய காஞ்சிரைதாம் பழுத்தருகே நிற்பவற்றிற்
குறுகா தாங்குக்
காழிலவாங் கொழுங்கதலிக் கனிகளைச்சேட் சென்றருந்துங்
கவிகண் மார்க்கம்
ஊழிலவாய்ப் படைத்தபொருள் பிறர்க்குதவா வுலுத்தரைநீத்
துசித மான
வாழ்வுடையோர் பொன்மனைச்சென் றமிர்தருந்திப் பசிதணிவார்
மார்க்க மானும்.

[1] வாசமொரு சிறிதின்று யிணருழ்த்த செம்மலர்தம்
மருங்காய் நிற்பப்
பூசல்வரி வண்டினங்கள் நீளிடைப்போய் வாலிதாம்
பூந்தேன் மாந்தல்
ஆசறக்கற் றுணர்ந்தறியார் அவைக்களநீத் தேசெலச்சொல்
பவராய் துன்னால்
காசறக்கற் றவர்கழகத் தடைந்துநலன் உணர்பவர்தங்
காட்சி மானும்.

[2] உற்றவயக் களிற்றினெடும் பிடியினையாங் கொருபாந்தள்
ஒருவாய்க் கொள்ளக்
கற்றதுகண் டிருதலைப்புள் அவற்றிருகை கவர்ந்தெடுப்பக்
கௌவு காலைப்
பிற்குலமுன் கிடருழத்தல் தீவினைவந் தடியிடுநாட்
பசைய தாகப்
பெற்றபொரு ளினைப்பேணி முதலுமிழந் திடருறுவோர்
பெற்றி மானும்.

[3] உச்சவான் மலைச்சிகரத் துறுகொடிகள் படர்பாங்கர்
உடைய வாகும்
பச்சைவேய்ங் கழைத்தலையிற் சுழல்வனவாய்த் தோகைநடம்
பயிலு நீர்மை

---

1. குறையுவமைக்கு வடநூற் பெயர் கூறியவாறு.

2. கவிகள் (குரங்குகள்) காஞ்சிரை விடுத்துக் கதலியை அடுத்து அருந்தல் பசித்தோர் உலுத்தரை விடுத்து உசிதரை அடுத்து அருந்துதல் ஒக்கும்.

1. வண்டு வாசமிலா மலர் விடுத்து வாலிதாம் பூத்தேன் மாந்தல் கல்லார் அவை விடுத்துக் கற்றோர் அவை சென்று உணரும் அறிஞர் காட்சி ஒக்கும்.

2. களிறு பிடியுடன் பாந்தளும் இருதலைப் புள்ளால் அழிதல் தீவினையால் ஊதியத்துடன் முதலும் இழந்து துன்புறுபவரை ஒக்கும். புள் - பறவை. பாந்தள் - பாம்பு.

3. கழை (மூங்கில்) மேல் தோகை நடம் பயிலல் காரிகை கழை முடிமேல் கூத்தாடல் ஒக்கும். பாசம் - கயிறு. காரிகை - கழைக் கூத்தாடும் பெண். பவுரி - ஒருவகைக் கூத்து. "பதியாய் இருந்த தேகப் பவுரி"—தாயுமானவர்.

மொய்ச்சுலாங் குழற்கழைக்கா ரிகைபாசம் பூண்டகழை
 முடிமே னின்றே
விச்சைமே தகப்பவுரி காட்டுவதா மெனக்கவினும்
 விளம்பின் மன்றே.

[1]காவின்மேற் படுபலவின் கனிகடுவன் கொடுசினைதாழ்
 காமர் வல்லி
மாவின்மேற் படர்ந்ததன்மேன் மந்திகடாம் வயிற்றிடையே
 மகவைத் தாங்கித்
தாவினுற் றவறுடைத்தா மெனவருவ தொடுபோகுந்
 தன்மை கூத்த
ரோவில்வான் கழைக்கயிற்றின் முழவுதழீஇ யெதிர்நடப்ப
 தொப்ப தாமே.

[2]வெதிரெதிர்சென் றேபொரவிண் டுகுதழலவ் வெதிரினையும்
 வெண்ணெ ருக்கி
யெதிர்பொருதற் றிறனறியாச் சந்தனத்தேம் பொதும்பரையு
 மெரித்த மார்க்கம்
பிதிரெனவாழ்ந் திடுசிறியார் விளைத்தசின மவர்திருவின்
 பெற்றி தேய்த்துச்
சதிருடன்வாழ்ந் திடுதலைமைத் தமர்திருவுந் தொலைத்திடுமத்
 தன்மை மானும்.

[3]வீங்குபுரா ரைக்கழைகண் முளிந்தனவா யுயிர்த்ததழன்
 மிறைசெம் காலை
யோங்குபசுங் கழைக்குலங்கண் மழைக்குலங்கிண் டுகுபுனலால்
 ஒழித்த பான்மை

---

1\. கடுவன் பலவின்கனி கொடு நிற்க, மந்தி, மகவைத் தாங்கித் தாவ இயலாமல் வருவதும் போவதும் கூத்தர் கழைக் கயிற்றின்மேல் முழவு அறைந்து நடப்பது போன்றதாம்.

2\. வெதிர் (மூங்கில்) வெதிருடன் மோதிப் பற்றிய தீ தன்னையும் அதனையும் சாம்பராக்கிச் சந்தனச் சோலையையும் அழித்தல் சிறியர் சினம் அவர்தம் செல்வத்தையும் அழித்துத் தமர் திருவும் தொலைத்தல் ஒக்கும்.

3\. முதிர்ந்த மூங்கிலில் பற்றி யெரிந்த தீயின் வெப்பத்தை இளமூங்கில் மேகத்தை உராய்தலால் பொழிந்த நீர் தணித்தல், மூதியர் செய்த இடரை அவர் குடியில் தோன்றிய இளையர் தணித்தல் போலாம்.



தீங்குவிளைத் திடுமூதுவர் உறுமிடரை யக்குலத்துட்
 சிறுவர் மன்னர்
பாங்குபடைத் துளகருணை முகத்தவராற் றணித்தருளப்
 பான்மை மானும்.

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

[1]கருநிறப் பருஉக்காழ்க் களங்கனி வகுளக்
 காமர்தீங் கனிகண்மாங் கனிகள்
பெருமிதப் பலவின் கனிசுவைத் ததன்பின்
 பீடுலாங் காழிலாக் கனியை
யொருமுகப் படவுண் சுகமுறு சுகமாங்
 குபய நூல் கலை முறை முறையே
குருமுகத் துணர்ந்த பின்னர்நான் மறைதேர்
 குறிப்பினர் சுகம்பொரு வருமே.

இவை எட்டும் [2]குருகா மான்மியத்திற் கந்தமா தனச் சுருக்கத்திற் பாட்டு. இவற்றுள், நால்வகைக்கும் புதுவதாம் உவமை புணர்த்தவாறு காண்க. (௧௦)

## 11. உவமையும் உருபும் ஏதுவும் பொருளுந் தவலருஞ் சிறப்பில் தாம்விரி வனவிரி.

எ - ன். வைத்த முறையானே விரியுவமைக்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமையும், உவமவுருபும், வினை பயம் உறுப்பு உருவென்னும் நான்கினுள் ஒன்றும், உவமேயமும் என்னும் நான்கும் ஒன்றற்கு உவமங் கூறுமிடத்துத் தொகாது விரிவன விரியுவமையாம் என்றவாறு.

---

1\. களங்கனி, மகிழங்கனி, மாங்கனி, பலாக்கனி ஆகியவற்றை முறையே உண்டவர் விதையில்லா வாழைக்கனி யுண்பது போலாம், தென்மொழி வடமொழி நூல்களை முறையே குருவழியாக உணர்ந்து பின்னர் நான்கு மறைகளைத் தேர்ந்து மெய்யுணர்ந்தோர் பெறும் சுகம்.

2\. குருகாமான்மியம் மாறனலங்காரமுடையாரால் செய்யப் பெற்றதாகும். இது திருக்குருகை மான்மியம் எனவும் பெறும்.

'தவலருஞ் சிறப்பில் தாம் விரிவன' என்றதனாற் பெயரு முறையுந் தொகையுஞ் சிதையாமல் வருதல் சிறந்ததென்று உணர்க.

அவையாவன:—பவளம்போலச் செவ்வா யென்புழி, பவளம் உவமையெனவும் உவமானமெனவும்படும். போல வென்பது உவமவுருபு. செம்மை யென்பது குணமாகிய ஏது. வாய் என்றது உவமேயம் எனப்படும். இப்பெயர் பெயர், இம்முறை முறை, இத்தொகை தொகை எனக் கொள்க.

நேரிசை வெண்பா

கருங்குவளை போற்கருங்கண் கன்னல்போல் இன்சொல்
சுருங்கு துடிபோற் சுருங்கு—மருங்குல்
பிடிபோல் இயங்குநடைப் பெய்வளையைக் கண்டால்
குடிபோம் குடிபோம் குணம்.

இதனுள், உவமை முதலிய நான்கும் முறையே வந்தவாறு காண்க. அன்றியும், வினை பயம் உறுப்பு உருவென்ற நான்கு உவமையும் இதனகத்து வந்தவாறுங் கண்டுகொள்க. அடுக்குத் துணிவின்மேற்று. குணம் - அறிவு. குடிபோமென்றல் தன்னிலையின் நீங்குமென்றல்.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - தலைவன் வியத்தல்.

நேரிசை வெண்பா

இலவிதழ்போற் செவ்வாய் இயற்றமிழ்போல் இன்சொல்
கலகநமன் போலஅடுங் கண்கள்—திலகப்
பிறைபோல் வளை நுதலிப் பெண்ணமிர்தைக் கண்டால்
அறைபோம் அறைபோம் அறிவு.

இதுவுமது. இதனுள்ளும் நான்குவமையும் வந்தவாறு காண்க.

துறை - இதுவுமது. இதன்கண் அடுக்கும் துணிவின் மேற்று. அறை போதல் - கீழறுத்தல். (௧௧)



12. உரைத்த நான்கினுள் ஒன்றிரண் டிடையன
யாப்பினுள் இடைப்பட் டெஞ்சலும் தொகையே.

எ - ன். ஏனைத்தொகை யுவமை இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) விரியுவமைக்கு உவமை முதலாகச் சொல்லப்பட்ட [1]நான்கனுள் இடைப்பட்ட இரண்டனுள் ஒன்றே யாயினும் இரண்டே யாயினும் யாப்பினிடத்து இடைப்பட்டுத் தொகுவது தொகை யுவமையாம் என்றவாறு.

இதனுள், தொகை யென்றதல்லது உவமையென்பது பெற்றது யாதோவெனின்; விரியுவமைக்கு முதலே உரைத்த சூத்திரத்தாற் பெற்றதெனக் கொள்க.

நேரிசை வெண்பா

அம்பவளச் செவ்வாயும் ஆரநிரை வெண்ணகையும்
பைம்பொன் அசலப் பணைமுலையின்—விம்முடன்
கண்டுகளித் தேர்திருமால் [2]காட்கரையார் கன்னலின்சொல்
உண்டுகளிப் புற்றிலமன் னோ.

இஃது உவம உருபொன்றும் இடையில் தொக்க தொகை யுவமை; இதனுள், அம்பவளச் செவ்வாய் முதலியவற்றிடையிற் போல என்னும் உவமவுருபு தொக்கதனாலறிக. நெஞ்சமே யென்னும் முன்னிலையும் எழுவாயும் எச்சம். மன்னும் ஓவும் அசை.

பகுதி - இயற்கை. துறை - களவி வேட்டல்.

நேரிசை வெண்பா

நீலம்போற் கண்ணும் நிறைமதியம் போன்முகமும்
வாலமதி போனுதலும் வண்டிமிர்பூங்—கோலத்
தொடைத்துளப மாலைத் தொழுமாறன் வெற்பிற்
படைத்துளதென் மன்னுயிர்நண் பா.

---

1. உருபு, ஏது.

2. மலை நாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று: அது திருக்காட்கரை என்பது.

இஃது உவம ஏது என்பதொன்று இடையில் தொக்க தொகையுவமை.

கருங்குவளை போலக் கரிய கண்ணினையும், எல்லாக் கலைகளும் நிரம்பின மதி போன்ற செம்முகத்தினையும், பிறைபோல வளைந்த நுதலினையும் வண்டுகள் ஆரவாரிக்கும் அழகிய தொடையாகிய துளபமாலிகையையும் உடைய மாயோனைத் தொழும் மாறன் துடரி வெற்பில் தனக்குறுப்பாகப் பெற்று நிற்பநீ கண்டதுளதேல் அஃது என் நிலைபெற்ற வுயிராம் என்றவாறு.

இதனுள், 'நிற்ப' 'நீகண்டது' என்னும் சொற்களையும் 'அஃதென' என்னும் சொற்களையும் எச்சமாக நின்றனவாக்கி விரித்துரைக்க.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - அவ்விடத்து ஏகல்.

அஃதாக ; இதன் முதனூல் செய்த தெண்டியாசிரியர் வினை பயம் முதலிய ஏதுக்கள் தொகுவதே தொகை யுவமையென நோக்கவும் (தண்டி. 31), இந் நூலுடையார் உவமவுருபு தொகுவதுந் தொகை யுவமையென்றது என்னையோவெனின், அஃதே, நன்று சொன்னாய் ! இவையிரண்டிற்கும் முதனூலாகிய [1]தொல் காப்பியத்துள்,

"உவமைத் தொகையே யுவம வியல"

என்பதனாலும், அதன் பின்னர் நேமிநாதர் பவணந்தி முதலி யோரும்,

"உவம வுருபில துவமத் தொகையே"

என்பதனாலுங் கூறப்பட்டது.

---

1. தொல்காப்பியனார் தொகை உவமையைச் "சுட்டிக் கூறா உவமை" என்பார். அதனைப் புணர்த்து மாற்றை,

"சுட்டிக் கூறா உவமமாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"
(உவமை. 7.)

என்பார்.



நேரிசை வெண்பா

பவளவாய் முத்தநகைப் பைந்தொடியீர் வாழி
அவளவாய்க் கங்குல்நெடி தாமோ—துவளருவிச்
சோலை மலையார் துணைத்தோளிற் பைந்துளப
மாலை மலையா மயிற்கு.

என்பது இரண்டு இடையில் தொக்க தொகையுவமை ; என்னை ? பவளம்போலச் சிவந்த வாயினையும் முத்துப்போல வெளுத்த நகையினையும் என்னும் உவம வுருபும் பண்பும் இடையில் தொக்கதால் என்றுணர்க.

திணை - பெருந்திணை. துறை - கண்டுகைசோர்தல்.

குறளடி வஞ்சிப்பா

கறைநவேல்விழி யிலவிதழ்தழ்
நறைநாண்மல ரலர்தாமனம்
புருவஞ்சிலை யுருவம்புயல்
உருவம்புரி குழலெனுமது
பொன்னங்கிரி கொங்கைத்துணை
மின்னென்றுரை யிடைகண்டிலன்
எனவாங்குக்
கற்றறி வுடையவென் னிறைநினைக் கலந்துள்
நற்றிரு வுறைவிடம் நண்பா !
சொற்றமிழ் மாறன் துடரிவன் பொழிலே.

இதுவும் [1]இரண்டு தொக்க தொகை யுவமை. இஃது ஆறடித்தாய் ஒன்றியும் ஒன்றாதும் வரும் வஞ்சித்தளையான், 'எனவாங்கு' என்னும் தனிச்சொற் பெற்று மூன்றடி நேரிசை ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற குறளடி வஞ்சிப்பா.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - இயல்பிடங் கூறல்.

'இடைப்பட்டெஞ்சலும்' என்ற உம்மையால் இடைப்பட்டுத் தொகாது முதலானும் முதலைக்கூறச் சினையறி ஏவியாகிய

---

1. இரண்டு - உருபும், பண்பும். 'வேல்போல் சிவந்த விழி' என்பதுபோல் விரித்துக் காண்க.

ஆகுபெயரானும் உவமையும் உவமவுருபும் விரிந்து ஈற்றில் [1]இரண்டு தொகுவனவும் உளவென்பதூஉந் தோன்றி நின்றது.

நேரிசை வெண்பா

கொடிபோல் வடவரைபோற் கொவ்வைபோற் காமர்
பிடிபோல் இளமான் பிணைபோல்—வடிவமைந்த
தென்னு ருயிரமரர்க் கின்னமிர்தன் றீந்தபிரான்
தன்னுசை அன்னுள் தனக்கு.

கொடிபோல் நுடங்குகின்ற இடையினையும், வடமலைபோலப் பெருத்த முலையினையும், கொவ்வைக் கனிபோலச் சிவந்த வாயினையும், அழகிய பிடி போன்ற மென்னடையினையும், இளைய மான்பிணைபோல வெருண்ட நோக்கினையும் உடைத்தாகிய வடிவால் அழகமைந்திருப்பதென்று ; தோழீ ! எனக்குயிர் போலச் சிறந்தவனுமாகி அமரர்க்கு முன்னை நாள் அமிர்தம் ஈந்த பிரான் திருநாகையனையாட்கு என்றவாறு.

இதனுள் ஈற்றில் விரித்த இரண்டுஞ் செய்யுட்கண் தொக்கவாறு காண்க. தோழியென்னும் முன்னிலை எச்சமாயிற்று.

பகுதி - சேட்படை. துறை - தோழிக் கவயவங் கூறல்.

இரண்டும் என்ற உம்மை எச்சமாதலான் ஈற்றில் [2]மூன்று தொகுவனவும் உள.

நேரிசை வெண்பா

அன்னநடை மானேக் கனிபிறாய் வார்சுமந்த
பொன்னசலந் தன்னைப் பொறுப்பதாய்—முன்னுதித்த
எய்யா நடுவறக்கொன் றிட்டதைவைத் தென்னேசெங்
கையான் மறைத்தமையுண் கண்.

என்பது, அன்னநடை போன்ற மென்னடையினையும் மானேக்குப் போன்ற வெருண்ட நோக்கினையும் அழகிய பூணினையும்

1 பண்பும் உவமேயமும். உவமேயம் - எடுத்துக் கொண்ட பொருள்.

2. எடுத்துக் காட்டில் 'பொன்னசலம்' என உவமானம் ஒன்றுமே இருத்தல் அறிக.



உடையாய் ! வாரைச் சுமந்தவாய்ப் பொன் மலைபோலப் பணைத்த முலையானவை தம்மைச் சுமப்பதுமாய்த் தாம் பிறந்து பணைப்பதற்கு முன்னே பிறந்த உடன்பிறப்பாகிய[1] தேயா நடுவினைமுற்றக் கொன்றவற்றைக் கொல்கவென வெளியில் வைத்து, யானுய்யும்படிக்கு உனது உயிர் போன்ற தோழியைக் காட்டித் தந்த மையுண் கண்களைக் கைகளான் மறைத்ததென்ன பேதைமையோ ? என்றவாறு.

உண்கண்களை என்று ஓர் சொல் இறுதி இரண்டாவது தொக்கு விரிந்தது. ஒழிந்த சொல்லெச்சங்களும் குறிப்பினுல் விரித்துரைத்தவாறும் காண்க.

பகுதி - இடந்தலை. துறை - காணிக்கண் புதைக்க வருந்தல். (௧௨)

13. இருமையும் ஒருதொடர் பினுளூறல் இயல்பே.

எ - ன். இன்னும் அத்தொகை விரி உவமைகட்கு ஆவதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அத்தொகையுவமையும் விரியுவமையும் ஆகிய இரண்டு தன்மையும் ஒரு செய்யுளகத்து வருதலுமாம் என்றவாறு. உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.

நேரிசை வெண்பா

மொழியமுதம் மூற்ரு முலைமுகுளம் வைவேல்
விழிமகிழ்மா றன்துடரி வெற்பில்—எழின்மயிற்கு
நல்போ தவிழ்குழல்கார் நண்பனே செம்மேனி
பொன்போன்ம்பல் வெண்முத்தம் போன்ம்.

என்பது, நண்பனே ! மகிழ்மாறன் துடரிவெற்பில் அழகிய மயில் போலுஞ் சாயலுடையாட்கு மொழி அமுதம் போலும் ; இளமுலை தாமரை முகுளம் போலும் ; விழி கூரிய வேல் போலும் ; செருகிய முல்லையரும்பு அவிழாகின்ற குழல் கார் போலும் ; சிவந்த மேனி பொன்போலும் ; வெண்பல் முத்தினிரை போலும் என்றவாறு.

1. சிற்றிடை. கொன்றவை மார்பகங்கள்.

இதனுள், முன்னைய நான்கும் உவம உருபும் ஏதுவும் உவமேயத்தை முன்னிட்டுத் தொக்கன. 'எழின்மயில்' [1]முற்றுவமை. பின்னைய இரண்டும் விரியுவமை. போலும் என்னும் உவம உருபு ஈற்றின் உகரம்,

"செய்யுமென் எச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே"

என்பதனால் முற்று ஆதலின் [2]உயிர் கெட்டது.

"மெல்லெழுத் தியையின் னகாரம் ஆகும்"

என்பதனால் [3]லகாரம் னகாரமாய்த் திரிந்தும்,

"னகார முன்னர் மகாரங் குறுகும்"

என்பதனால் [4]ஈற்று மகாரங் குறுகியும்,

"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்"

என்பதனால் ஈரொற்றுடனிலையாயும், மேலே பகரவொற்று வருதலின் செய்யுளிடைப்பட்டும் வந்த முற்றுப் போன்ம் என்றாயிற்று.

"ஐயவிரை மாண்பகழி யரந்தின்வாய்போன்ம் போன்ம்போன்ம்
பின்னு மலர்க்கண் புனல்"

எனப் பரிபாடலாகிய சங்கச் செய்யுளகத்தும் பகர மேலே வருதலால் செய்யுளிடைப்பட்டும் வந்தமை காண்க. இது தொகை விரியுவமை.

இன்னும் வேறுபட வருவனவெல்லாம் தொகை விரியுவமைக்கண் அமைக்க. (௧௧)

1. முற்றுவமை - நிறையுவமை காண்க (9)
2. அதனால் போலும் என்பது 'போல்ம்' என்றாயது.
3. போன்ம் என்றாயது.
4. மகரக் குறுக்கம் ஆகிக் கால் மாத்திரையாய் ஒலித்தது.



14. அவைதாம்,
**வெளிப்படை குறிப்பினும் விழுமிதின் நடைபெறும்.**

எ - ன். இதுவும் அவ்விருவகை உவமையின் கூறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அங்ஙனங் கூறப்பட்ட விரியுவமையும் தொகையுவமையும் என்னும் இரண்டும் வெளிப்படை உவமம் குறிப்புவமம் என்னும் இரண்டாய் விழுமிதாக நடைபெறும் என்றவாறு.

பவளச் செவ்வாய் என்புழி இரண்டற்கும் பொதுவாய செம்மைக் குணத்தை வெளிப்படையாகக் கூறினமையான், குறிப்பின்றி யுவமை கொள்ளப்படுதலானும், பவளவாய் என நின்றவழிப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிச் செம்மைக் குணம்பற்றி உவமஞ் செய்ததெனக் குறித்துக் கொள்ளப்படுவ தல்லது வல்லென்ற பவளத்திற்கும் மெல்லென்ற இதழிற்கும் உள்ளதோர் ஒப்புமைக் குணங்கள் ஆண்டில்லை என்பதூஉம், [1]பானல்போல் கருங்கண் என்புழியும் இரண்டற்கும் பொதுவாய கருமைக் குணத்தை வெளிப்படையாகக் கூறினமையாற் குறிப்பின்றி உவமையே கொள்ளப்படுதலானும், பானலுண்கண் என நின்றவழிப் பானலையும் கண்ணினையும் கூட்டிக் கருமைக் குணம்பற்றி உவமஞ் செய்ததெனக் குறித்துக் கொள்ளப்படுவ தல்லது பல இதழினோடும் [2]பலவல்லியும் தாதுவும் கூடிய பரிமளப் போதிற்கும் நீண்டு பிறழ்ந்து உலாய்க் குழைமேற்றாய கண்ணிற்கும் உள்ளதோர் ஒப்புமைகள் ஆண்டில்லை என்பதூஉம் உணர்க. பிறவுமன்ன; என்னை?

"சுட்டிக் கூறா வுவமம் ஆயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே"

என்றாராகலிற் கொள்க.

"விழுமிதின் நடைபெறும்"

என்றதனால் விழுமிதாய குறிப்புவமையும் உள. அவையும் மேற்காட்டுதும்.

1. கருங்குவளை.
2. வல்லி - கொடி. தாது - மகரந்தம், தேன்.

### நேரிசை வெண்பா

பாற்கடல்வெய் யோனிலொளி பாரித்த சோதிவட
நூற்கடலைத் தென்னுரைநன் னூற்கடலாய்—மாற்கடிமை
வாய்ந்தாரி டேற வகுத்தளித்தான் [1]தண்ணளிதாம்
தாந்தாம் எனும்வகுளத் தான்.

இது விழுமிதாய குறிப்புவமை.

உலகின்கண்ணேயிருந்து நோக்குவார்க்குத் திருப்பாற் கடலின்கண் தோன்றும் உதய திவாகரனைப்போல ஒளியைப் பாரித்தின சோதி சொரூபத்தை யுடையான் அவன் யாரெனில் வடமொழியாகிய சுருதிக் கடலைத் தென்னுரை நூற்கடலாக்கித் திருமாலுக் கடிமையாகத் தோனறினர் பேரின்ப மெய்தப் பாடித் தந்தான குளிர்ந்த வண்டுகள் தாம்தாம் எனப் பாடித் தேனை யுண்ணும் [2]வகுளமாலிகையை யுடையான் ; அவன் பரம கருணை யிருந்தபடியோ ! என்றவாறு.

இது விழுமிதாய குறிப்புவமையாய்து, இதனுள், திருப்பாற் கடலில் தோனறும் உதயதிவாகரன் தனது செய்ய மேனியில் ஆயிரங் கிரணங்களைப் பரப்பி உலகத் திருளைத் துரத்தி உலகினுள்ளார்க்குக் கடபடாதிகளைக் காட்டி இன்பத்தைப் புரந்தாற்போல இவனும் வெண்டிரைப் பொருநைத்துறை மாடத் திருக்குருகூரினிடத்துச் சிவந்த மேனியோடுந் தோன்றித் திருவாய் மொழியாகிய ஆயிரம் பாடல்களையும் விரித்ததனோடும் அன்னவாகனத்தினுந் தோன்றித் தன்னை மனோவாக்குக் காயங் களால் தியானித்தும் வாழ்த்தியும் வணங்குவார் மனத்துள் அறியாமையாகிய அந்தகாரத்தை நீக்கிப் பரப்பிரமத்தைக் காட்டித் தருவனென [3]வினையுவமம் பயவுவமம் வடிவுவமம்

1. தண்மை அளி ; அளி - வண்டு.

2. மகிழம்பூ மாலை.

3. ஒளிபரப்புதல், இருள் நீக்கல், ஒளி வடிவாதல், ஆயிரங் கதிர் உடைமை ஆகியவற்றால் முறையே நான்குவகை உவமையும் அமைதல் அறிக.



உருப்புவமம் என்னும் நான்குவமையுங் குறிப்பினுற் கொள்ளக் கிடந்தமையான் எனக் கண்டுகொள்க.

தண்ணளி என்பதற்குக் குளிர்மையுடன் கூடியதாய வண்டுகள் பாடித் தேனையுண்ணும் வகுளமாலிகையை யுடையா னெனினுமாம். வெண்டிரைப் பொருநை மாடத் திருக் குருகூரொடும் அன்னவாகனமும் திருப்பாற்கடற்கு உவமை.

இக்குறிப்புவமை இந் நூலுடையார் யாண்டுப் பெற்றா ரெனின் ? நலமிகு புல்மை நக்கீரர்,

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

எனக் கூறிய முருகாற்றுப் படுத்ததுட் பெற்றாராம்.

வாழ்த்தெல்லாம் பாடாண் ஆதலால் திணை - பாடாண் சார்ந்த பொதுவியல். துறை - பனுவல் வாழ்த்து ; அன்றியும், வாகையைச் சார்ந்த பொதுவியலிற் கூறிய பாடல் வென்றியுமாம்.

### நேரிசை வெண்பா

மின்பதிந்த கார்மேனி விண்ணகர்மாலைப் [1]புலவன்
பின்பதிந்து சென்ற பெருமானை—முன்பதிந்து
சேவித்தார் ஆளுந் திருநாடு தேவரெனப்
பாவித்தார்க் கெட்டாப் பதம்.

இதுவுமது ; என்னை ? [2]மின்குடிகொண்ட கார் போலுந் திருமகள் குடி கொண்ட மார்பினோடுங் கூடிய கரிய திருமேனியை யுடையான் எனக் குறிப்புவமை கொள்ளக் கிடந்தமையான்

1. 'புலவன் பின் பதிந்து சென்ற பெருமான்' என்றது, கணி கண்ணன் என்னும் அடியவனுக்காகத் திருமழிசையாழ்வாரும் காஞ்சி மாநகரை விட்டுப் புறப்படவும் திருமாலும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற கதையை உட்கொண்டதாகும்.

2. மின் குடி கொள்ளுதல் என்பது திருமகள் உறைதலைச் சுட்டி யமையால் குறிப்புவமையாயிற்று.

எனக் கொள்க. தேவரெனப் பாவித்தார்க்கு எட்டாப்பதம் என்பது - [1]கண்டா கன்னனுல் அறிக.

திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப் பரவல். (கச)

15. உவமே யத்தியல் உயர்த்திய பின்னர்
உவமப் பொருளியல் உயர்த்தி முடித்தலும்
கவினப் பொருட்குறிற் கடிநிலை யிலவே.

எ - ன். இஃது அவ்வுவமத்திற்கு எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) முதலே உவமேயத்தின் [2]பட்டாங்கை உயர்த்திக் கூறி, அதன் பின்னர் உவமப் பொருளின் பட்டாங்கை உயர்த்தி முடித்தலும், அவ்வுவமேயத்திற்கு உயர்ச்சி குறிப்பினுல் உண்டாம்படி பயனிலை தோன்று மெனின் நீக்கப்படாது என்றவாறு. கவின் - ஆகுபெயர்.

நேரிசை வெண்பா

முத்திரைக்கைம் மாறன் மொழிந்ததிரு வாய்மொழியே
சத்திய நூல் என்பர் தகைசான்ற—மெய்த்தமிழோர்
மேதினிமேல் ஆரணப்பா மெய்த்திருமா லேபரனென்
றோதிய நூஉம் ஆதியினி லுண்டு.

திருஞான முத்திரைக் கையினையுடைய காரிமாறப்பிரான் ஸ்ரீமந்நாராயணனை பரத்துவமென்று அவனது சொரூப ரூப குண

விபூதிகளைக் கூறிய திருவாய் மொழியே உண்மை நூலென்று பெருமை பூர்த்தியான வாய்மைத் தமிழ்ப் புலவோர் கூறுவர். அத் திருவாய் மொழியேயன்றி உண்மைப் பொருளான திருமாலே பரத்துவமென்று ஆதிகாலத்துப் பூலோகத்துக்கு மேலாய சத்திய லோகத்தினுமிருந்து வடமொழியாகிய சுருதி கூறிய நூஉம் உண்டென்றவாறு.

எனவே, ஆதியாய்ச் சத்தியலோகந் தொடங்கிப் பரந்த வடமொழியா யுணர்த்திற்றென்று சுருதியாகிய நூலை மிகச் சிறப்பித்துக் கூறுவாளுகித் திருவாய்மொழியாகிய நூலை யுயர்த்திக் கூருதது போல வியல்பினுலாய வுவமங் கூறினாராயினும் மண்ணின் குடத்தோடு பொன்னின் குடத்திற் குண்டாய வேற்றுமைபோல அந்தணரு மேனை மூவகைக் குலத்தோரு மோதுவதாகவும் பரந்து போகாதே தமிழ்மொழியா லெவ்வுலகத் தாரும் பரத்துவத்தை யுணரும் படிக்கு மறைவின்றி யிருந்த வேதசாரத்தை யெடுத்துக்கூறித் தெருட்டிற்றெனத் திருவாய் மொழிக் கேற்றமானதோர் பயனிலை குறிப்பினுற்றோன்றின வாறு காண்க. என்னை?

"உவமத் தன்மையு முரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான."

என ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனுர் கூறிய விலக்கணத் தானும்,

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."

என்னுஞ் சங்கச் செய்யுளாய இலக்கியத்தானும் உணர்க.

திணை - பாடாண். துறை - பனுவல் வாழ்த்து; அல்லது வாகை சார்ந்த இயல்வென்றியுமாம். இதுவும் குறிப்புவமைப் பாற்படும். (கரு)

1. திருமால் பெயர் தன் காதிலும் விழுதலாகாது என்னும் முனைப்பால் காதுகளில் மணிகளைத் தொங்கவிட்டு அலைத்துக்கொண்டு இருந்தவன் கண்டாகன்னன். கண்டம் - மணி. கன்னம் - காது. அவன் திருமால் ஒலிவிழக்கூடாது என்றே வினைத்துக்கொண்டு இருந்ததால் திருமாலின் திருவருள் பெற்முன் என்பது கண்டா கன்னன் கதையாம். தேவர் - பிறதெய்வங்கள்.

2. பட்டாங்கு - இயல்பு.

3. "விகார வகையாற் பெருமையும் சிறுமையும் ஒருபொருட்குக் கூருது பட்டாங்கு உவமங் கூறுதலும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர், அதனுலும் ஒருபயன் தோன்றச் சொல்லுதல் செறிப்பாட்டின்கண்" —பேராசிரியர்.

16\. பல்பொருள் ஒருபொருள் ஒருவயின் பலவயின்
போலி இல்பொருண் மறுபொருள் விபரீதம்
மருட்கை தலைதடு மாற்றம் விகாரம்
தடுமாற் றம்மே சமுச்சயம் இன்சொல்
நியமம் அநியமம் புகழ்நிந்தை யுவமம்
மோகம் அவயவம் அவயவி முற்றே
யேக மாலையந் தாதிபொது நீங்கலென்
றுக வையைந் தாமதன் விரியே.

எ - ன். இதன் முன்னர் உவமையெனத் தொகையான் ஒன்றும் இன்றது வினை பயம் உறுப்பு உருபு என்ற நான்கினோடுங் கூடி ஏது ஐந்தாம் என்னுமவை முதலிய வகையின் பாகுபாடுகள் எல்லாம் உணர்த்தி அவற்றினின்றும் விரிந்த உவமையினது பெயர் வேறுபாடும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அதன் விரி - அங்ஙனங் கூறுபடுத்தின உவமையின் விரி, பல பொருளுவமை முதலாகப் பொது நீங்குவமை யீறாக இருபத்தைந்தாம் என்றவாறு. இவற்றிற் கெல்லாம் எண்ணும்மை தொக்கன். போலி யென்பதனை இறுதி விளக்காக்கி, இருவயினும் கூட்டி, உவமம் என்பதனை [1]மத்திமதீப மாக்கி, முன்னும் பின்னும் எல்லாவற்றோடும் கூட்டி யுரைக்க. என்று என்பது எண்ணிடைச் சொல்;

"என்று மெனவு மொடுவு மொருவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்"

என்பதனாலறிக. இவ்வுமெல்லாஞ் சொல்லின் முடியும் இலக்கணத்தன ஆதலாற் பெரும்பான்மையும் [2]தம் பெயருள்ளே இலக்கணமும் புலப்படும். அல்லதூஉம் உரையினும் கொள்க.

௧. அவற்றுள், பல பொருளுவமை என்பது ஒரு பொருட்குப் பல பொருளுவமை காட்டுவது. பல பொருளுவமையெனப்

1\. இடைநிலை விளக்கு.
2\. பெயரைக் கூறுமாத்திரனே இலக்கணமும் விளங்கச் செய்தல்.



பொதுப்படக் கூறினமையான், அஃது ஒன்றுபல குழீஇய பல பொருளுவமையும், வேறுபல குழீஇய பல பொருளுவமையுமென இரு கூற்றவாம். அவற்றுள், ஒன்றுபல குழீஇய பல பொருளுவமை வருமாறு :—

நேரிசை வெண்பா

எண்ணிற் கடங்கா இளஞாயி றொன்றியபோற்
கண்ணிற் கடங்காக் கதிர்விரிக்கும்—விண்ணிற்
பரந்தாம மாதவன்பொற் பாதநினைந்தேத்தும்
வரந்தாம் படைத்தார் வசம்.

இஃது [1]ஒன்றுபல குழீஇய பல பொருளுவமை. இதனுள், பரந்தாமம் என்றது பரமபதம். 'வரந்தாம் படைத்தார் வசம்' என்பது மாதவன திருவடிகளை இப் பிறப்பிற் சிந்திக்கவும் வாழ்த்தவும் முற்பிறப்பில் வரம்படைத்தவர் தாம் எவர் அவர் கைப்புகும் பொருளாம் என்றவாறு.

நேரிசை வெண்பா

கொடியும் ஒருபிடியும் கோளரவும் மின்னும்
துடியும் புரைமருங்குல் தோகை—வடிநெடுங்கண்
என்னுயிர்க்குத் தம்பமதாய் இந்தளூர் மால்வரைத்தன்
மன்னுயிரைக் காட்டும் மதித்து.

இது [2]வேறுபல குழீஇய பல பொருளுவமை. ஒரு பிடி - ஒரு கையை விரன் மடக்கின அளவாம்.

1\. பரந்தாமம் ஒன்றற்கு, எண்ணிற்கு அடங்கா இளஞாயிறுகளை உவமைப் படுத்தலால் ஒன்றுபலகுழீஇய பலபொருளுவமையாயிற்று. ஒன்று பலகுழுவுதல் ஞாயிறுகள்.

2\. மருங்குலுக்கு (இடைக்கு) கொடி, ஒருபிடி, அரவு, மின், துடி என்று வேறுபட்ட பலவற்றை உவமை கூறியமை அறிக. இவ்வாறே மேல் வருவனவும் கண்டுகொள்க.

"ஒருபொரு ளதனுக் கொப்பதொன் றன்றிப்
பலபொருள் காட்டும் பலபொருள் உவமை"
—இலக். விளக். 640.

"ஒருபிடி நுசுப்பி னட்கே"

எனச் சிந்தாமணியினுங் கூறினமை காண்க.

பகுதி - இயற்கை. துறை - பாங்கியையறிதல்.

நேரிசை வெண்பா

ஆலம்போற் செவ்வேள் அயில்போல் அடுங்காலன்
சூலம்போற் காமன் தொடுத்தியக்கும்—நீலம்போற்
கொல்வான் பிறழ்கட் கொடிக்கிடமாம் மூலமெனச்
செல்வான் கடிகைச் சிலம்பு.

இதுவுமது.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - இயல்பிடங் கூறல்.

௨. ஒருபொருளுவமை என்பது பல பொருட்கு ஒரு பொருளுவமை காட்டுவது :—

பலவிகற்பப் பஃறொடை வெண்பா

இமிழ்திரைநீர் ஞாலத் திருளிரிய வான்றோய்ந்
தமிழ்கதிர் வெண்டிங்க ளுடனே யெஞ்ஞான்றும்
வலஞ்செய் சுவண வடவரைபொன் மாடம்
பொலஞ்செய் மதில்கோ புரஞ்சிகர பந்தி
இலங்கு மதிளரங்கத் தெம்பிரான் பல்புகழைப்
பாடினார் பாதந் தனைப்பாடிச் சென்னியின்மேற்
சூடினார்க் குண்டோ துயர்.

என்பது பல பொருட்கு ஒரு பொருளுவமை. பல பொருள் - செம்பொன் மாடம் முதலியன. உவமை வடமேரு எனும் ஒன்றும். பா - ஏழடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப் பணிதல்.

நேரிசை வெண்பா

வண்ண வனச மலர்போற் றிருமுகமுங்
கண்ணு மலரடியுங் கைக்கொண்ட—பெண்ணரசைச்



செந்தமிழ்மா றன்சிலம்பிற் சேர்ந்தகன்றேன் பாலுரைக்க
வந்தவனே திண்ணியனு வான்.

இதுவும் ஒரு பொருளுவமை.

பகுதி - இதுவுமது. துறை - தலைவனை வியத்தல்.

௩. [1]ஒருவயிற் போலி என்பது ஒரு தொடர் மொழிக்கண் பலவுவமை வந்தால் உவமை தோறும் உவமைச்சொற் புணராது இறுதியிலோர் உவமைச்சொற் புணர்ப்பது :—

நேரிசை வெண்பா

வாவித் திரையெறிந்த நித்திலத்தின் மள்ளரெறி
காவித் திரள்சேர் கமலமலர்—பாவைமார்
வெண்ணகையுண் கண்ணு னனம்போன் மெனத்தோன்றுங்
கண்ணபுரத் தானிமையோர் கண்.

இஃது ஒருவயிற் போலி.

திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து; நாடு வாழ்த்துமாம்.

திரையெறிந்த நித்திலத்தினோடு மள்ளர் களைகட்டெறிந்த காவிகளுஞ் சேர் கமலமென்க. போன்மெனத் தோன்றுமென்பது, போலத் தோன்று மென்றவாறு. ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

௪. [2]பலவயிற்போலி என்பது ஒரு தொடர்மொழிக்கண் பலவுவமை வந்தால் உவமை தோறும் உவமைச்சொற் புணர்ப்பது.

---

1. ஓர் இடத்து உவமைச்சொல் வருதல். போலி - போல முதலாய உவமை உருபுகளைக் குறித்து நின்றது. வயின் - இடம்.

"ஒருதொடரதன்கண் உவமைதொறும் இன்றி
ஒருவயிற் புணர்க்கும் ஒருவயிற் போலி"
—இலக். விளக். 640.

2. "சொல்லிய உவமம் தொறும்தொறும் போலி
புல்லப் புணர்க்கும் பலவயிற் போலி" —இலக். 640.

## நேரிசை வெண்பா

பொன்மலைபோ லுந்திருமால் புட்குழியாள் பூண்முலைநீர்
மன்னருவி போலு மணிவடங்கள்—சொன்னதன்மேற்
செக்கர்வான் போலுமெழிற் செம்படா மும்புலைந்தார்
எய்க்குநூல் என்னும் இனி.

இது பலவயிற்போலி. [1]எய்க்கு நூல் - எய்யாநிற்கு நூல். பொன்மலை போன்ற முலையின்மேற் பொற்பூணையும் பூட்டி முத்து வடத்தையும் பூட்டிச் செம்படாத்தையும் உத்தரீகமாகப் போட்டமையான் இனியிடையிறும் என்றவாறு. 'என்னும்' என்பது குறிப்பு மொழி. எனவே, இடையைத் தாங்கி வட முதலிய வற்றைத் தாங்கிப் புடைபெயர்த்துத் தனத்தைப் பரிசித்து மருங்கணைந்தானும்.

பகுதி - இடந்தலை. துறை - மருங்கணைதல்.

௫. இல்பொருளுவமையாவது முன்பில்லாதது ஒன்றை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது :—

## நேரிசை வெண்பா

உதிக்குங் கருஞாயி றென்றே யுவமை
மதிக்கும் வடமலைமா யோனைத்—துதிக்குந்
திருநா வுடையபிரான் செந்தமிழை யோதி
யிருநாவே வாரா திடர்.

என்பது இல்பொருளுவமை. என்னை? கருஞாயிறு இல்லாத பொருளாதலால் அதனைக் காளமேகம் போன்ற திருமேனிக்குவமை கூறினமையான் என்றுணர்க.

திணை - பாடாண். துறை - [2]ஓம்படை.

1. நூல் என்றது நூல்போலும் இடையை.

2. ஓம்படை - வாழ்த்து. "நாவே! ஓதியிரு! இடர் வாராது" என்று வாழ்த்தியதனால் ஓம்படையாயிற்று.



## நேரிசை வெண்பா

சொன்னவா றுன்றுரைக்கக் காணேன் றுணைமேரு
வென்னவாழ் வுற்ற விணைமுலையாண்—மன்னவா
பந்துகழங் கம்மனைகைப் பற்றுகவென் றின்றெனையும்
வந்துதழீஇக் கொண்டாண் மகிழ்ந்து.

இதுவுமது ; இதனுள், துணைமேருவென்றதனால் வடமேரு ஒன்றல்லது இல்லையால் இல்பொருளுவமையாயிற்று. இவ் வண்ணஞ் சிந்தாமணியினும்,

[1]"கோண்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித் தோற்றம் ஒத்தே"

என (882) வந்தமையால் இதனது வேறுபாடும் காண்க.

பகுதி - உடன்போக்கு. துறை - குறிப்புணர்தல்.

௬. [2]மறுபொருளுவமை என்பது முன்னர் வைத்த பொருட்கு பிரிவதோர் பிறிதொரு பொருள் பின்னரும் அதன்கண் வைப்பது :—

## நேரிசை வெண்பா

மாண்குலா மாறன்வண் டமிழ்போன் மற்றொருநூல்
காண்கலே னுங்கதுபோற் காண்கலேன்—மீண்டும்
புதல்வற் கருள்புரிந்து பொற்றாணிற் றேன்று
முதல்வற் கிணையா முதல்.

இது மறுபொருளுவமை.

திணை - பாடாண். துறை - பனுவல் வாழ்த்தோடு, கடவுள் வாழ்த்துமாம்.

1. கோண்மின்னு மீன் ; கோள்மீனும், மின்னுமீனும். கோள் மீன் - இராகு, கேது. மின்னுமீன் - அவ்விரண்டும் நீங்கிய ஏழு மீன்களும்.

"இராகு கேதுக்களை ஒழிந்த ஏழுகோளும்
சூழப்பட்ட தொருமதி இல்பொருளுவமை." —நச்.

2. "ஓதிய பொருள்தனக் கொப்பதோர் பொருள்பின்
நீதியின் நிறீஇய மறுபொருள் உவமை" —இலக். 640.

எ. [1]விபரீதவுவமை என்பது முன்பில் உவமையாக வந்ததனைப் பொருளாக்கிப் பொருளை உவமை யாக்குதல் :—

நேரிசை வெண்பா

மென்றோ ளெனத்திரண்ட வேயினங்கள் வெம்முலைகள்
அன்றோ வெனக்கோங் கரும்புறு—நின்றனவால்
வண்டமிழ்மா றன்றுடரி வண்பொழிலு மின்றெனக்கவ்
வொண்டொடியாய்த் தோற்ற மூறும்.

இது விபரீதவுவமை. என்னை ?

[2]"பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்"

என்றாராகலின். 'அன்றோ' என்பது 'அல்லவோ' என எதிர்மறையாகி 'ஆம்' என்றாயிற்று.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - பொழில் கண்டு மகிழ்தல்.

அ. மருட்கையுவமை என்பது உவமை கூறுவான் மருட்கை வயத்தனாகி ஒரு பொருட்குக் [3]கூடாத பண்பினைக் கூடுவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது :—

நேரிசை வெண்பா

தாகம் பெறநுகர்தீந் தண்மருந்து கைத்தழலின்
வேகம் பயின்ற விதிபோலு—மோகம்

---

1. "ஊறில் உவமேயம் உவமையாய் உலகியல்
வேறுபட மாட்டிய விபரீத உவமை" —இலக். 640.

2. தொல். பொருள். 284.
"பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்கப்படும் பொருளாக்கி மயங்கக் கூறுங்காலும் அஃது உவமம்போல உயர்ந்த தாகி வைக்கப்படும்"
"இவற்றை வேறு உருவகம் என்றும் பிறர் மயங்குப"
—பேராசிரியர்.

3. மருட்கை உவமையைக் கூடாஉவமை என்பர்.
"கூடா ததனைக் கூடுவ தாக்கிக்
கோடா துவமைசெய் கூடா உவமம்" —இலக். 640.



படையாத மாறன் பனிவரைமே லென்னெய்
துடையாது நீயுரைக்குஞ் சொல்.

இது [1]மருட்கையுவமை. தெண்டியாசிரியர் கூடாவுவமை யென்பதும் இது. தீந்தண் மருந்து - இனிய குளிர்ந்த அமிர்து. கைத் தழலின் வேகம் பயிலுதல் - [1]கயந்து தழல்போலச் சுடுங் கோபம் இடைவிடாமை.

பகுதி - இதுவுமது. துறை - பாங்கனை நொந்து கூறல்.

கூ. தலைதடுமாற்றவுவமை என்பது மேற்றொட்டு முதலே வந்த உவமப்பொரு ளிடையினும் ஈற்றில் வந்த உவமேயப் பொருண் முதலினும் இடையில் நின்ற உவமவுருபு இறுதியில் தொக்கதும் விரிந்ததுமாகப் புணர்ப்பது.

நேரிசை வெண்பா

மையமருண் கண்காவி வாய்பவளந் தோளிணைவேய்
ஐயவிடை நுண்ணூ லகலல்குல்—பையரவங்
கஞ்சித் திருமாது காதலிக்கு மார்பகத்தான்
தஞ்சைத் திருமான் தனக்கு.

இது தலைதடுமாற்றவுவமை. [2]இவை உவமவுருபு இறுதியில் தொக்கது.

"குவவினகொங்கை குரும்பை குழல் கொன்றை"

என்பதுமிது. மையமருண்கண்-கருமை பொருந்திய மையுண்கண். ஐயவிடை நுண்ணூல் - உண்டில்லையென்று சந்தேகமுற்ற இடை நுண்ணிய நூல்போலும் என்றவாறு. 'ஐயவிடை' யென்பதற்கு ஐயனேயென அண்மை விளியாக் உவப்பின் கண்ணே மயங்கிய தாகக் கூறினுமினுமாம்.

பகுதி - இதுவுமது. துறை - இயல்பிடங் கூறல்.

---

1. கயந்து - கைத்து; கசந்து என்பதும் அது.
"வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்"
—அயோத்: 162.
என்றார் கம்பரும்.

2. 'மையமர் உண்கண் காவிபோலும்' என்பதுபோலக் கொள்க.

௧௦. [1]விகாரவுவமை என்பது உவமையாகிய தன்மைப் பொருள்களை விகாரம் பண்ணியதாக உவமிப்பது :—

நேரிசை வெண்பா

தெள்ளமிர்தத் துள்ளாய தீஞ்சுவையை மெய்வேதத்
துள்ள வுணர்வை யுணர்வினால்—அள்ளி
எடுத்திசைத்த தொன்றெனலாம் இன்பொருளான் மாறன்
தொடுத்திசைத்த வுத்தமப்பாச் சொல்.

இது விகாரவுவமை. உணர்வை உணர்வால் அள்ளி என்பது உபநிடதச் சொல்லுளிருந்த ஞானத்தைத் தனதுண்மை ஞானத்தாற் சொல்லை நீக்கித் திரட்டியெடுத் தென்றவாறு. இரும்பை இரும்பினாலறுத் தென்பதுபோலக் கொள்க. 'சொல்' லெனவே சொல்லும் அதனுட் பொருளுமாயிற்று. சொல்லும் அதனுட் பொருளும் அமிர்தினுள்ள சுவையையும் உபநிடதச் சொல்லினுள்ள உணர்வையும் தனது பரம ஞானத்தால் அள்ளியெடுத்துச் சொல்லும் பொருளுமாகத் தொடுத்து இசைத்ததொன்று எனலாம் என்க.

இது பனுவல் வாழ்த்து.

௧௧. தடுமாறுவமம் என்பது ஒரு பொருள் ஒருகால் உவமையுமாய் ஒருகாற் பொருளுமாகி ஒரு தொடர்ச்சிக் கண்ணே தடுமாறி வருவது :—

நேரிசை வெண்பா

மெய்வேதம் போன்றதுநின் மெய்த்தமிழ்நின் மெய்த்தமிழ்போன்
மெய்வேத முங்காட்சி மேய்தால்—வையகமெண்
ணுவலவர் காரிதரு நாவீறு மின்னிகராம்
பாவலரிங் காரோ பகர்.

1. "கூறுபடும் உவமையின் கொள்கை பிறிதாக
வேறுபடுத் திசைக்கும் விகார உவமை" —இலக். 640.

"உவமையும் பொருளும் வேறுநிறீஇ இதுபோலும் இது என்னாது அவ்விரண்டனையும் ஐயுறச் சொல்லும் தடுமாறுவமம். இனி அவ்வாறன்றி உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியும் தடுமாறச் சொல்லுதலும் தடுமாறுவமம் எனப்படும்"
—தொல். உவம. 35. பேரா.



இது தடுமாறுவமை; என்னை ?

"தடுமாறுவமங் கடிவரை யின்றே"

என்றாராகலின். [1] தெண்டியாசிரியர் 'இதர விதரம்' என்பதுமிது.

திணையும் துறையும் இதுவுமது

௧௨. சமுச்சயவுவமை என்பது இதனானே அன்றி இதனை ஒப்பதினானும் ஒக்கும் என்பது :—

நேரிசை வெண்பா

வண்ணத்தால் அன்றி வடிவால் அளவினால்
எண்ணிற் கமலமுகை ஏய்க்குமே—கண்ணன்
வழியார் துணைமாறன் மால்வரையாய் கன்னல்
மொழியார் துணைமாமுலை.

இது [2]சமுச்சயவுவமை. கண்ணன் வழியார் - கண்ணனே பரத்துவம் என நிற்கும் மார்க்கத்தினையுடையார். 'துணை' என்றது அவர்கள் ஆன்மாவுக்கு உறுதித்துணை என்றவாறு. மாறன் மால்வரையிலுள்ள தலைவனே கன்னலினது பாகுபோலும் மொழியையுடையாரென்று நீ சொல்லப்பட்டவர் உபயமுலை செம்மை நிறத்தால் ஒத்ததன்றி வடிவினாலும் அளவினாலும் உள்ளத்தால் உவமை குறிக்கின்ற செந்தாமரை முகையை நீ சொன்னபடியே ஒக்கும் என்றவாறு.

குறிவழிச் சென்ற பாங்கன் தலைவி தனமுங் காண்பனோ எனிற் 'காண்பதுண்டு' என்பதற்குச் செய்யுள் :—

"அரனம்பலத்தி
னியலுள வேயிணைச் செப்புவெற் பாகின தீர்ங்கொடியேல்"

1. "பொருளுவமை யாகியும் உவமை பொருளாகியும்
ஒரு தொடரிடை வருஉம் இதர விதரம்" —இலக். 140.

2. "அதனான் அன்றி அதனையஃ தொப்ப
திதனானும் ஒக்கும் எனுஞ்சமுச் சயம்" —இலக். 140.

என்றதனாலறிக. மால்வரையாய் என்றதனால் நிலம் ஒன்றென்ப தாயிற்று.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - செவ்வி செப்பல்.

கரு. [1] இன்சொலுவமை என்பது பொருளினும் உவமைக்கோர் மிகுதி தோன்றக் கூறி உவமேயத்தினும் மிகுதியுளவேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன்றென்பது :—

நேரிசை வெண்பா

ஒன்றாய நின்முகத்த தொண்டமிழ்வே தங்குரவன்
நன்றாயு நான்முகத்த தவ்வேதம்—என்றாலும்
வண்டமிழ்மா றாவண் டமிழ்மறைக்கொப் பன்றிமறைக்
குண்டெனலா மோவே றுயர்பு.

இஃது இன்சொலுவமை. இதனுள், 'ஒப்பதன்றி' என்பது 'ஒப்பன்றி' எனச் செய்யுள் விகாரத்தால் தொக்கது.

திணை - பாடாண். துறை - பனுவல் வாழ்த்து.

கச. [2] நியமவுவமை என்பது இன்னதற்கு இன்னதே உவமையென்று தேற்றேகாரம் பெறத் துணிந்து சொல்லுவது:—

நேரிசை வெண்பா

வாய்மைமறை யேயினது வாய்ந்த தமிழ்மறையின்
வாய்மை தனக்கிணையாம் வாழ்த்துங்கால்—தாய்முலைப்பால்
உண்ணாத மெய்ஞ்ஞான மோங்கியமா றாகமலக்
கண்ணனே யின்னிணையாங் காண்.

இது நியமவுவமை. வாய்மை மறை - மெய் வேதம்.

திணை - வாகை. துறை - தாபதவாகை.

---

1. ''ஆற்ற உவமை ஆற்றினும் பொருளின்
ஏற்றமின் றென்னும் இன்சொல் உவமை.'' —இலக் 140.
2. ''அறிவுறின் அதனுக் கிதுவே ஒப்பென
நெறியுறப் புணர்க்கும் நியம உவமை'' —இலக். 140.

'இதுவே' என்பதால் தேற்றேகாரத்தைக் காட்டினார்.



குறளடி வஞ்சிப்பா

பைம்பொற்குன்றே பணையிளவனமுலை
அம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பனிமாமதியே பழிதீர்நன்முகங்
கொடியேதளரிடை கொண்மூவேகுழல்
ஆடரவின்பட மாமேகடிதடங்
காந்தளின்றுணை மலர்க் கவினேகையும்
பூந்தளிரன்றே புடைபெயர்மெல்லடி
மாதே,
படர்புகழ் மாறன் பராங்குசன்
றுடரிமால் வரைவளர் தோகைய தியலே.

இதுவுமது. பா - [1] பொதுச்சீர் பதினாறும் வந்து நேரிசை யாசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா. பணையிளவன முலை-பெருத்த இளைய அழகிய முலை. அரிமதருண்கண்-செவ்வரி பரந்து கண்டவர்க்கு விருப்பத்தைக் கொடுக்கும் மையுண்கண்.

பகுதி - சேட்படை. துறை - அவயவங் கூறல்.

கரு. [2] அநியமவுவமை என்பது நியமித்த உவமையை விலக்கிப் பிறிதுமோருவமை புணர்ப்பது :—

நேரிசை வெண்பா

தேன்சுவைக்கொண் டோங்குமகிழ்ச் செல்வாவின் செந்தமிழின்
வான்சுவைக்கு வான்சுவைகொள் வான்கனியே—நான்பகர்தற்
கொப்பாகக் கண்டதுமற் றுள்ளிற் சுவைதெவிட்டா
தப்பான்மைத் தானதுமொப் பாம்.

---

1. பொதுச்சீர் பதினாறுவன :
தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பவற்றுடன் தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்ணிழல் என்பவற்றை முறையே இணைத்தால் உண்டாகும் பதினாறு நாலசைச் சீர்களையும்.
2. ''இதுவே அன்றி இதனுக் கிதுபோன்
றதுவும் ஆமெனும் அநியம உவமை'' —இலக். 640.

இது அநியமவுவமை.

வண்டுகள் தேனையுண்ணும் பரிமள வகுளமாலிகையை யுடைய செல்வனே! நினது திருவாய் மொழியிலுண்டான சொல்லும் பொருளும் கேட்ட செவிக்கும் ஓதின நாவிற்கும் உற்ற உணர்விற்கும் இனிமைதரும் பெரிய இனிமைக்குப் பரமபதத்துள்ளார் மனோவாக்குக் காயங்களால் இனிமை கொள்ளும் பரமபத நாதனாகிய [1]அக்காரக்கனியே நான் சொல்லுதற் கொப்பாகக் கண்டது. அஃதன்றி வேறுவமை குறிப்பேனாகின் ஐம்பொறிகளுஞ் சுவை தெவிட்டாத திருவாய் மொழியே போலப் பண்ணும் பாடலுமாய் நடைபெறுஞ் சுருதியும் அதற்கொப்பாம் என்றவாறு. அப் பான்மைத்தானதும் என்றது சுருதியை.

துறை - பனுவல் வாழ்த்து.

௧௬. [2]புகழுவமை என்பது உவமையைப் புகழ்ந்து உவமிப்பது:—

நேரிசை வெண்பா

விண்ணோ ருயிர்தளிர்ப்பான் வேலை வா யன்றுதித்த
தண்ணா ரமிர்தந் தனைநிகர்க்கும்—பண்ணூற்
றிருந்துமறை யைத்தமிழ்செய் தேவேசன் வெற்பின்
முருந்து நகையார் மொழி.

இது புகழுவமை. பண்ணூற்றிருந்து மறை - கீத நடைத் தாய்க் குற்றமற்ற மறை; அது சாமவேதம். மறையைத் தமிழ் செய்தேவேசனென்னவே வேதந் தமிழ் செய்த பெருமான் என்னு [3]நாவீறுடைய பிரான் என்பதாயிற்று.

பகுதி - இயற்கை. துறை - புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் காதற் சிறப்புரைத்தல்.

1 அக்காரம் - கரும்பு; கருப்பஞ்சாறு; கருப்பஞ் சாற்றுக்கட்டி.
"அக்காரம் யாவரே தின்னினும் கையாதாம்"
—நாலடி. 112.

2. "நினைந்துவ மிக்கும் நிலையின் மற் றதனைப்
புனைந்துவ மிக்கும் புகழுவமை" —இலக். 640.

3. நம்மாழ்வார்.



௧௭. [1]நிந்தையுவமை என்பது உவமையை இகழ்ந்து உவமிப்பது:—

நேரிசை வெண்பா

உறைகழித்துக் கைம்மிசைக்கொண் டொண்மறவ ரோச்சின்
மிறைபுரிவே லொப்பெனினும் ஏலா—நறையூர்வாழ்
தேந்துளப மால்வரைமேற் றானே தெறுஞ்செயலால்
ஏந்திழையாள் வன்கண் ணிணை.

இது நிந்தையுவமை. ஒண்மறவர் - கொலை மேற்கொண் டொழுகும் ஒள்ளிமையுடைய மறவர். ஓச்சின் - செலவிடுக்கில். மிறை புரிவேல் - கொலையை விரும்பும் வேல்; எடுத்தெறிதலை விரும்புவார் தொழிலை வேலின்மே லேற்றியது காரண காரிய மயக்கம். மறவரோச்சுகிற் கொல்வதல்லது வன்கண்போல் தானே தெறுஞ்செயல் இன்று என்பதனால் நிந்தையுவமையாயிற்று.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - உற்றதுரைத்தல்.

௧௮. [2]மோகவுவமை என்பது ஒருபொருளின்மேல் எழுந்த வேட்கையால் அதற்கு உவமையாகக் குறிக்கப்பட்ட அதன்மேலும் வேட்கை நிகழ்ந்ததாகக் கூறுதல்:—

நேரிசை வெண்பா

அம்பவள மொன்றிருப்ப வன்புறுமா தொண்டையெனச்
செம்பதுமத் தேனேநின் செவ்வாயை—விம்பமும்நே
ராதற் கதைவிரும்பு மாழியான் கோழியூர்க்
காதற் சிறப்புடையேன் கண்.

இது மோகவுவமை.

1. "நிந்தித் தொருவன் சேர்ப்பதோர் உவமையை
நிந்தித் துரைக்கும் நிந்தை யுவமை" —இலக். 640.

2. "ஒருபொருள் மீதெழும் வேட்கையான் மயக்கம்
முறுகுதல் காட்டும் மோக வுவமை" —இலக். 640.

ஆழியான் கோழியூர்ச் செய்யபதுமத்தினிடத்து விளைந்த தேன்போலும் மொழியையுடையாய்! நினது சிவந்த வாயை அதற்கு ஒத்த அழகிய பவளம் உளதாயிருப்பவும் ஆதொண்டையை ஒப்பெனநோக்கி அன்புருகிற்கும்; அஃதன்றி அவ் ஆதொண்டை செய்ய வாயின் நிறத்தோடும் வடிவிற்கும் ஒப்பதால் அவ்வாயினையுங் காதலிக்கப்பட்ட சிறப்புடையேனோடுங் கூடிய கண்கள் அவ் ஆதொண்டையையும் விரும்பாநின்ற என்றவாறு. ஆதற்கு என்பது [1]மூன்றாவது நான்காவதாயிற்று. 'அதையும்' என்னும் உம்மை விகாரத்தால் தொக்கது. விம்பம்-வடிவம்.

பகுதி - இடந்தலை. துறை - காதற் சிறப்புரைத்தல்.

௧௯. அவயவவுவமை என்பது அவயவத்தை உவமித்து [2]அவயவியை வாளாதே கூறுவது :—

குறள் வெண்பா

மாதரிலவிதழ்போன் மாண்பிற்றே மாதவனூர்
வானோ ரருந்து மருந்து.

இதனுள் 'மாதர்' என்றது அவயவி. 'இலவிதழ்' என்றது அவயவம்.

பகுதி - இதுவுமது. துறை - நலம்புனைந்துரைத்தல். புணர்ச்சி மகிழ்தலுமாம்.

நேரிசை வெண்பா

வல்லிக் கொடிமருங்குன் மாதினுக்கு மேருமுலை
யல்லிக் கமல மனையதடி—கல்லதர்தீ
சொல்லும் பொழுதரங்கர் தொன்னகர்சேய்த் தாயிழாய்
செல்லும் படிக்கெளிதோ செப்பு.

இதுவும் அவயவவுவமை.

1. ஆதலினால் என்பது ஆதற்கு என வந்தது.
2. அவயவி - அவயவத்தையுடையது.



வல்லிக்கொடிபோலு மருங்குல்; வடமேருப்போலு முலை; அல்லியோடுங் கூடிய தாமரைபோலுந் தாள்கள்; பாலோடுங் கூடிய அதரும் அழல்போலச்சுடும். சொல்லுங்காலத்தில் அரங்கர் நகரமென்றால் நெடுந்தூரம் ஆகையால் ஆராய்ந்தணிந்த பூணினை யுடையாய்! நினது மாதினுக்கு என்னோடும் வரும்படி எளிய தொன்றல்ல என்றவாறு.

பகுதி - உடன்போக்கு. துறை - அருமையுரைத்தல்.

௨௰. அவயவியுவமை என்பது அவயவியை உவமித்து அவயவத்தை வாளாதே கூறுவது :—

நேரிசை வெண்பா

பொன்னங் கொடியனைய பொற்றொடிதன் றாட்சுவடு
மென்னன் புறத்தோன்று மிங்கிவைக—ளன்னங்
கடிக்கமலஞ் சேரரங்கர் கானிகராங் காளை
யடிச்சுவடு மாங்கவையே யாம்.

இஃது அவயவியுவமை. அரங்கர் [1]கானிகராங்காளை - அரங்கர் புதல்வனுங் காமன்போல்வானுங் காளையென்பதாம்.

பகுதி - இதுவுமது. துறை - சுவடுகண்டறிதல்.

௨௧. முற்றுவமை என்பது அவயவ அவயவிகளை ஒரு செய்யுளகத்து ஒக்க உவமிப்பது :—

வெண் கலிப்பா

பொன்னெடுங்குன் றெனச்செறிந்து புடைபரந்த புளகமுலை
மின்னெனலா நுணுகிடைய வேய்புரையுந் தடமென்றோள்
குளிர்மதிபோன் மிளிர்வதனக் கோமளப்பூங் கொம்பனா
டளிர்புரைமெல் லடிச்சுவடுந் தளர்ந்தனவெய் யோன்மன்னோ
குடதிசைவான் கதிர்சுருக்கிக் கொடித்தேரி னொடுமறைந்தான்
அடல்புனைவே டுவர்குறுகி யற்றம்பார்த் தாறலைப்பார்

1. கால் நிகராம். கால் - கால்வழியாம் புதல்வன். கான்முளை என்பதும் அது.

பொன்புனை பூண் மணிமார்பிற் புரவலவின் றிருவீரும்
நன்குலத்தெம் மில்வைகி நறுந்தேன்செந் தினையருந்தி
மரையதளிற் றுயில்வைகி வைகறைவாய்த் துயிலெழுந்து
விரைகமழ்தார் மகிழ்மாறன் மெய்த்தமிழ்ச்சொற் குருகூரின்
முதிர்திரைப்பா லாழியின்வாள் முகடுரிஞ்சு முதையகிரி
கதிர்வருமுன் சேர்தல் கடன்.

இது முற்றுவமை.

பொன்மேருவாகிய மலைகளென்னும்படி சிக்கென்று மருங் ககன்ற புளகமுலையினையும் மின்னெனத் தகுவதாம் நுண்ணிய இடையினையும் மூங்கில்போலும் பெரிய மெல்லிய தோளினையும் மதிபோல விளங்கும் முகத்தினையும் உடைத்தாய பூங்கொம் பன்னாள் தளிர்போன்ற மெல்லிய அடியிரண்டுந் தளர்ந்தன, ஆதித்தனுங் குடதிசைவாய் வானிற் இரணங்களை யொடுக்கிக் கொடியையுடைய தேரினோடு மறைந்தான்; வெற்றியையுடைய வேடுவர்கள் அற்றம் பார்த்து வழிபறிப்பர்; இனிப் பொன்னினாற் செய்த பூணினையணியு மார்பினையுடைய மன்னனே! இற்றைப் போது நீங்களிருவீரும் உத்தமகுலமாகிய எங்களில்லின்கண் வதிந்து நல்ல தேனினோடுங் கூடிய தினைமாவினையுந் துய்த்து மான்றோலில் துயிலமர்ந்து வைகறையில் துயிலெழுந்து மணங் கமழாநின்ற [1]வகுளமார்பன் மெய்த்தமிழ் பாராட்டப்பட்ட சீர்த்தியை யுடைய குருகாபுரியிடத்துப் பெருத்த திரையையுடைய திருப்பாற் கடலின்கண் வானினது உச்சியைத் தைவருங் கொடுமுடியை யுடைய உதயகிரியிற் கதிரோன் உதிக்கு முன்னம் எய்துவதே முறைமை என்றவாறு. மன்னும் ஒவும் அசை.

பகுதி - இதுவுமது. துறை - நெறிவிலக்கு. பா - வெண் கலிப்பா.

உ௨. ஏகவுவமை என்பது உவமையும் உவமேயமுந் திணை பால் முதல் சினை பெயர் வினை என்பன மயங்காது ஒன்றாயிருக்கை :—

1. நம்மாழ்வார். மெய்த்தமிழ் - திருவாய்மொழி.



**நேரிசை வெண்பா**

முற்ற வுணர்த்து முதுகாப் பியம்புணர்ப்பான்
உற்றவர்தங் கண்போன் றுறங்காவாம்—இற்பிரிந்தால்
நல்லியலார் வந்தனைசெய் நாவீறன் மால்வரைமேன்
மெல்லியலா ரின்ப விழி.

என்பது ஏகவுவமை. இதுவும் பூரணவுவமைப்பாற்படும்.

நெஞ்சமே நன்புலவர் அஞ்சலிசெய்யும் நாவீறுடைய பிரான் வண்குருகூரினிடத்து மெல்லியசாயலை யுடையார் இன்பவிழி யானது, இனி நாம் இவரை இல்லின்கண்வைத்துப் பிரிவோ மாகில் அறம்முதலிய நாற்பொருளும் மலை கடல் நாடுமுதலிய [1]பதினெட்டு வருணனையும் ஒழிந்தனவுங் குறைவின்றி உணர்த்தப் படுவனவாகும் பெருங்காப்பியம் பாடுதற்கு உட்கொண்ட புலவர் கண்போலத் துயிலொழிந்த தோடும் துன்பவிழியாம் என்றவாறு.

இது கற்பினுள் இல்வாழ்க்கை என்னும் பகுதிக்கண் பிரிந்து சேய்நாட் சென்று வந்து கூடிய தலைமகன் அவள் உறுப்புக்களை வேட்கை மிகுதியாற் புதுவது புதுவதாகப் பாராட்டத் தலைமகள் இஃதொன்றுடைத்தென அஞ்சியவழிப் புணர்ச்சியந்தியத்தும் துயிலாததைத் துயின்று துயிலொழிந்தோன் தன்கட் பிரிதற் குறிப்புளதாகக் குறித்த வேறுபாடெனக் குறிப்பானறிந்த தலை மகன் முன்னிலைப் புறமொழியாகத் தன்னெஞ்சிற்கு அவள் குறிப்பறிவுறுத்துவான்போல 'இனி நின்னிற் பிரியே'னெனப் பிரியாத தன் குறிப்பினைத் தலைமகட்கு அறிவுறுத்தல்.

கலியுள்ளும்,

"மாதில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்

1. பதினெட்டு வருணனை : மலை, கடல், நாடு, வளநகர், பருவம், கதிரோன், திங்கள் தோற்றம், மணம் புணர்தல், முடிகவித் தல், பொழிலாட்டு, புனலாட்டு, உண்டாட்டு, மக்கட்பேறு, புலவி, கலவி, மந்திரம், தூது, இகல், வெற்றி ஆகியவை.

றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுநள் கொல்லோ''

எனத் தலைமகன் புணர்ச்சியந்தியத்துக் கனவின் அரற்றியதனைத் தலைவி துயிலொழிந்திருந்து அவன் குறிப்புணர்ந்தனள் என்பதும் உணர்க.

அன்றியும் கற்பினுட் குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரத்தின்கண் வள்ளுவரும்,

''கரப்பினுங் கையிகந்த தொல்லாநின் னுண்கண்
ணுரைக்க லுறுவதொன் றுண்டு''

என்னும் குறட்பாவினுள் தலைவன் தன்பிரியாமைக் குறிப்பினைத் தலைவிக் கறிவுறுத்தவாறுங் காண்க.

இதனுள், தலைவி, 'இஃதொன் றுடைத்'தென நாணன் மடனழிந்தன்றோ வெனின்? தலைவன்கண் தலைவி [illegible]புதலால் அதுவுங் கடனாயிற்று. என்னை?

''தன்வயிற் கரத்தலு மவன்வயின் வேட்டலு
மன்ன விடங்க ளல்வழி யெல்லா
மடனொடு நிற்றல் கடனென மொழிப''

என்னும் பொருளியற் சூத்திரத்தானுணர்க.

[1]முதுகாப்பியம் புணர்ப்பான் உற்றவர்தம் கண்போன்று உறங்காவாம் என்றதனால் தோழி கூற்றன்று; தலைவன் கூற்றெனவுணர்க; என்னை?

''இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பதை முன்னம்''

என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான், பெருங்காப்பியவொழுக்கம் அறிவது பெண்டன்மைக்கு உரிமையன்மையில் உணர்க. இங்ஙனங் கூறிய இலக்கணங்கள் இறந்தவற்றிற்கும் இனிமேல் வருவனவற்றிற்கும் இலக்கணமென உணர்க.

1. முதுமை, பெருமை சுட்டியது.



௨௯. [1]மாலையுவமை என்பது ஒரு பொருட்குப் பலவுவமை வந்தால் அவை ஒன்றோடொன்று இடைவிடாது தொடர்ச்சியுடையனவாகப் புணர்த்துக் கடைக்கண் பொருளை வெளிப்படையாகக் கூட்டி முடிப்பது :—

நேரிசை வெண்பா

பாற்கடலுண் மால்போ லவன்மார்பிற் பைந்தொடிபோற்
கோற்றொடியுட் கொண்ட குணமேபோல்— நூற்கடலாய்ந்
தாமா றுணர்ந்தா ரறம்பயின்ற நாவகலாப்
பாமாறன் சொன்னதமிழ்ப் பா.

இது மாலையுவமை. அறம் - வேதம். உட்கொண்ட குணம் - கருணை.

துறை - பனுவல் வாழ்த்து.

நேரிசை வெண்பா

தென்னரங்க னுந்திச் செழுமலர்போ லம்மலருண்
மன்னு மயன்போ லயன்மனத்து—ணன்மறைபோ
னீங்கா தொருபொழிற்கண் ணோவியம்போ னின்றதொன்று
பாங்காகக் கண்டனன்வெற் பா.

இதுவுமது.

வெற்பனே! திருவரங்கேசன் உந்தித்தாமரை போலவும் அத் தாமரையுள் வைகும் பிரமனைப்போலவும் பிரமன் மனத்துட் குடிகொண்ட நல்ல சுருதிபோலவும் ஒருபொழுதும் நீக்கமின்றி நீ கூறிய பொழிற்கண் ஓவியம்போ னின்றதொரு பெண்ணுருவத்தைக் காவினது ஒருபக்கமாகக் கண்டனன் என்றவாறு. ஓவியம் போல் நின்ற தென்றான் உயிர் நின்னிடத்தும் உடல் அங்குமாக நின்ற தென்பது தோன்ற. ஒரு பக்கத்தே நின்ற தென்றான் ஆயத்தை நீங்கி நிற்பது தோன்ற.

1. ''ஒரு பொருட் குவமை ஒருங்குபல வரினவை
வருதொடர் பாயிறூஉம் மாலை யுவமை'' —இலக். 640.

பகுதி - பாங்கற்கூட்டம். துறை - பாங்கன் கண்டமை கூறல்.

௨௪. அந்தாதியுவமை என்பது ஒரு செய்யுளகத்துப் பல பொருட்குப் பலவுவமை வந்தான் முதலையுவமஞ் செய்த வுவமேயப் பொருட்பெயரினை, ஆகுபெயராதல் அன்மொழித்தொகைப் புறத்து வந்த பெயராதல் ஆக்கித் துணித்து நிறீஇ அவ்வுவமேயப் பெயரினை அந்தாதித்து உவமானப் பெயராக்கி உவமவுருபு கொடுத்துப் பின்னர் அதன் மேல்வரும் உவமேயப் பொருளோடு புணர்த்து நிகழ்த்துவது :—

நேரிசை ஆசிரியப்பா

குருமணி குயின் றபொற் குடமெனத் தகைசால்
கருமணி வடந்தோய்ந் தெழுதரு பணைமுலை ;
முலையெனப் பொடித்தா மரைமுகை முகைநெகிழ்
பொழுகுதண் ணறவென வுறுநர்நன் மார்பத்
திழுகுமான் மதமளா யெழுபுனற் சங்கணித்
துறைவளங் கெழீஇய தொன்மைசான் மரபி
னீங்கிது புவனம் யாவையுந் தழைத்தற்
கோங்கிய விராமா நுசமுனி யிருக்கை
யூங்கது தருமமோர் படிவமுற் றனைய
பாங்குறு சக்கர பாணிபேர் புனைபதி
மழைகிழித் தெழுந்தபொன் மாளிகைச் சூளிகைத்
தழைதுகிற் கொடித்திர டாமவெண் மதியகட்
டுறுமறுத் துடைத்துவா னெறீஇ நுடங் கூங்குது
முருகார் மொய்ம்மகிழ் மாறன்
குருகா புரியெனக் கூறுநன் னகரே.

இது அந்தாதியுவமை. இதனுள், 'பணைமுலை' என்பது பணைத்த முலையினையுடையாள் என வினைத்தொகைப் புறத்து வந்த அன்மொழித்தொகைப் பெயராய் அண்மைவிளியேற்றுத் துணித்து நிறீஇயவாறும் முலையென வருபெயரினை உவமானப் பெயராக்கி, உவமவுருபு கொடுத்து, பின்னர் அதன் மேல்வருந் தாமரை முகையென்னும் உவமேயப் பொருளோடும் புணர்த்ததும் காண்க. முகைநெகிழ்பு-முகைநெகிழ்ந்து. ஒழுகுதண்ணறவென -



ஒழுகு தண்ணறவுபோல. உறுநர் - தன்னிடத்திலே பரிசிப்பார். இழுகு மான்மதம் - பூசுங் கத்தூரி. அளாயெழுபுனற் சங்கணித் துறை-கலந்தோடும் புனலையுடைய திருச்சங்கணித்துறை. 'ஈங்கிது' என்றது தமக்கு முன்னுள்ள இடத்தை. 'ஆங்கது' என்றது தமக்குச் சேய்த்தான இடத்தை. ஊங்குது என்றது இரண்டிற்கும் நடுவான இடத்தை. தாமவெண்மதி - ஒளியையுடைய மதி. ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

அஃதேல்,

"அடுக்கிய தோற்றம் விடுதல் பண்பே"

எனத் தொல்காப்பியனார் இதனைக் கூறி மறுக்கவும் இங்ஙனங் கூறுமது மாறுகொளக் கூறலென்னும் குற்றமாம் பிறவெனின்? ஆகாது; என்னை? அஃதொரு பொருளோடு ஒரு பொருளை உவமித்து அதற்குவமவுருபு கொடுத்துப் பிறிதொரு பொருளை உவமித்தல். அதற்குச் செய்யுள் :—

"மதியத்தன்ன வாண்முகம் போலும்
பொதியவிழ்தாமரைப் புதுப்பூம் பொய்கை"

என்பது. மதியத்தன்ன வாண்முகத்தை யொக்கும் தாமரை என்றமையின் அவை ஒன்றினோடொன்று பொருந்தாதென்பது கருதி மறுத்தார், இஃதன்னதன்று. என்னை? கருமணிவடந் தோய்ந்தெழுதரு பணைமுலையினை யுடையாயெனத் துணித்துக் கூறினமையான் என்றுணர்க.

[1]"ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கினள் குறங்கென
மால்வரை யொழுகிய வாழைவாழைப் பூவென"

என்பதுபோலக் கூறினாரென்க.

---

1. சிறுபாண். 19 - 21.

"(இஃது) 'அடுக்கிய தோற்றம்' எனப்படாதோ எனின் படாதன்றே; யானைக்கைபோலும் குறங்கு, குறங்குபோலும் வாழையென அடுக்கிச் சொல்லாது குறங்கினையுடையாள் என்று துணித்துக் கூறிய பின்னர்க் குறங்கென மால்வரை ஒழுகிய வாழை என்றான் ஆதலின் என்பது"
—தொல். உவம. 36. பேரா.

பகுதி - உடன்போக்கு. துறை - பதிபரிசுரைத்தல். பா - நேரிசையாசிரியப்பா.

உ-ம். [1]பொது நீங்குவமை என்பது உவமையைக் குறிப்பினானுதல் வெளிப்படையானுதல் கூறி மறுத்துப் பொருள் தன்னையே பொருட்கு உவமையாக்கி உரைப்பது :—

நேரிசை வெண்பா

முற்குணத்தான் மாதர் முலைப்பா லருந்தாத
நற்குணத்தால் வேதமொரு நான்கினையுஞ்—சிற்குணத்தால்
ஓதா துணர்ந்துணர்த்து மூத்தமமா றற்கிணையார்
மீதார் மனனே விளம்பு.

இது குறிப்பால் வந்த பொதுநீங்குவமை. இதனுள், 'மனனே விளம்'பென்பது மரபுவழுவமைதி; என்னை? நாவாகிய பொறியினது இரியையை அந்தக்கரணத்தின் மேலேற்றி அதனைக் கூறுக என்பதனால். நாவாகிய பொறிக்குச் சொற்கேளாத்தலுஞ் சுவையறிதலுமாகிய இருதிறத்தனவாம். அவை யிரண்டும் அந்தக்கரணங்கள் கூடாதே யதற்குங் கூடாது ஆதலால் அதனை அங்ஙனங் கூறப்பட்டது.

திணை - பாடாண். துறை :

"அமரர்கள் முடியுமறுவகை யானும்"

என்பதனுள் முனிவர் வாழ்த்து.

நேரிசை வெண்பா

[2]வாரியைமொண் டுண்டோன் வசிட்டன் முதலாய
சிரியரின் ஞானஞ் செறிந்ததாற்—[3]காரிதருஞ்

---

1. "ஒருதலை யாக உவமையை மறுத்துப்
பொருளையே உவமைசெய் பொதுநீங் குவமை"
—இலக். 640.

2. அகத்தியன்.

3. நம்மாழ்வார் தந்தையார் காரியார்; தாயார் உடைய நங்கையார்.



சேயே யுடையநங்கை [1]செம்முலைப்பா லுண்ணுதாய்
நீயே யினக்கு நிகர்.

இது வெளிப்படையாய் வந்த பொதுநீங்குவமை.

துறை - இதுவுமது.

ஆகப் பல பொருளுவமை முதற் பொதுநீங்குவமை யீருக உவமை விரி இருபத்தைந்தும் அடைவே காண்க. (௧௬)

17. சிறப்பினும் வரூஉந் திறமுமொன் றுளதே.

எ - ன். இஃது உவம விரியுள் ஓதாததாக ஒழிந்த தொன்றுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) ஒரு பொருளைப் பிறிதொரு பொருளாகச் சிறப்பித்துச் சொல்லுமிடத்துளவாய் வரூஉங் கூறுபாடும் ஒன்றுளது என்றவாறு. சிறப்பென்பது ஒரு பொருளையெடுத்ததற்குச் சிறந்த பல அடைகளையும் உவமித்து அவற்றானே உவமையாக்கி உரைப்பது.

நேரிசை ஆசிரியப்பா

நுண்டுகிற் கொடிகள் நுடங்குபு வளங்கெழு
வெண்பொன் மாளிகைசுலாம் வீதிதெண் டிரையெழூம்
பாற்கடற் பரப்பதாய் வரிபல பயின்மதிண்
மேற்பட நிவந்து விளங்கு கோபுர
மைவாய்ச் சேடன் மண்டலீத் தனனாகிப்
பைவாய்த் தலைநிமிர் பான்மைய வாகக்
கருங்கடன் மொண்டெழுங் கருகிக் கார்மழை
யொருங்கத னனந்தலை யுறப்படிந் ததொடு
மோங்குபொற் கம்பத் துச்சிமே லதனெளி

---

1. "மூத்தனைய முறுவல்செய்து மூக்குறுஞ்சி
முலையுணுதே மௌனத்தோ
டிருந்தும் வாட்டமின்றிக்கே
பரிபூர்ணராயிருக்கிற குழந்தை"
—நம்மாழ்வார் வைபவம்.

பாங்குற வுச்சியிற் பதிதரு பானு
யோகவித் திரைகொளு முரவோ னுந்தியி
னேகதாட் டாமரைப் பொகுட்டிறை வனைவிகர்
சினகரக் குருகா புரியினுட் செவ்வியி
னனவர தமுஞ்சரா சரங்க ளாக
வுதிக்குமன் னுயிர்களை யுவந்தே
துதிப்பர்வித் தியரெனத் துறவு ளோரே.

இது சிறப்புவமை.

திணை - இதுவுமது. துறை - [1]சினகர வாழ்த்து. (௧௭)

18. அடையொடு பொருட்கடை புணர்க்குமஃ திரட்டை.

எ - ன். இதுவும் விரியுள் ஓதாத ஓழிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடையடுத்த முக்கியப் பொருட்கு ஒப்புமை கூறும் ஒப்புமைப் பொருளிடத்து முக்கியப் பொருளின் அடை புலப்படப் புணர்ப்பதும் இரட்டை உவமையாம் என்றவாறு. 'புணர்ப்பதும்' என்னும் உம்மையால் ஒற்றைக் கிளவியும் இரட்டைக் கிளவி வழித்தாகி வருவன கொள்க; என்னை?

"இரட்டைக் கிளவி யிரட்டை வழித்தே''

என்றாராகலின். உவமை யென்பது [2]அதிகாரத்தாற் பெற்றது.

கட்டளைக் கலித்துறை

நறைமல் கியகொழுங் காவியைப் போனள் ளிரவினுநீ
டுறைமல் கியகண் டுயிலாமை யன்பர்க் குரைக்கிலநான்
மறைமல் கியசெந் தமிழ்மாறன் வண்குரு கூர்ப்பொருநைத்
துறைமல்கு சேவற் சிறையிறை நீங்கிற் றுயரன்னமே.

இஃதிரட்டை யுவமை; நறை மல்கிய காவிபோல் உறை மல்கிய கண் ணென்பதாலறிக. மல்குதல் - பெருகுதல். உறை -

1. கோயில்.
2. வரன்முறை.



துளி. இறை நீங்கில் - சிறிது நீங்கில். துயரன்னம் - துன்புறு மன்னம்.

பகுதி - ஒருவழித்தணத்தல். துறை [1]ஓதிமப் பெடையோடடி யுரைத்தல்.

கட்டளைக் கலித்துறை

ஊனா றியவிரு கோட்டொரு மாவை யுறுபுனல்வன்
மீனூறு செய்வதைத் தீர்த்த பிரான்வட வேங்கடத்திற்
றேனா றிலவித ழைக்கண்ட போழ்திலென் சிந்தையும்பர்
வானூர் மதிமுகத் தாளித ழாக மதித்திடுமே.

இஃது [2]ஒற்றைக் கிளவி இரட்டை வழித்தாய் வந்த உவமை; இதனுள், தேனாறிலவின் மலரைக் கண்டபோழ்து எனக் கூறிய வழிப் பானமூறும் இதழ் என்னாதே இதழென ஒற்றைக் கிளவியாய்க் கூறினமையான் என்றுணர்க. பின்னர் வந்தவிதழ்-அதரம். உம்பர் வானூர் மதிமுகத்தாள் என்பதன்கண்ணும் இவ்வுவமை வந்தவாறு காண்க. அது,

[3]"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை''

என்னுங் குறுந்தொகைப் பாட்டினுங் காண்க. முன்னர் வந்ததற்கும்,

[4]"பொன்காண் கட்டளை கடுப்பச் *சண்பின்—புன்காய்ச்
சுண்ணம் படைத்த மார்பின்''

என்பதனுட் காண்க.

* பா. வே. கண்பின்.
1. பெட்டையன்னம்.
2. ஒற்றைக்கிளவி - இதழ். இஃது இலவிதழ், மாதரிதழ் ஆகிய இரண்டையும் குறிக்கும் ஒற்றைக்கிளவி.
3. குறுந். 47. "இரும்புலிக் குருளை என்றதனையே துறுகல்லோடும் வேங்கைவீயோடும் ஒப்பித்தமையின்'' இப்பெயர்த்து (ஒற்றைக் கிளவி இரட்டை வழித்தாகி வருவது) ஆயிற்று. தொல். உவம. 22 பேர்.
4. பெரும்பாண். 220 - 21. முன்னர் வந்தது இரட்டையுவமை.

பகுதி - இடந்தலை. துறை - புனங்கண்டு மகிழ்தல். (கஅ)

19. உவமையு முருபுந் தொடர்வழிப் பிறிதுமொன்
றுவமே யப்பொருட் கடைபுணர்ப் பதுமுள.

எ - ன். இதுவும் எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) ஒப்புடைப் பொருளொடு புணர்ந்த உவமவுருபிற்குப் பின்னாகப் பிறிதுமோர் ஒப்புடைப் பொருண் முக்கியப் பொருட் கடையாக முன்னோரால் புணர்க்கப்பட்டு வருவதும் உளவென்றவாறு. இஃதிலக்கியங் கண்டதற்கு இலக்கணம் கூறிய தெனவுணர்க.

நேரிசை வெண்பா

அம்பனைய வேற்கண் ணணங்கா லறிவழிந்த
திம்பருனக் கெய்தியதா லெவ்வுளா—னும்பரெலாம்
போற்ற வருண்மாலைப் போற்றூர்போ லாயினையுநன்
மாற்றமிதற் கென்னுரைக்கேன் மற்று.

அம்பனைய வேற்கண் ணென்றவழி உவமப் பொருளினது உருபின் பின்னர் வேற்கண்ணென வந்தவாறு காண்க. இதற்கு முன்னோர் கூறிய இலக்கியமாகக் கண்டன யாவையோ வெனின்?

"துப்புறழ் தொண்டைச் செவ்வாய்"

எனத் திருத்தக்க மாமுனிகள் கூறிய சிந்தாமணியினும் (107,550),

---

"ஆம்பனாறுந் தேம்பொதி நறுவிரைத்—தாமரைச் செவ்வாய்"

என்புழி,

"தேம்பொதிநறுவிரை யாம்பனாறுந் தாமரைச் செவ்வாய்"

என இளங்கோவடிகள் பாடிய அந்திமாலைச் சிறப்புச்செய் காதையினுங் கண்டவை யென்றுணர்க. 'இம்பருனக்கும்' என்னும் உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - பாங்கன் கழறல். (கக)



20. மரபினும் வருவதோர் மரபுடைத் தென்ப.

எ - ன். இதுவும் எய்தாத தெய்துவித்தது. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் கூறலுமாம்.

(இ - ள்.) ஒரு [1]தொடர்பினுள் ஒரு பொருட்காதல் பல பொருட்காதல் உவமை கூறுமிடத்து உவமப் பொருள் ஒரு குழுவினுள் ஒரு மரபாகப் பல வுவமம் வருவது மரபுவமையாம் இலக்கணத்தை யுடைத்தென்று கூறுவர் சான்றோர் என்றவாறு.

நேரிசை வெண்பா

செந்தா மரைவதனஞ் சேதாம்பல் வாய்நயனம்
நந்தாத செங்குவளை நாடுங்கால்—கொந்தார்
வகுளம் புனைவார் வரைமயிற்குக் கஞ்ச
முகுளம் புணர்மா முலை.

இது மரபுவமை; என்னை? கோடு, கொடி, நீர், நிலம் என்னும் நால்வகைப் பூக்களுள் நீர்ப் பூவாகிய குழுவுள் செம்மை யென்னும் ஓரிலக்கணத்தனவாந் தாமரை ஆம்பல் குவளை என்னும் மூன்றினையும் முகம், வாய், நயனம், முலையென நான்கிற்கு மரபு பொருந்துவனவாக உவமம் புணர்த்தலினெனக் கொள்க. இதற்கிலக்கியம் கண்டதாவது,

"கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு"

(நாலடி. 216) என்பதனுள் ஓரினத்தனவாகிய [2]புறக்காழ்ப் புன்மரமே கூறி யொழிந்த மரங்கள் ஒப்பன உளவாயினுங் கூறாராயினாராதலான் மரபுவமையாம் என உணர்க.

துறை - இயல்பிடங் கூறல். (உ0)

---

1. செய்யுளுள்,
"யாப்பும் பாட்டுந் தூக்கும் தொடர்பும்
செய்யுளை நோக் கிற்றென்ப நுணங்கி யோரே"
—யா. கா. 1 மேற்
2. "புறக்காழனவே புல்லென மொழிப" —தொல். மரபு. 85

21. ஒத்தது வென்றதென் றொருபொருட் குவமை
வைத்தன வாயொரு தொடர்பினும் வருமே.

எ - ன். இதுவும் எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) ஒரு பொருட்கு உவமை கூறுமிடத்து ஒரு பொருளை ஒத்தது ஒரு பொருளை வென்றது என்றிரு பொருளைக் குறித்தனவாய் ஒரு செய்யுளகத்து வருவனவும் உவம இலக்கணத்திற்குக் கூடியும் நீங்கியும் வருமென்றவாறு :—

நேரிசை வெண்பா

கூற்றுவன்வேல் போன்று குகன்வேலை வென்றுகொலை
யாற்றலுறும் வன்கண் ணமர்விளைப்பத்—தோற்றமுறுங்
கொல்லிப்பா வைக்கிணையாய் நின்றதெவன் கோகனக
வல்லிப்பா வைக்கிணையா வாய்.

இஃது ஒத்தது வென்றதென்றல். ஆற்றல் - பெருமை. தோற்றம் - பொலிவு. கொல்லிப்பாவை - காமுகரைக் கொல்லும் பாவை. கோகனக வல்லிப்பாவை - திருமகள்.

பகுதி - இயற்கை. துறை - இரந்துபின்னிற்றல்.

நேரிசை வெண்பா

தெண்ணறவை வென்றுதிரைத் தெள்ளமிர்தை யொத்தமொழிப்
பெண்ணரசே மாதவன்றென் பேரைவாய்த்—தண்ணறும்பூக்
கொய்யாம லாயமுடன் கூடாம லூசலிற்றாள்
வையாம னின்றதென்னோ மற்று.

இது வென்றதொத்த தென்றல்.

பகுதி - இதுவுமது. துறை - முன்னிலை யாக்கல். (உக)

22. ஏது நுதலிய முதுமொழி யினும்வரும்.

எ - ன். விரியுவமையினுள் இன்னுமோர் ஒழிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வுவமை ஏதுப்பொருளைக் குறித்து முடித்தற்குப் பிறிதொரு பழமொழியினும் வருமென்றவாறு :—



நேரிசை வெண்பா

பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்ப்பதுபோ
லாம்புகழ்மால் கச்சி யணிவரைவா—யாம்பகட்டா
லோடத் துணிந்தளித்தா னுய்த்தநோய்க் கின்றுவெறி
யாடத் துணிந்தா னறிவு.

இது ஏதுநுதலிய முதுமொழியுவமை ; என்னை ?

"நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப"

(தொல். செய். 177) என்றாராகலின். இதனுட் குறித்த பொருண் முன்னரொரு [1]முதுமொழியினை வைத்துப் பின்னர்த் தான்குறித்த பொருளை வெளிப்படையாக வைத்தமையான் எனவுணர்க.

'பகட்டாலோடத் துணிந்தளித்தான்' என்பது யானையைக் கண்டு யாங்கள் பயந்தோடாநிற்ப அவ்வியானையையும் பொருதற்குத் துணிந்து இவளுயிரைத் தந்தானென்க. உய்த்த நோய்க்கு - தந்தநோய்க்கு. வெறியாடத்துணிந்தான் என்பது இகழ்ச்சிக்குறிப்பு. அறிவென்றது ஈண்டறியாமை.

[2]"உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்றால்—வழுதியைக்

1. முதுமொழி - பழமொழி. "பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்த்தல்" என்பது.

2 "வழுதியைக் கண்டகண் இருப்பத்தோள் பசந்தன என்றக்கால் ஒன்றன் வினைப்பயன் ஒன்று நுகர்ந்த தென்புழிக் குறித்த பொருள் இயைபின்மை கூறுதலாயிற்று. அதனைச் சொற்றொடர் இனிது விளக்கிற்று அன்றாயினும் முற்கூறிய முதுமொழி முடித்தது என்பது. என்னை ? அதன் கண்ணே அது முடித்தற்கு ஏதுவாகிய இயைபின்மை கிடந்தமையின் என்பது. இது பருப்பொருட்டன்றி நுண்ணிதாகிச் சொற்சுருக்க முடைத்தாய் விழுமிதாகி எளிதிற் பொருள் தோன்றியவாறு கண்டு கொள்க."

—தொல். செய். 177 பேரா.

*கண்டன, கண்கள் இருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னே பசப்பு''

என்பதுமிது.

துறை - வெறிவிலக்கு. (உஉ)

## 23 பிசியினும் புலப்படும் பெற்றிய தாகும்.

எ - ன். இதன் முன்னர் விரியுவமையின் ஒழிபுகூறி இதனுள் தொகையுவமையினது ஒழிபுணர்த்துதல் நுதலிற்று. அஃதாவது உவமேயப் பொருட்குள்ள சினை வினை சார்பு முதலியன உவமப் பொருட்கண் இல்லையாயினும் அவற்றை அதனொடு சார்த்தி உவமப் பொருள் ஒன்றினையுங்கூற உவமேயப்பொருளும் ஏதுவும் உவமவுருபும் விரிந்து புலப்படுதலாம்.

### நேரிசை வெண்பா

வருங்குன் றினைக்கடிந் தெம் மன்னுயிரைத் தந்தா
னிருங்கங் கணக்குன் றிருப்பப்—பெருந்தகைசால்
செந்தமிழ்மா றன்சிலம்பிற் சேய்நீ நடித்தருந்த
வந்ததையா னேதடுப்பேன் மற்று.

இஃது ஒப்பொடு புணர்ந்த உவமத்தானுஞ் சார்பினாலும் வந்த பிசியுவமை; என்னை ?

[1]''ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே''

---

* பா - வே. கண்டன கண்ணீர் உகுப்பப்.

1. பிசி வகைக்குப் பேராசிரியர் உரைக்குமாறு :

'பிறைகவ்வி மலை நடக்கும்' என்பது ஒப்பொடு புணர்ந்த உவமம். இஃது யானையென்றுவது.

''முத்துப்போற் பூத்து முதிரிற் களாவண்ண
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு—வித்துதிர்த்து''

என்பதும் அது. இது கமுகின்மேற்று.

''நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடு நீரிற்காக் கை''

என்பது தோன்றுவது கிளந்த துணிவினான் வந்தது. இது நெருப் பென்றுவது.



(தொல். செய். 176) என்றாராகலின். இதனுள் 'வருங்குன்றினை' என்றது யானையை எனவும், 'இருங்கங்கணக்குன்று' என்றது சார்போடுந் தோளினை எனவும் வினையானும் வடிவானும் சார்பானும் உவமவுருபு முதலியனவும் உவமேயப் பொருளும் புலப்படுவதாயிற்று. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க.

பகுதி - இதுவுமது. துறை - களிற்றிடையுதவிக்கு அறத்தொடு நிற்றல். (உ௩)

## 24. முக்கியப் பொருட்கு முக்கியப் பொருளுவமை
## புணர்ப்பது முதன்மைப் புலனெறி வழக்கே.

எ - ன். இதுவும் ஒருவகையாம் ஒழிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமேயப்பொருட்கு உவமேயப்பொருள்களை உவமமும் பொருளுமாக்கிச் செய்யுளகத்து உரைப்பனவும் புலவராற்று வழக்கமாம் என்றவாறு. இஃது இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் கூறல்.

### நேரிசை வெண்பா

ஈதரனே முத்தனெனுந் தேற்றமுறச் சிந்தையினுட்
பேதைமைபோ லற்ற பிறர்நசையும்—பாதகமாம்
பொன்று வழுக்கா றெனப்போ யதுபுலமைக்
கொன்றுப் புறங்கூற லும்.

என்பது, நெஞ்சமே நாம் சிமந்நாராயணனே அகிலாண்ட கோடி பிரமாண்டங்களையுஞ் சத்தாவரணங்களையும் பிரகிருதியையும் கடந்து மேலாய [1]விரசைக்கக்கரையா முத்தியைத் தருதற்குரியன் என்பது ஆரியனாலுணர்ந்து அறிவுபிறந்த பினனர் நம்மிடத்து முன்பு நின்ற அறியாமைபோல அகன்றது; ஒழிந்த அரன் அயன் என்னும் இருவரைப் பற்றின பசையும்; அதுவுமன்றிப் பாதகத்திற்கு ஏதுவாம் அழுக்காறு அகன்றதுபோ லகன்றது; அறிவிற்குப் பொருந்தாப் புறங்கூறலும் ஆதலால் இனி நாம் ஈடேறினேம் என்றவாறாயிற்று.

---

1. விரசை - வைகுண்டத்திலுள்ளதெனக் கூறப்பெறும் ஓராறு.

திணை - பொதுவியல். துறை - [1]முதுகாஞ்சி.

எதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு இலக்கியம்,

[2]"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்"

என்பதனாலறி. (உச)

**25.** உருவகம் நிரனிறை அதிசயம் சிலேடை
தற்குணம் தற்குறிப் பற்புதம் விரோதம்
ஒப்புமைக் கூட்டம் ஏது விலக்குடன்
மெய்ப்பட விரவு மேதக வுடைத்தே.

எ - ன். அவ்வுவமையலங்காரம் பிற அலங்காரங்களோடும் கூடிவருமாறு கூறுகின்றது.

(இ - ள்.) உருவகம் முதலாக விலக்கீறாக மேற்கூறப்படும் பதினோரலங்காரங்களுடன் விரவிவரும் அவ்வுவமையலங்காரம் என்றவாறு. மெய்ப்பட விரவும்-பொருள்பெற விரவும் என்பதாம். மேதகவுடைத்து - பெருமையுடைத்து. (உரு)

**26.** இவைதத் தமவிலக் கணங்களிற் றிறம்பா
துவமைச் சொற்புணர்ந் திறினஃ துவமை.

எ - ன். இஃது அவ்வுவமையலங்காரம் பிற அலங்காரங்களோடும் கூடி வருவதற்கு ஓர் அறிகுறியுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இவை பதினோரலங்காரமும் தனக்குத் தனக்கு விதித்த இலக்கணங்களிற் குன்றாது உவமவுருபுடனே கூடி உவமையாந் தன்மைபெற முடியுமாயின் அவற்றை யவ்வவ் பெயரானே உவமை என்று பெயர்கொடுத்து வழங்கப்பெறும் என்றவாறு.

---

1. முதுகாஞ்சியாவது மேலாய் வரும் பொருளைத் தக்கபடி அறிவித்து நிலை யில்லாமையை முறைப்படச் சொல்லியது.
—புறப். 273.

2. இழிவறிந்துண்பான் என்பதும், கழிபேரிரையான் என்பதும் எதிர்மறைகள்.



### நேரிசை வெண்பா

பூந்தண் வகுளா பரணன் புயசைலம்
வாய்ந்த வருவி வரைமானும்—பாய்ந்ததிரை
தங்கொலிநீர் வையந் தனைச்சூ ழிருடுரத்தும்
பொங்கொளிசேர் முத்தவடம் பூண்டு.

இஃது உருவகவுவமை. இதனை முதனூல் செய்த தண்டியாசிரியர் உருவகத்தின்கண் உவமையுருவகம் என்றார். அதற்குக் காட்டிய,

"மதுமகிழ்ந்த மாதர் வதன மதிய
முதய மதியமே யொக்கும்"

என்ற செய்யுளகத்து உருவகவாய்பாடாக வந்து உவமவுருபோடு இறுதலின் அது பொருந்தாது. ஆதலான் இவர் அதனை உவமையில் உருவகவுவமை என்று பெயர் கொடுத்ததே [1]பொருத்தமென்றறிக.

பூந்தண் வகுளாபரணன் - பொலிவினையுங் குளிர்மையையு முடைய மகிழமாலிகையை ஆபரணமாகவுடைய மாறன். புயசைலம் - திருப்புயங்களாகியமலை. வாய்ந்த - புலப்படுவதான. அருவிவரைமானும் - நீரருவியோடு கூடிய வரையையொக்கும். பாய்ந்ததிரை - பரந்ததிரை. [2]புயசைலம்-முத்துவடம் பூண்டதால் நீரருவியுடன் கூடிய மலையை யொக்குமெனக் கூட்டுக.

திணை - பாடாண். துறை - புயவருணனை.

### குறள் வெண்பா

[3]மலைமதிதேன் மாறன் வரைவேல் விழியாண்
முலைவதன நண்பா மொழி.

---

1. சிறப்புப் பெயர் முன்வரப் பொதுப்பெயர் பின் வருதலே முறைமை ஆகலின் அவ்வகையே வகை என்க. பலபொருள் உவமை, ஒரு பொருள் உவமை - முதலாக வருவன காண்க. ஆகலின் உவமை உருவகம் என்பதனினும் இவர் கூறியாங்கு உருவக உவமை எனக் கோடலே முறைமையாம்.

2. "நெடியோன் மார்பில் ஆரம் போல
வீங்குநீர் அருவி வேங்கடம்"
—சிலம்பு.

3. மலை முலை, மதி வதனம், தேன்மொழி என இயைக்க.

இது நிரனிறையுவமை.

பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங் கூறல்.

### நேரிசை வெண்பா

[1]புருவ நயனம் பொருசிலைவேல் போன்ற
திருமகணின் ஞேடுவரிற் செல்வா!—கருவிளைமென்
பூநீ னிறமாயன் புட்குழிசூழ் வாசமலர்க்
காநீர்த் தடமாங் கடம்.

இதுவுமது. இவையிரண்டும் பெயரொடுபெயர் நிரனிறையுவமை. வாசமலர்க்கா நீர்த்தடமாம் - பரிமளமலர்ச்சோலையும் வாவியும்போலக் குளிர்மையையுடையவாம்; கடம்-சுரமென்றவாறு. நின்ஞெடுவருகில் அவளுக்கெனக் கூட்டுக. ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

பகுதி - உடன்போக்கு. துறை - ஆதாங்கூறல்.

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

காரு லாவிய கொழும்பொன் மணிமாட
வெயிற்பி ழம்பு கதுவ நாளு
மேரு மால்வரை யெனவே பொலிந்த
பனிவரைக் குலங்கள் வேலை நீர்சூழ்
பாரு மாடக நகரிற் சிறந்த
விறன்மதன் மகுட பந்தி மானும்
வாரு லாமுகிழ் முலைமங் கையரு
மலைமகன் குழுவின் வாழ்வார் மன்ஞே.

என்பது குணவதிசயவுவமை.

திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து. (குருகா மான்மியம்).

### நேரிசை வெண்பா

வார்செறிந்து கல்லார மன்னியக லத்தவாய்த்
தார்செறிந்த வல்லியெழு தற்கிடமாஞ்—சீர்செறிந்த

1. புருவம் பொருசிலை; நயனம் வேல் என இயைக்க.



நற்றிருமால் வைகியதென் ஞகைத் தடமானும்
முற்றிழையாண் முற்று முலை.

இது செம்மொழிச் சிலேடையுவமை.

தடத்திற்கும் தனத்திற்கும் சிலேடை

தண்ணீர்பொருந்திச் செங்கழுநீரோடுங் கூடி இடமகன்றதாய்ப் பூநெருங்கின வல்லிக்கொடிகள் தோன்றுதற்கு ஆகரமாம் தடத்தையொக்கும், கச்சினதகத்தடங்கி மாணிக்கப்பூணிலை பெற்று மார்பிடத்தவாய் ஒழுங்குசேர்ந்த தொய்யிலெழுதுதற்கு இடம்பெற்றன முற்றிழையாள் இளமுலையென்றவாறு. பொலிவு குடிகொண்ட நல்ல திருமால் வைகும் அழகிய திருநாகைத் தடத்தை எனக் கூட்டுக.

தடத்தின்மேற் சொல்லுங்கால், வார்-தண்ணீர். செறிதல்-பொருந்துதல். கல்லாரம் - செங்கழுநீர். மன்னி - கூடி. தார் - பூ. செறிதல் - நெருங்குதல். வல்லி - கொடி. எழுதல் - தோன்றுதல். இடமாம் - ஆகரமாம்.

தனத்தின்மேற் சொல்லுங்கால், வார் - கச்சு. செறிதல் - அடங்குதல். கல்லாரம் - மாணிக்கப்பூண். மன்னி - நிலைபெற்று. அகலம் - மார்பு. தார் - ஒழுங்கு. செறிதல் - சேர்தல். எழுதல் - எழுதுதல். இடமாம் - இடம் பெற்றதாம் என்க.

பகுதி - பாங்கற்கூட்டம். துறை - செவ்விசெப்பல்.

பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தலுமாம்.

### நேரிசை வெண்பா

மான்மதங்கூர் வெங்களப மட்டிக்க மைந்துளவாய்க்
கானிலவா வாரவிழல் கைக்கொண்ட—ஞானமுனி
செஞ்சொற் றமிழ்மலைய மேபோலுஞ் சீதரன்வாழ்
தஞ்சைத் திருமான் தனம்.

இது பிரிமொழிச் சிலேடையுவமை.

இது மலையத்திற்கும் தனத்திற்கும் சிலேடை.

மயக்கத்தைத் தருங் கடமுண்டான வெம்மையைச் செய்யும் யானையும், பூவிற்றேனும் [1]வைத்த தேனும் நிறைந்துளவாய்க் காடாய் இலவும் ஆச்சாவும் சேர்ந்த மலைப்பக்கங்கள் குளிர்மையைத் தன்னிடத்துக்கொண்ட [2]தமிழ்மலையை யொக்கும், கத்தூரிமிகுந்த விருப்பத்தைத்தருஞ் சந்தனச் சேற்றைப் பூசப் புளகித் திறுகிய வலியை யுடையவாய்ப் பரிமளநிலைபெற்று முத்தி னொளியைத் தன்னிடத்துக்கொண்ட புனமான்போலும் விழியை யுடையாள் தனம் என்றவாறு.

'ஞானமுனி, செஞ்சொற் றமிழ்மலையை' எனவுஞ் 'சீதரன் வாழ் தஞ்சைத் திருமான் தனம்' எனவும் முன்னும் பின்னுங் கூட்டுக. கூர் வெங்களபம் - வினைத்தொகை. ஏகாரம் - அசை.

பொதியத்தின்மேற் சொல்லுங்கால், மால் - மயக்கம். மதம் - கடாம். கூர்-உண்டான. வெம்மை-வெப்பம். களபம்-யானை. மட்டு - பூவிற்றேன. இக்கு - வைத்த தேன் ;

"தேன், றுளியோடு மதுத்துளி"

யென்றார் சிந்தாமணியினும். அமைதல் - நிறைதல். உளவாய் - உண்டாய். கான் - காடு. இல்வு - இலவமரம். ஆ - ஆச்சா மரம். வாரம் - பக்கம். நிழல் - குளிர்மை.

முலைமேற் சொல்லுங்கால், மான்மதம் - கத்தூரி. கூர்தல் - மிகுதல். வெம்மை - விருப்பம். களபம் - சந்தனச்சேறு. மட்டித்தல் - பூசுதல். மைந்து - வலி. கான் - பரிமளம். நிலவா - நிலைபெற்று. ஆரம் - முத்துவடம். நிழல் - ஒளி. கைக்கொண்ட வென்பது [3]இருதலைக்குமொருபொருள்.

பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

### நேரிசை வெண்பா

கடுக்கற் றறைவளத்தி னன்பொருள்க ளெல்லா
மிடுக்கற் றுதவு மியல்சான்—றொடுக்கமற
வேய்ந்த மலைய மெனவளர்கின் றுன்பரன்சீ
ராய்ந்த தமிழ்மகிழ்மா றன்.

இருவகைச் சிலேடையும் விரவி இரண்டுபொருளைக் கவிநாயகனுக்கு உவமையாக்கி அவற்றை இரட்டுறமொழிந்து மூன்றாவது கவிநாயகன் மேலுஞ் சிலேடை செல்வதாக அவனும் அவைபோலிருந்தானென்னு மூன்று பொருள் பயந்த சிலேடையுவமை. இது பொதியத்திற்கும் கடலுக்கும் காரிமாறப் பிரானுக்கும் சிலேடையுவமை.

அசைவற்றுப் பக்கப்பாறைகளின் வளத்தோடுங் கூடி நல்ல பொருள்களையெல்லாங் குறைவற்றளிக்கும் இயல்பமைந்து அழிவின்றித் தகுதியடைந்த பொதியமலை ஒப்பெனவும் தழையா நின்றனன், மத்திமம் பாராகிய தறைவளத்தோடுங் கூடி நல்ல பொருள்களை எல்லாம் குறைவற அளிக்கும் இயல்பமைந்து அழிவின்றித் தகவடைந்து அழகிய அலையையுடைய கடலை ஒப்பெனவும் தழையா நின்றனன், அவன் யாரெனில் உண்மை நூல்களை ஓதாதுணர்ந்து பிறர்க்குணர்த்தும் வளத்தினோடுங்கூடி நல்ல பொருள்களை எல்லாங் குறைவற அளிக்குந் தகுதியடைந்து பரத்துவ சொரூப ரூபகுண விபூதியாகிய பொலிவினையாராய்ந்த திருவாய்மொழி யென்னுந் தமிழையுடைய திரு மகிழ்மாறன் என்றவாறு.

மலையத்தின்மேற் சொல்லுங்கால், நடுக்கு-அசைவு. அற்று - இன்றி. அறை - பாறை. வளத்தின் - வளத்தோடுங் கூடி.

கடன்மேற் சொல்லுங்கால், நடு - மத்திமம். கற்றறை-பாராகிய தறை. வளத்தின் - வளத்தோடுங் கூடி.

மாறன்மேற் சொல்லுங்கால், நடுக்கற்று - உண்மை நூல்களை யோதாதுணர்ந்து. அறை - உணர்த்தும். வளத்தின் - வளத்தோடுங் கூடி என்க. எல்லாம் - முழுதும். இடுக்கு - குறைவு. அற்று - இன்றி. உதவும் - அளிக்கும். இயல் - இயல்பு. சான்று - அமைந்து. ஒடுக்கம் - அழிவு. அற்று - இல்லையாக என்க.

1. வைத்த தேன் - கூட்டுத்தேன்.
2. பொதிய மலை. 3. மலையம், தனம்.

இப் பாட்டினுள், "வளத்தி னன்பொருள்க ளெல்லா மிடுக்கற் றுதவு மியல்சான் - றெடுக்கமற வேய்ந்த" என்னுந் துணையும் மூன்று பொருட்கும் அந்தச் சிலேடை ஒன்றாய் நின்றன. அவற்றுள்ளும் பொருளென்பது பல பொரு ளொருசொல்லாதலின் மலை முதலிய மூன்று பொருட்கும் முறை முறையே சந்தனம் அகில் குங்குமம் தக்கோலம் ஏலம் இலவங்கம் சாதிக்காய் தேன் என்பனவும் பிறவும்; சங்கு, முத்து, பவளம் என்பனவும் பிறவும்; சித்து, அசித்து, ஈச்சுரம் என்பனவுமாம். இதனுள், ஏய்ந்தமலையம் என நின்ற பெயரெச்ச வாய்பாட்டைக் கடலைக் கூறுமிடத்து ஏய்ந்து என வினையெச்ச வாய்பாடாக நிறுத்தி அம் அலையென்பவற்றை இடையில் ஏற்பன வந்தனவாக வளர்கின்றான் என்னும் தன்னெச்சமான வினையோடுங் கூட்டுக. 'பரன்சீராய்ந்த தமிழ்' என்பது [1]காரண காரிய மயக்கம்.

திணை - பாடாண். துறை - செந்துறைப் பாடாண் பாட்டு.

கட்டளைக் கலித்துறை

பெற்றா ளிகழ வளர்த்தா ளிடர்செயப் பேர்த்துறவொன்
றற்றாங் கெங்குங் கருகியும் வாய்விட் டரற்றுமங்கோ
பொற்றா மரைக்கண்ணன் விண்ணோர் பிரான்புட் குழியில்வஞ்சங்
கற்றார் பொருட்பிரி வுற்றிடை வேனிற் கருங்குயிலே.

இஃது [2]அத்தச் சிலேடையுவமை.

பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - குயின்மேல் வைத்துக் கூறல். இவை சொற்பொருள் காரணமாகவும் உவமை பிறக்கும் அவை முன்னர்க் காட்டுதும் என்றும் அவை இவையென வுணர்க.

---

1. பரன்சீர் ஆய்தற்குப் பயன்பட்ட தமிழை, அதுவே ஆய்ந்த தெனக் கூறியமையால் காரணகாரிய மயக்கமாயிற்று.
"மிறை புரிவேல்" என்பதன் விளக்கம் காண்க. 17.

2. அத்தம் - பொருள். இவண் பொருள்வயிற் பிரிவு குறித்து நின்றது.



அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

அறிவுடையார் தத்துவநுண் பொருளுரையாய்ந் தறிகழகத்
தறிவொன் றில்லா
வறிதுடையா ரடைதரிற்சிற் குணத்தினராய்த் தலைப்படுமவ்
வாழ்வு போல
வெறிவரிவண் டுளர்நறுமென் சந்தனப்பூம் பொதும்பரிடை
விராய வேனை
மூறிபடுதண் சினைவெளிற்றுத் தாருவுமாங் கதிற்கமழு
முதன்மைத் தாமே.

இது தற்குண வுவமை.

துறை - பருப்பத வாழ்த்து.

சிலைவணக்குந் திருநுதலார் சிற்றிடையை வணக்கியவச்
சிறுமை நோக்கி
முலைவணக்கஞ் செய்ததுபோன் முதுக்குறைவந் தடைந்துபொறை
முதிர நோன்றாள்
விலைவணக்கங் கொண்டதுகண் டீன்றதாய் சுமந்திறுதல்
நெறித்தன் றென்றே
தலைவணக்கங் கொண்டுகதிர் நிலமகட்கே சரணமெனச்
சாய்ந்த மன்னோ.

இது [1]தற்குறிப்பேற்ற வுவமை. (இவை யிரண்டுங் குருகா மான்மியம். நாடு வாழ்த்து)

நேரிசை வெண்பா

கொடிமேல் வளருமிரு குன்றுமுள வென்னும்
படிமே தகப்பணைத்த பாவாய்—வடிவேற்கட்

---

1. "உலகினுள் ஒருபொருட் குற்றதென் மைத்திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென் றுட்கொண்
டேற்றுத லாகும் தற்குறிப் பேற்றம்" —மாறன். 140

பொற்றொடிக்கைப் பூமகள்கோன் புத்தூர் வரைமடமான்
சிற்றிடைமேற் கொங்கைத் திரள்.

இஃது [1]அற்புத வுவமை; என்னை? குன்றின்மேற் கொடி வளர்வதல்லது கொடிமேற் குன்று வளர்வதின்று; ஆதலான், அற்புத வுவமை. அற்புத மென்பது ஆச்சரியம்.

பகுதி - சேட்படை. துறை - பாங்கிக் கவயவங் கூறல். பாங்கன் செவ்வி செப்பலுமாம்.

## நேரிசை வெண்பா

மின்னு மரவும் விளங்கிழாய் நின்னிடையும்
பன்னுதமிழ் மாறன் பனிவரைவா—யுன்னில்
விருத்தமுள வாயிருப்ப மெய்யுவமைக் கென்றே
பொருத்தமுடைத் தென்னும் புவி.

இது [2]விரோத வுவமை.

பகுதி - இடந்தலை. துறை - நலம் புனைந்துரைத்தல்.

## நேரிசை வெண்பா

எப்பொருளுங் கோதற் றிசைக்குமறை யம்மறைபோன்
மெய்ப்பொருளெல் லாஞ்சொ லுவின் மெய்த்தமிழு—முப்பொருளு
மாசின் றுணர்த்து மயனரன்போன் மாறுநீ
ஆசின் றுணர்த்து மவை.

இஃது [3]ஒப்புமைக்கூட்ட வுவமை. எப் பொருளு மென்பன:

---

1. அற்புதவாய்மையின் அறைவது அற்புதமே.
அற்புதம் - வியப்பு. மாறன். 138.
2. சொற்பொருள் முரணத் தொடுப்பது விரோதம். —மாறன். 181.
3. தக்கதோர் பொருளினைச் சாற்றுழி அதுபோல்
மிக்கபல் பொருள்களை உடன்விளம் புதல்தான்
ஒப்புமைக் கூட்டம் எனவுரைத் தனரே. —மாறன். 1 28



"மிக்க விறைநிலையு மெய்யா முயிர்நிலையுந்
தக்க நெறியுந் தடையாகித் தொக்கியலு
மூழ்வினையும் வாழ்வினையும்"

என்பனவாம். முப்பொருளு மென்பன:—அங்ஙன முதலிற் கூறிய இறை அரி அயன் அரனென்னுமவர் மூன்று பொருளாய் முக்குணமாய் மூன்று தொழிலாய் இருக்குமெனக் கூறிய வண்ணமே குற்றமின்றி உணர்த்தும் என்பதாம். இன்றி யென்னும் வினையெச்ச வாய்பாட்டு இகரம் இன்று என உகர வீறாயிற்று; என்னை?

"அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினுள் உகர மாய்வரி னியல்பே"

என்றாராகலின். அவற்றை என்பது அவையென இரண்டாவது இறுதியில் தொக்கது. கோதற்றென்பதனைக் கோதற வென்றாக்குக.

முன்னது - பனுவல் வாழ்த்து. பின்னது - இயன்மொழி வாழ்த்து.

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

மாடகுளி கைக்கொழும்பொற் றகட்டமைத்த முழுமணிவால்
வயிர நீலம்
பாடல்சால் பசுமணிபொன் னிறப்புருட ராகமிவை
பத்தி வாய்ந்து
கோடலால் வளந்தருசெங் கேழ்கிளர்மாண் செக்கரொடுங்
குறைவொன் றில்லா
வாடகா சலக்குடுமி வளைந்தெழுமிர் திரதனுவொத்
தவிர்வ தொன்றே.

இஃது [1]ஏது வுவமை.

துறை - நாடு வாழ்த்து. (குருகாமான்மியம்)

---

1. "ஏது என்பது இதனின் இஃ தாயதென்
றோது வதாமென வுரைத்தனர் புலவர்." —மாறன் 186.

நேரிசை வெண்பா

பூரணமாங் கண்மலர்க்கும் புத்திக்குஞ் சித்திக்குங்
காரணத்த தாமோ கடலமிர்தந்—தாரணிமேற்
கன்னியிடத் தார்பரவக் காகோ தரத்துவளர்
பொன்னியிடத் தாரமுதைப் போல்.

இது [1]விலக்குவமை.

துறை - கடவுள் வாழ்த்து.

நேரிசை வெண்பா

அளிமருவும் பொற்கா வகமணந்துஞ் சங்க
வொளிமருவு நீணிதியுட் கொண்டும்—விளிவில்லா
நன்னரங்க வீடருள நாடா தருளரங்கன்
றென்னரங்கம் நேர்வரும்புத் தேள்.

இதுவும் விலக்குவமை.

அளிமருவும் பொற்கா - கொடையைப் பயிலும் பொற் சொரூபமான கற்பகக்கா. மணந்து - குடிபுகுந்து. சங்கவொளி மருவு நீணிதி - சங்க நிதி.

திருவரங்கத்தின்மேற் சொல்லுங்கால், வண்டு பொருந்திய பொலிவையுடைய சோலைகள். மணத்தல் - பரிமளங் கூர்தல். சங்கொளி மருவு நீணிதி - பாஞ்ச சன்னியத்தைத் தரித்த அன்பர்க்கு அழியா வைப்பாகிய அரங்கநாதன். நன்னர்-நன்மை. வீடு - பரமபதம். நாடாது - ஒவ்வாது ; அப் பரமபதத்தைக் கொடுக்கப் புத்தேள் வினையாது. திருவரங்கம் பரமபதங் கொடுக்கு வினைவுள்ளதாம் ஆதலாற் புத்தேளைத் திருவரங்கத்துக் குவமை கூறுவது பொருந்தாதென விலக்குக. நேர்வரும்புத்தேள் என்பது இகழ்ச்சிக் குறிப்பு ; [2]எதிர்மறையுள் அடங்கும். இங்ஙனம் உவமையைக் கூறி விலக்குதலால் விலக்குவமை யாயிற்று.

1. "மன்னிய குறிப்பின் மாற்றுதல் தானே
முன்ன விலக்கென மொழிந்தனர் புலவர்" —மாறன் 219.
2. நேராகாது எனப் பொருள் தருதலால் எதிர்மறை.



இதனுள்ளும் சிலேடை விரவிற்றேனும் வீடருள நாடாது என்பதனால் விலக்குவமை என்பதே நோக்கம். தண்டியாசிரியரும்,

"குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
வுழைபொருதென் னுள்ளங் கவரா"

என்னும் விலக்குவமையினும் சிலேடை விரவியதூஉங் காண்க.

திணை - பாடாண். துறை - நகர வாழ்த்து.

ஆக உருவக வுவமை முதலாக விலக்குவமை ஈருகப் பதினொன்றும் அடைவே வந்தவாறு காண்க. (உசு)

27. சிறப்பிற் றீர்ந்த செய்கைய வாகி
யிறப்ப வுயர்த்த லிழித்தன் மிகுத்தல்
குறைத்தல் பான்மாறுதல் கொள்கட னிலவே.

எ - ன். உவமைக்குக் கூறிய பொதுவிதிச் சூத்திரத்துள் பெருமையும் சிறுமையும் பெற்றியிற் சிறந்தும் என்பதற்குச் சிறப்பிற் றீர்ந்து வருவனவாய்க் கடியப்பட்டன முன்னர்க் கூறப்படும் என்றும் அவை யிவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒன்றினை உவமிக்குங்காற் சிறப்பினை நீங்கிய செய்கையை உடையவாய் இறப்ப வுயர்ந்த உவமேயத்திற்கு இறப்ப இழிந்த உவமானத்தினை உவமித்தலும், இறப்ப விழிந்த உவமேயத்திற்கு இறப்ப உயர்ந்த உவமானத்தினை உவமித்தலும், உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்த்தலும் உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்த்தலும், ஆண்பாற்குப் பெண்பால் உவமித்தலும், பெண்பாற்கு ஆண்பால் உவமித்தலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பால் உவமித்தலும், பன்மைப்பாற்கு ஒருமைப்பால் உவமித்தலும் பெரியோர் [1]ஆமெனக் கொள்ளும் கடனிலவாம் என்றவாறு.

நேரிசை வெண்பா

ஆனை யெருத்த மகழ்வான் வெரினேய்க்கும்
பூனை யிடியேறு போன்முழங்கு—மூனை

1. ஆமெனக் கொள்ளல் - ஏற்றுக் கொள்ளல்.

யபிலரியே றன்ன ளிவளிவடன் ஞசி
பயிலணிதா ராகணமொப் பாம்.

இதனுள், இறப்ப இழிந்த அகழ்வான்வெரினை இறப்ப வுயர்ந்த மானையின் முதுகிற்கு உவமை கூறியதூஉம், இறப்ப இழிந்த பூனை முழக்கிற்கு இறப்ப வுயர்ந்த இடியேற்றின் முழக்கை உவமை கூறியதூஉம், அரியேறுகி இறப்ப வுயர்ந்த அஃறிணை ஆண்பாலை உயர்திணைப் பெண்பாற்கு உவமை கூறியதூஉம், காசி ஆபரணமான முத்தின் ஒருமைக்குத் [1]தாராகணப் பன்மையை உவமை கூறியதூஉம் வழுவாயிற்று.

நேரிசை வெண்பா

பைங்குவளை முல்லை பனிவண்டு லாங்குமுதந்
திங்களிடத் தாயினபோற் செவ்விதரு—மிங்கிதமே
கற்றமர்கூர் கண்ணகைவாய் காமுறவாழ் வெய்தியவிம்
முற்றிழையாள் சோதி முகம்.

இதனுள், [2]உவமானமான குமுதத்துள் புணர்த்த வண்டிற்கு உவமேயமின்றி உவமான அடைமிகுந்து வழுவாயிற்று.

நேரிசை வெண்பா

தேனருவி நீரருவி யோடே சிறந்துளநற்
ருனவட மேருவெனுஞ் சால்பீற்றே—மானனையார்
சித்திரப்பொற் கச்சணிந்து [3]செய்ய மணிவடமு
முத்தவட மும்பூண் முலை.

---

1. தாராக்கூட்டம். தாரா என்பது ஒருவகைப் பறவை; வாத்தும் ஆகும். தாராப் பறவை ஆண்டித்தாரா, கண்ணடித்தாரா, காட்டுத் தாரா, மணற்றாரா, பெருந்தாரா எனப் பலவகைப்படும்.

2. குவளை கண், முல்லை நகை, குமுதம் வாய், திங்கள் முகம். குமுதத்திற்குத்தரப்பெற்ற 'வண்டுலாம்' என்னும் அடைமொழிக்கு ஏற்ப வாய்க்குத்தக்க அடைமொழி இன்மை அறிக.

3. செய்யமணி வடத்திற்குத் தேனருவியும், முத்து வடத்திற்கு நீரருவியும் உவமைகளாயின.



பொற்கச்சு அணிந்தென்னும் உவமேய அடைக்கு உவமான அடை குறைந்து வழுவாயிற்று. பொற்கச்சு-பொன்னெழுத்துக் கச்சு.

நேரிசை வெண்பா

நமன்மடந்தை யன்ன னிவனிவன்றன் ஞரி
சமனனைய ளிங்கிவர்க்குத் தையா—லமர்புதல்வ
ரெண்ணிருவர்க் கொப்பாகு மன்றே யமன்சமரிற்
பண்ணமைத்தாங் கேறும் பகடு.

இதனுள், உயர்திணை ஆண்பாற்கு உயர்திணைப் பெண்பாலும் உயர்திணைப் பெண்பாற்கு உயர்திணை ஆண்பாலும் உயர்திணை ஆண்பாற் பன்மைக்கு அஃறிணை ஆண்பாலொருமையும் சிறப்பிற நீர்ந்தனவாய் வழக்கின்றாய்க் கூறுதலால் வழுவாயிற்று.

நேரிசை வெண்பா

வாலிலாச் சம்புவென வாழ்மதங்கா வந்ததற்குப்
பாலிலா வுண்டி படையேமான்—மேலுமக்குக்
கூகைக் கறியிலையே கோதிலாத் தேனுடனே
பாகைச் சொரிந்தென் பயன்.

இதனுள், இங்ஙனம் வாலிலாச் சம்புவெனப் பழித்து உவமை கூறுதல் வழுவன்று. சம்பு - நரி.

பகுதி - பரத்தையிற் பிரிதல். துறை - பாணனைப் பழித்தல். (உஎ)

28. பொதுவினுஞ் சிறப்பினும் புணர்ந்துள வாகி
யிதுவழக் கிதுசெய்யு ளெனுமீ ரிடத்தும்
வெளிப்படை குறிப்பென விழுமிய நெறியாற்
கொளப்படு முவம வுருபினைக் கூறின்
அன்ன போல வனைய மான
வென்ன நேர விறப்ப நிகர்ப்ப
நாட நவிய நடுங்க நந்த

வேட வொன்ற வொடுங்க வொட்டக்
கள்ளக் கருதக் காட்டக் கடுப்ப
வெள்ள விழைய வெதிர வேய்ப்ப
மருள மலைய மாற மதிப்ப
வென்ற வந்த வேர வேய
வாங்க வொப்ப வமர வியையப்
புல்ல வுறழப் புரையப் பொருவ
வனைதுணை கெழுவீழ் தகைசெத் தற்றணி
யென்றிவை நாற்பா னெட்டும் பிறவு
மொன்றிய திறத்தா லொழுகுந ளுளவே.

எ - ன். இஃதுவமேயத்தினையும் உவமானத்தினையும் ஒப்புமைப் படுத்துங்கால் இடையினும் ஈற்றினும் வரும் உவமவுருபினை இனைத்தெனக் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) கொள்ளப்படும் உவமவுருபினை என்பது இது வினைப்பாலுவமம் இது பயனிலையுவமம் இது மெய்ப்பாலுவமம் இஃதுருவினுவமம் என நால்வகைத்தாக மனத்தான் மதித்துக் கொள்ளப்படுதலையுடையவாய்ப் பொதுவானுஞ் சிறப்பானும் பொருந்துவதுளதாய் இது வழக்கிடம் இது செய்யுளிடம் என இரண்டிடத்தினோடுங் கூடி வெளிப்படை குறிப்பென வருஞ் சொற்களுக்கு வரையறைகூறின் அவை, அன்ன போல என்பன முதலாக அற்றணியென்பன ஈறாக எண்ணப்பட்ட நாற்பத்தெட்டும் பிறவுமாகிப் பொருந்துங் கூறுபாட்டான் ஒழுகலாறுடைத்தாம் என்றவாறு. பிறவும் என்பதனால் எடுத்தோதினவே யன்றி, 'வெல்ல, வென்ற, வியப்ப, ஒத்த, .ஒக்கும், தகைய, தகைப்ப, பொற்ப, காய்ந்த, நோக்க, மருளும், புரையும், துலை' என்றற் றொடக்கத்தனவும், ஐந்தாம் வேற்றுமை உருபாய்வரும் இன்னும், என, என்னென வரும் எச்சவாய்பாடுகளாய் வருவனவும், பிறவுங் கொள்க. [1]'சொல்லினை' இரண்டும் நாலும் மயக்கம்.

1. 'சொல்லுக்கு வரையறை' என்பது 'சொல்லின வரையறை' என வந்தது—இரண்டும் நாலும் மயங்குதல்.



இவற்றுட் பலவும் செயவெனெச்சமாய வாய்பாட்டான் வந்தன எனினும் போலவென்னுஞ் சொல் புலிபோல வந்தானென வினையெச்ச வாய்பாட்டான் வினைகொண்டும், புலிபோலும் மறவனென்புழியும் புலிபோன்ற மறவனென்புழியும் பெயரெச்ச வாய்பாட்டாற் பெயர்கொண்டும், புலி போன்மறவன் என்புழி இடைச்சொல்வாய்பாட்டாற் பொதுவாயும் நிற்கும்.

இவ்வோதிய வாய்பாடெல்லாம் நான்குவமத்திற்கும் பொதுவென்பது ஈண்டுக் கூறினர். இனிச் சிறப்புவகையான் உரியவாம் வகை ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரும் உவமவியலுள்,

"அன்ன வாங்க மான் விறப்ப
வென்ன வுறழத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்"

"அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்"

"எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
வென்றுங் கெட்டே பயனிலை யுவமம்"

"கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்"

"போல மறுப்ப வொப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துவரு கிளவி யுருவி னுவமம்"

"தத்த மரபிற் றோன்றுமன் பொருளே"

என்ற சூத்திரங்களான் உணர்க.

இவற்றுள், அணியென்பன முதலாய சில உருபுகள் ஈறு விகாரப்பட்டு நிற்பனவும் உள. அஃதேல் அணி, வந்த, துலை என்னும் உருபுகள் முன்னோர் கூறிய உவமவுருபுத் தொகைச் சூத்திரங்களுள் இல்லையாலோ எனின், அவை "முல்லையணிந்த

முறுவலாள்'' எனவும், ''கயல்வந்த கண்ணியர்'' எனவும், ''தோல்வி, துலையல்லார் கண்ணும் கொளல்'' எனவும் இலக்கியங் களுட் கண்டமையாற் காட்டியதெனக் கொள்க. ஒழிந்தனவாய் மறைந்த உவமவுருபுகட்கும் மீண்டு இலக்கியங் காட்டில் இறப்பப் பெருகும். அவைகட்கும் வந்தவழிக் கண்டு கொள்க. (௨௮)

உவமையலங்காரம் முற்றும்.

——

## 3. உருவக அலங்காரம்

29. முக்கியப் பொருளையொப் புடைப்பொரு ளெனமதித்
திருபெய ரொட்டா யிசைப்பதும் உருவகம்.

எ - ன். வைத்தமுறையானே [1] உருவகம் என்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமேயப் பொருளையும் உவமப்பொருளாக உட்கொண்டு இரண்டு பொருளையும் இருபெயரொட்டாக ஒற்றுமை கொளுத்தி உரைப்பது உருவகம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

உம்மையால் இரண்டு பொருளையும் ஒற்றுமைகொளுத்தாது உவமையாதல் உவமேயமாதல் இரண்டிலொன் றுருவகச் சொல்லோடு தொக்கு மாட்டேறில்லாது வரும் உருவகமும் உளவென்றவாறு. மூன்றுதொக்கு வருவனவும் உள. இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் உருவகவிரியுண் முன்னர்க்காட்டுதும்.

---

1. உருவக அணியின் இலக்கணத்தை,

''உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்
தொன்றென மாட்டின தருவக மாகும்''

என்பார் தண்டியலங்காரமுடையார்.



அஃதாக, உவமையும் பொருளுமென இதன் முதனூலுடையார் கூறவும் இந்நூலுடையார் முக்கியப் பொருளை முதல் வைத்தது யாதோ எனின், உவமைபோலாது முக்கியப்பொருளை முதல் வைத்து ஒப்புமைப்பொருளை அதன்பின்னர் வைத்து ஒற்றுமை கொளுத்துவதே உருவகத்திற்கு மிக்கதோர் அறிகுறி என்பது தோன்ற வைத்தாரெனக் கொள்க. (௨௯)

30. பொருண்முத லினுமுவ மையதாம் புணர்வுழி
யொற்றிடை தோன்றல் திரிதலோ டொன்றிய
மற்றதற் குறுசொல் விரியா வயினே.

எ - ன். உவமைக்கும் உருவகத்திற்கும் எய்தியதோர் ஐயம் அறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) முக்கியப்பொருண் முன்னும் உவமப்பொருள் பின்னுமாக வருவது உருவகத்திற்கு மிக்க அறிகுறி என்றார்; அவ்வாறன்றிப் பொருண்முதலே வரினும் நிலைமொழியாகி உயிரும் ஒற்றும் ஈறாய் வரும் உவமேயச் சொல்லும் வருமொழியாய் அவை முதலே வரும் உவமச் சொல்லுந் தம்மிற் புணருமிடத்து அவற்றினிடையில் ஒற்றுத் தோன்றல் திரிதலின்றி அவற்றோடும் அவ் உருவகத்திற்குரிய சொல்லும் விரியாவிடத்து உவமையாம் பகுதியும் உளவென்றவாறு.

உதாரணம் :—வாய்ப்பவளம், (வாயென்ற பவளம், வாய் பவளமாக) குழற்கொன்றை, கொங்கைக் குரும்பை யெனவும் இவை உருவகம். வாய் பவளம், குழல் கொன்றை, கொங்கை குரும்பை எனவும் இவையுவமை.

''வாய்பவளந் துடிக்கின்றவா''

எனவும்,

''குவவின கொங்கை குரும்பை குழல்கொன்றை''

எனவுங் கண்டுகொள்க. ஒன்றிய என்றதனால் வதனசந்திரன், கரகமலம், கரபுண்டரீகம் எனவும் நிலைமொழி உவமேய உயிரீற்றின் முன்னர் உவமையாய வருமொழிமுதல் வல்லெழுத்து முன்னர் ஒற்று மிகாது உருவகமாம் இடமுமுள. இஃது

உவமவிரியினுள், தலைதடுமாற்ற உவமையின்கண் பொருண் முதலை வந்தும் உவமை யாயினவாறு கண்டுகொள்க. (௬௦)

31. அதுவே,

**தொகையினும் விரியினுந் தொடரிரு வகைத்தே.**

எ - ன். இதுவும் அவ்வுருவகம் இன்னவகைப்படும் என்கின்றது.

(இ - ள்.) அவ்வுருவகமென்னும் அலங்காரம் தனக்குரிய சொல் தொக்கும் விரிந்தும் வருமொழியோடுந் தொடர்ந்து நிற்கும் இரண்டு கூறுபாடுடைத்தென்றவாறு.

உம்மை இரண்டனுள் முதலது சிறப்பும்மை யாதலால் அதற்குரிய சொல் தொக்கு வருதலே சிறப்புடைத்தெனக் கொள்க. ஏனையது இழிவுசிறப்பும்மை. (௬௧)

32. **அடையிடை புணரினுங் கடிநிலை யிலவே.**

எ - ன். இதுவும் அவ் வுருவகந் தொகையினும் விரியினும் புணர்வுழி எய்துவதோர் வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டு பொருளையும் தம்மில் ஒற்றுமை கொளுத்தும்வழி இடைப்பட்ட உவமைக்கண் அடைசொற் புணர்த்துக் கூறினும் உருவகமேயாம்; நீக்கப்படாதென்றவாறு.

உம்மையான் முதலே அடைபுணரினும் நீக்கப்படாதாம்; எனவே, தொகைநிலைவகையானும் அடைசொற் புணராமலும் புணர்ப்பதே சிறப்புடைத்தென்பதாம். இவற்றிற்குச் செய்யுள் வருமாறு :—

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

முருகவி ழளகக் காட்டை முன்னிடா வல்குற் றேரும்
பருமணி வடத்திற் சேர்த்த படாமுலைக் களிறு முந்திப்
புருவவிற் குனித்து நாட்டப் பொருகணை யுட்கி மைந்தர்
செருவிழந் தோட மார்பிற் செஞ்சவே செலுத்து வாரே.

என்பது தொகையுருவகம். இதனுள் படாமுலை, பொருகணை என்பன அடை.

துறை - நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்)



நேரிசை வெண்பா

கண்கழுநீ ராய்க்கரங்கள் காந்தளாய்த் தீங்கிளவி
பண்களாய்ச் செவ்வாய் பதுமமாய்—நண்பனே
வாய்த்த மடவரற்கு மாறன் மணிவரைவா
யீர்ந்தண் பொழிலா மிடம்.

இது [1]விரியுருவகம்.

பகுதி-பாங்கற்கூட்டம். துறை இயல்பிடங் கூறல். (௬௨)

33. **ஒருதொடர் பினுமிரு மையுமுற லுளவே.**

எ - ன். தொகைவிரியுருவகம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தொக்கும் விரிந்தும் வரும் இரண்டுதன்மையும் ஒரு செய்யுளகத்து வருதலும் உள என்றவாறு.

நேரிசை வெண்பா

பெண்ணா ரமுதளித்த பேரின்பத் தீஞ்சுவைபெற்
றுண்ணா நினைவேற் குறுதியெனக்—கண்ணால்
அளித்தவரு ணோக்கா மமிர்தினைக்கண் டுள்ளந்
தளிர்த்ததையிங் கார்க்குரைப்பேன் முன்.

இது [2]தொகை விரியுருவகம். துறை - பாங்கியை யறிதல்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

கதிர்முலைக் குவடுந் திண்டோட் சைலமுங் கலவி முந்நீர்
எதிர்கொள நிறீஇ மத்தாக விவறலாந் தாம்பு பூட்டி
முதிர்பொறிப் புலவர் மாண்பின் முறைமுறை சுழற்று மாற்றுச்
சதிர்பெறப் பிறந்த வின்பத் தனியமிர் தருந்து நீரார்.

---

1. உருவகத்திற்குரிய சொல் தொக்கு வருதல் தொகை உருவகம். அது வெளிப்பட்டு வருதல் விரியுருவகம். 'ஆய்' என்பது வெளிப்பட நிற்றல் அறிக.

2. 'பெண்ணார் அமுது' தொகையும், 'அருள்நோக்காம் அமிர்து' விரியும் ஆம்.

திணை - பாடாண். துறை - நாடுவாழ்த்து. இதனுள்ளும் முதலையும் இடையினும் உவமேயத்தினும் உவமையினும் அடைசொற் புணர்ந்ததும் காண்க. (குருகாமான்மியம்.) (௩௩)

**34. உரைத்தவை யினிவரும் விரிக்குறு பொதுவே.**

எ - ன். இதுவும் அத்தொகை விரிகளால் எய்தும் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இங்ஙனமுரைத்த தொகையும் விரியும் மேற்கூறப் படும் உருவகவிரிக்கு மிக்க பொதுவிலக்கணமாம் என்றவாறு. (௩௪)

**35. இயைபியை பின்மை யேக தேசம்**
**ஒருபொருள் பலபொரு ளுருவகஞ் சிறப்பே**
**விருத்த மவிருத்த நட்பு வியனிலை**
**யேக வங்க மனேக வங்க**
**மவயவ மவயவி முற்றென வாய்ந்த**
**நவையறு சிறப்பின னுன்கதன் விரியே.**

எ - ன். உருவகம் என்னும் அலங்காரத்தின் விரியிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இயைபுருவகமும், இயைபிலுருவகமும், ஏகதேசவுருவகமும், ஒரு பொருளுருவகமும், பல பொருளுருவகமும், உருவகவுருவகமும், சிறப்புருவகமும், விருத்தவுருவகமும், அவிருத்தவுருவகமும், நட்புருவகமும், வியனிலையுருவகமும், ஏகாங்கவுருவகமும், அநேகாங்கவுருவகமும், அவயவவுருவகமும், அவயவியுருவகமும், முற்றுருவகமும் என ஆராய்ந்த குற்றமற்ற சிறப்பினையுடைய உருவகவிரி பதினாறும் என்றவாறு.

இவற்றிற்கெல்லாம் உருவகமென்னும் பெயரை அதிகாரத் தாற் கூட்டியுரைத்ததனோடும் எண்ணும்மைத்தொகையும் விரித்துரைக்கப்பட்டது நட்பென்பது சமாதானம். இவை இயல்லாஞ் [1]சொல்லின்முடியும் இலக்கணத்தன. அல்லதுரை யினுங் கொள்க.

1. பெயர் சொல்லுமாறன்றி இலக்கணமும் விளங்கக் இடப்பன.



அவற்றுள், இயைபுருவகம் என்பது ஒருதொடர்பினுள் பலபொருளையும் உருவகஞ்செய்யுங்கால் தம்முள் காரணகாரியம் இயைபுடைத்தாக வைத்து உருவகஞ் செய்வது:—

நேரிசை ஆசிரியப்பா

வித்தர்முத் தரிற்புகழ் விபுணன் பராங்குச
னுத்தம ஞானமென் றருளிர் திருப் பாற்கடல்
புரந்தசெந் தமிழ்மறை யாயபுத் தமிர்த
நிரந்தர முலகின் மெய்ந் நெறியிலை தழைவான்
பூமக ளெனும்பெயர் புனைமலர் விதியொடந்
தாமமா தவனெனுஞ் சங்கநீ ணிதியினை
யருளுடை மையின்வெளிப் படுத்தரு ளவுமவை
வருபவர் வருகென வாழ்வுபெற் றிருப்பவும்
வாழ்நா ளதன்கண் வழிபடு சரிதையின்
வீழ்நாள் படாமை வீட்டினை யெய்தா
தொல்லையிற் பிறந்திறந் துழல்வோர்
வல்வினை யதனில் வலியதொன் றிலையே.

இஃது இயைபுருவகம்.

(இ - ள்.) [1]அநந்தகெருட சேனாபதிகளோடும் பரமபதத்து முத்தரும் புகழும் மிகவும் வல்லோனாகிய [2]சீபராங்குசன் திருஞானம் என்றருளிரும் திருப்பாற் கடலளித்த திருவாய்மொழியெனும் புத்தமிர்தம் எல்லாநாளு முலகின்கண் சீமந்நாராயணனே பரப்பிரமமென்னும் உண்மைமார்க்கமிலை தழைக்கும்படி மலர் மடந்தையெனப் பெயர்புனை பதுமநிதியுடன் கூடிய பரமபதத்தை யுடைய மாதவனென்னுஞ் சங்கநிதியைத் தனது திருவுள்ளக் கருணையுண்டான தன்மையால் வெளியிடவும் அவை ஈருடல் ஏகமாகி 'முத்திவேண்டினவர் வருவார் வருக' வென்று தம்மினீங் காது வாழ்ந்திருக்கவும் தமக்குள்ள [3]வாழ்நாள் வீழ்நாள் படாமை மனோவாக்குக் காயங்களால் அருச்சனைபுரியும் ஒழுக்கத்தினன்

1. ஆதிசேடன், கருடன்.
2. காரிமாறப்பிரான்.
3. 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்'' —திருக். 38.

மோக்கத்தினைப் பொருந்தாது[1] சிறுவரையிற் பிறந்தும் இறந்தும் உழல்வோர் உம்மையில் இழைத்த தீவினைபோல வலியுடையதொன்று இல்லை என்றவாறு.

மலர்நிதி - பதுமநிதி ; சங்கநிதி - பாஞ்சசன்னியத்தைத் தரித்த பெரியநிதி ; திருவும் மாயோனும்.

இதனுள், திருப்பாற்கடன் முதலாக அடைவே காரண காரியத்துடனியைந்து உருவகம் ஆயினவாறு காண்க. பா - நேரிசை யாசிரியம்.

திணை - பாடாண் பொதுவியல். துறை - பனுவல் வாழ்த்து.

ஆர வடநீ ரருவிடா மாணிக்கத்
தார்கெழுசீர்த் தேனருவி தாழுகப்—பேரமுகு
பாரிக்கு மாறன் பனிவரைமான் வார்புனைந்து
பூரிக்குங் கொங்கைப் பொருப்பு.

இஃது[2] இயைபிலுருவகம். ஆரவடம் - முத்துவடம். மாணிக்கத்தார் - மாணிக்கமாலை.

பகுதி - பாங்கற்கூட்டம். துறை - செவ்விசெப்பல்.

ஏகதேசவுருவகம் என்பது ஒரு செய்யுளகத்து ஓரிடத்து ஒரு பொருளை உருவகஞ் செய்யுங்கால் [3]மாட்டேறுபெற உருவகஞ் செய்து அப்பொருளோடு சம்பந்தமுறப் பிறிதோர் பொருளைச் செய்யுளகத்துப் பிறிதோரிடத்து மாட்டேறு பெற உருவகஞ் செய்யாது தொகை நிலை வாய்பாட்டாற் கூறுதல் :—

அறியாமை யென்னு மகவிருளைச் சீக்கப்
பிறியா தறிவிருக்கப் பெற்றுங்—குறியாத
தீச்சொற் பயில்வரே செண்பகமா றன்பவள
வாய்ச்சொற் றிறம்பயிலா மல்.

இஃது ஏகதேசவுருவகம். இதனுள் அறியாமை யென்னும் அகவிருளையென மாட்டேறுபெற உருவகஞ் செய்ததனோடும் எதிராகச் சம்பந்தமுற ஞானமாம் விளக்கென மாட்டேறுபெற உருவகஞ் செய்யாது தொகைநிலைவாய்பாட்டான் அறிவெனக் கூறியவாறு காண்க.

**செண்பகமாறன்** பவளவாய்ச்சொல் - திருவாய்மொழி. திறம்- சித்து அசித்து ஈச்சுரத்தை மயக்கமற விளங்கக் கூறுங் கூறுபாடு. பயிலாமல் - இடைவிடாது உணர்வினால் சிந்தியாமல்.

இஃது உவமேயமும் உருவக உருபுமாகிய இரண்டு தொக்க தொகையுருவகம். ஞான விளக்காவது திருவாய் மொழி. பிறரறியாமை யென்னும் இருட்டறக் கூறிய ஞானமாகிய விளக்கு. பயில்வரே யென்பது பரசமயவாதியரை. ஏகாரம் - இரக்கத்தின்கட் குறிப்பு.

துறை - இதுவுமது.

புன்பனுவ லஞ்சம் பொசிக்கின்ற பேதையர்பே
ரின்பமுற மெய்யுணர்வா ரேனோருந்—தன்பால்
விருந்தருந்தத் தாளருளு வீறனார் கூறு
மருந்தருந்தா ரந்தோ மதித்து.

இதுவுமது.

இதனுள், 'நாவீறனார்கூறு மருந்து' என்பது திருவாய் மொழியாகிய மருந்து. மருந்தென்பது - அமிர்தம். எனவே, திருவாய்மொழியாகிய மருந்தென உருவகஞ்செய்து அதனோடுஞ் சம்பந்தமுறும்படி பிறவியாகிய பிணியைத்தீர்த்து முத்தியாகிய

---

1. மிகக்குறைந்த கால அளவில் பிறப்பிறப்புச் சிறுவரையை "நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச் சென்றான்" என்பதால் அறிக.

2. முத்துமாலை, மாணிக்கத்தார் என்பவை முறையே வெண்மை செம்மை நிறமாகி இயைபின்மை காண்க. 'நீரருவி' 'தேனருவி' என்பவற்றினையும் அறிக.

"வேட்டன உருவகம் வேறுவே றியற்றி
ஈட்டுதல் புரிந்த இயைபி லுருவகம்" —இலக். 644.

3. ஒன்றை, அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றுடன் மாட்டி (இணைத்து)க் கூறுதல் மாட்டேறு பெறக் கூறுதலாம். அவ்வாறு கூறாமை மாட்டேறு பெறக் கூறாமையாம். 'ஏகதேசம்' என்பது அரிதாக என்னும் பொருட்டது. ஆகலின் ஒன்றையோ ஒரு சில வற்றையோ உருவகஞ் செய்து எஞ்சியவற்றைக் கற்பார் உட்கொண்டு உணருமாறு தொகை நிலையாற் கூறுவது ஏகதேச உருவக மாகும்.

பேரின்பத்தைத் தரும் மருந்தென உருவகஞ்செய்யாது உவமேயம் முதலிய மூன்றினையும் இருவகைத் தொகையிலே வாய்பாட்டாற் கூறியவாறு காண்க.

மெய்யுணர்வார் - [1] தத்துவத் திரயத்தின் உண்மையுணர்வார். தன்பால் விருந்தருந்த - அம் மூன்றினையும் மயக்கமறவுணர்த்தும் ஞானமான அமிர்தத்தைத் தமது மெய்யுணர்வால் உவட்டாது புதுவதுபுதுவதாக உரிசிக்கவும் என்க. 'அருந்தாரந்தோ' என்பது இரக்கம். மெய்ப்பொருண்மாறன் - உண்மைப் பொருளை யுணர்ந்த மாறன்; உண்மைப்பொருளாகிய மாறனென்றுமாம்.

மிக்க வரிதாளின் மெய்யன் பிணைவித்தித்
தக்க தவந்தினமுந் தான்பொழிந்துட்—புக்கதோர்
ஞான முருவியபின் னன்முத்தி யைவிளைக்கு
மானபரன் காரிதரு மன்.

இஃது உவமையும் உருவகவுருபும் மாட்டேறில்லாது வந்த உருவகம்; என்னை ? அரிதாளாகிய செய்யின்கண் அன்பாகிய வித்தை விதைத்துத் தவமாகிய நீரைப்பொழிந்து ஞானமாகிய முளை யுருவியபின் முத்தியாகிய போகத்தையென மாட்டேறு பெறாது வந்தமையானுணர்க. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. [2] இவை யிரண்டு தொக்கது. இவற்றுண் முன்னையது பனுவல் வாழ்த்து.

இது, திணை - வாகையைச் சார்ந்த புறத்திணை. துறை - அறக்களவழி.

[3] இவை மூன்று மாட்டேறிலாது வந்த உருவகம். இவற்றிற்கு,

---

1. திரயம் - மூன்று. தத்துவத் திரயம் - மூன்று தத்துவங்கள். அவை சித்து, அசித்து, ஈச்சுரம் என்பவை. உயிர், உடல், இறைத் தத்துவங்கள் என்பவை அவை.
2. உவமேயமும் உருவக உருபும்.
3. 'அறியாமை', 'புன்பனுவல்', 'மிக்க' எனத்தொடங்கும் இம்மூன்று வெண்பாக்களும்.



"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது"

எனவும்;

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்"

எனவும்,

"பவளவாய்ச் செறுவுதன்னு ணித்திலம் பயிலவித்திக்
குழவினா றெழுந்து காளைக் கொழுங்கதிரீன்"

எனவும்,

"அஞ்சவரு தானை யமரென்னு நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும்"

எனவும், [1] மூந்து நூல்களினும் அடையே வந்தவாறு காண்க.

ஒருபொருளுருவகம் என்பது உயர்திணை அஃறிணை என்று சொல்லப்பட்ட காட்சிப் பொருளுங் கருத்துப்பொருளும் ஒரு செய்யுளகத்து வந்தால் அவற்றுள் ஒருபொருளை உருவகஞ் செய்தல் :—

பிறப்பா ரிறப்பார் பிறப்பாய வேலை
துறப்பா ரொருபோதுந் தூவார்—சிறப்பாகுஞ்
செய்படைத்த தென்னரங்கர் சேவடிமேன் மானிடராய்க்
கைபடைத்தும் வாழ்ந்த கதை.

இஃதொருபொரு ளுருவகம். அரங்கன், மானிடர்கை, சேவடி யென்னும் உயர்திணை அஃறிணைகளை உருவகஞ் செய்யாது, கருத்துப் பொருளாய [2] பிறப்பென்னும் அஃறிணையை உருவகஞ் செய்தலான் என்றறிக.

திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து.

---

1. தாளாகிய மரக்கலம், சினமாகிய தீ, நித்திலமாகிய வித்து, புகழாகிய கதிர் என்பனவற்றைக் கொள்க. இவற்றை நீந்தல், சுடுதல், வித்தல், விளைத்தல் என்பவற்றால் விரித்துக் கொள்ளப் பெற்றன என்க.
2. பிறவியாகிய வேலை(கடல்)

பலபொருளுருவகம் என்பது [1] அவ்விருபொருளையும் ஒரு செய்யுளகத்து உருவகம் செய்தல்.

தீதற்ற மெய்ஞ்ஞானத் தெப்பமுடன் மேதகுநால்
வேதக் கடல்கடந்த வித்தகத்தாந்—கோதற்ற
அந்தாமத் தீவினுட்புக் காழியா னுமணியைத்
தந்தானம் பூதூர்வந் தான்.

இது பலபொருளுருவகம். அந்தாமத்தீவு - விரசைக் கக்கரையாகிய பரமபதம்.

திணை - பாடாண். துறை - அறுமுறை வாழ்த்தினுண் முனிவனை வாழ்த்தல்.

உருவகவுருவகம் என்பது ஒன்றனை முதலே உருவகஞ் செய்து அதனைப் பெயர்த்தும் உருவகம் செய்தல் :—

மத்தம் புரியவிச்சை வாராழி யாமிருளென்
சித்தமினித் தேறுமே தேமகிழ்த்தார்—முத்தனீ
முகத்தா மரையா முழுமதியென் செவ்வி
யகத்தா மரையகத்தா க:

இஃது உருவக உருவகம். இதனுள், மத்தம் - மயக்கம். புரிதல் - தருதல். அவிச்சை - அறியாமை. [2] அவிச்சையாம் வாராழி என் உருவகம் செய்ததனை மறித்தும் இருளென உருவகஞ் செய்ததும் முகத்தாமரையாம் முழுமதி எனவும் உருவக உருவகம் வந்தவாறும் காண்க.

துறை - இதுவுமது.

சிறப்புருவகம் என்பது ஒரு பொருளை யெடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருபித்து அவற்றானே அதனை உருபித்து உரைப்பது :—

---

1. காட்சிப்பொருள், கருத்துப்பொருள்.
2. அவிச்சை - அறியாமை, ஆணவமலம். வாராழி - நெடுங் கடல்.



நாரங் குழலாய் நளினமுக மாய்முகுளங்
கூர்வெம் முலையாய்க் கொடியிடையா—யூர்திரைகள்
வெண்டுகில தாகி விளங்கு மகிழ்மாறன்
வண்குருகூர்த் தண்பொருநை மாது.

இது சிறப்புருவகம். நாரம்-பாசி. வெம்முலை-விருப்பத்தைத் தரு முலை. பொருநை மாது - பொருநையாகிய பெண்.

துறை - நதி வாழ்த்து.

[1] விருத்த வுருவகம் என்பது ஒரு பொருட்குக் கூடாதன பலவுங் கூட்டி உருவகஞ் செய்வது :—

வேம்பா லிசைந்தசுவை வெவ்விடத்தி னோடுதித்த
தாம்பால தன்றறலின் பாலன்று—பாம்பால்
இமிழ்திரைவா யிற்பிறந்த தென்பதன்று மாறன்
றமிழ்மறையாஞ் செஞ்சொலமிர் தம்.

இது விருத்தவுருவகம். வேம்பு - கைப்பு. கைப்பைத் தனக்குச் சுவையாகவுடைய நஞ்சினோடும் பிறந்ததாம் பகுதியை யுடையதன்று. அறலின் பாலன்று - சலத்தினது மயமாம் பகுதியையுடையதூஉமன்று. பாம்பால், இமிழ்திரை வாயிற் பிறந்த தென்பதன்று - பாம்பாகிய தாம்பால் ஆர்வாரிக்கும் திரையையுடைய கடலைக் கடையப் பிறந்ததென்று கூறுவதூஉமன்று. காரிமாறப்பிரான் திருப்பவளத்திற் பிறந்த திருவாய்மொழியாகிய இனிய சொல்லின் மயமாம் அமிர்தமென்றவாறு.

அமிர்திற்கு விடத்தினோடு உதிப்பது முதலாயதுஞ் சலமய மாவதுஞ் சுபாவம். இந்த அமிர்தத்திற்கு அவையின்மையால் விருத்தவுருவகமாயிற்று.

துறை - பனுவல் வாழ்த்து.

அவிருத்தவுருவகம் என்பது ஒரு பொருட்குக் கூடுவனவாந் தன்மை பலவுங் கூட்டியுருவகஞ் செய்வது :—

---

1. விருத்தம் - மாறுபாடு, முரண்.

ஓர்பொழுதுந் துஞ்சா தலமந் துறுதுளித்தாம்
போர்புனைவே லண்ணல் பொருட்கேகிற்—சீர்பெருகுந்
தண்ணார் பசுந்துளபத் தார்மார்பன் றஞ்சைமான்
கண்ணு மியகார்க் கடல்.

இஃது அவிருத்தவுருவகம். அண்ணல் - அண்மை விளி. [1]ஒழிந்த அகல முரையிற் கொள்க.

பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - செலவழுங்குவித்தல்.

நட்புருவகம் என்பது ஒரு பொருளை நன்றாக உருவகஞ் செய்து அதனைத் தீங்கு தருவதாகக் கூறி அத்தீங்கு அதனால் வந்ததன்று என்று அதற்குப் பிறிதோர் காரணங் கூறுதல்:—

தீங்கிளவி யென்றுயிர்க்குந் தெள்ளமிர்தம் வெவ்விடத்துப்
பாங்கிழமை கூர்த லணிமாற—னங்கைப்
பதித்திருவே தீவினையின் பாங்காய தென்றே
மதித்திருக்கு மின்றென் மனம்.

இது நட்புருவகம்.

இனிய கிளவியென ஒலிக்கும் ஒள்ளிய அமிர்தமானது வெம்மைமிக்க செய்யும் விடத்தின் கயப்பாம் உரிமையை விளைத்தல் நின்னிடத்து உண்டாய பாங்கினால் உண்டாயது அல்ல என்றும், எனது தீவினையின் பாங்காயது என்றும் [2]சந்தயமற விசாரியா நின்றது இப்பொழுது என் மனம் என்றவாறு.

உயிர்த்தல் - ஒலித்தல். கூர்தல் - விளைதல். பாங்கு - வாரம்.

பகுதி - பரத்தையிற் பிரிதல். துறை - பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் வாயில் வேண்டப் புறத்தொழுக்கம் உண்டென்று

1. கண் கடல் ஆகிய இரண்டற்கும் ஒருபொழுதும் துஞ்சாமை, அலமருதல், துளித்தல் ஆகியவை கூடிநிற்றல் அறிக.
2. ஐயம் நீங்க.



வாயின் மறுத்துக் கடுஞ்சொற் கூறிய இற்பரத்தையுடன் புறத்தொழுக்கம் இன்றென்று கூறித் தனது ஆற்றாமையே வாயிலாகக் கூடியது.

[1]வியனிலையுருவகம் என்பது ஒன்றின் அங்கம் பலவற்றையும் ஒரு செய்யுளகத்துக் கூறி அவற்றுட் சிலவுருவகஞ் செய்து சிலவற்றை உருவகஞ் செய்யாது [2]அவயவியை உருவகஞ் செய்வது:—

வையம் பரவு மகிழ்மாறன் செவ்வாயுந்
துய்ய நயனத் துணைப்போதுஞ்—செய்ய
முகத்தா மரையுடன்கை முத்திரையுங் கண்ட
சுகத்தார்க்கு முண்டோ துயர்.

இது வியனிலையுருவகம். இதனுள், அவயவி முகத்தாமரை. இதன்கண் அவயவியுடன் அவயவங்களை உருவகஞ் செய்து [3]மற்றையொன்றை உருவகஞ் செய்யாமையுங் காண்க.

துறை - கடவுள் வாழ்த்து. பழிச்சினர்ப் பரவலுமாம்.

[4]ஏகாங்கவுருவகம் என்பது ஒன்றின் அங்கம் பலவற்றினுள் ஒன்றை உருவகஞ் செய்வது:—

மாறன் பனிவரைமேல் வாண்முகச்செவ் வாயிவட்கு
வேறன் றிவளெனவே மெய்யுணர்விற்—கூறொன் றக்
காட்டுகின்ற தொண்பொற் கனங்குழைமேற் பல்காலு
மோட்டுகின்ற கட்காவி யுற்று.

இஃது ஏகாங்கவுருவகம். ஒரு பொருளாவது இதனுண் மூகமாகிய அவயவி. இதன் பொருள் உரையிற் கொள்க.

1. "ஊக்குபொருள் உறுப்பெலாம் உருவகஞ் செயிற்சில
நீக்கின செயும்விய நிலையுரு வகம்." —இலக். 644.
2. அவயவத்தை யுடைய முதற்பொருளை.
3. உருவகஞ் செய்யாத ஒன்று 'செவ்வாய்'.
4. "ஒட்டிய உறுப்பின்ஒன் றுருவக மாகக்
கட்டுரை செயும்ஏ காங்க உருவகம்".
—இலக். 644.

துறை - பங்கியை யறிதல்.

[1]அநேகாங்கவுருவகம் என்பது ஒன்றின் அங்கம் பலவற்றையும் உருவகஞ் செய்வது :—

செங்கைத் தளிர்நயனச் செவ்வேன் மறைப்பவா
மங்கைத் திருமால் வரைமடவாய்—கொங்கைக்
களியானைக் கட்படா நீக்கியோ கண்ணுற்
றெளியானைக் காக்கு மியல்பு.

இஃது அநேகாங்கவுருவகம்.

திருமால் சீவரமங்கை வரையில் வாழு மடப்பத்தை யுடையாய்! பெறுதற்கரிய நின்னோடும் பேரின்பத்தை அநுபவித்துப் பின்னர் அது பெறாது வருத்தமிக்கு நின்கண் எளியனாவேனைக் கருணை புரிந்து காக்குமியல்பு செங்கையாகிய தளிரால் நயனமாகிய சிவந்த வேலை மறைத்துக் கொங்கையாகிய களியானையினது முகபடாத்தினை நீக்கிக் கொள்ளும்படியே அவற்றை வெளியில் வைத்ததோ? இஃது அருளுக்குத் தகாதென்றவாறு.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - நாணிக் கண்புதைக்க வருந்தல்.

எளியானை என்றது தன்னைப் பிறன்போலக் கூறல்.

கொங்கைக் குவடுங் குழற்காரு மேலிருந்த
சங்கைக் கருண் மாயன் றஞ்சைவாய்—மங்கைக்குப்
பொய்யே யுளதென்கை போற்று திலதென்கை
மெய்யே யிடையாம் வெளி.

இதுவுமது. சங்கை-வளம். ஏகாரம் இரண்டும் எதிர்மறை. "இடையாம் வெளி யுளதென்கை பொய்யே; இலதென்கை மெய்யே" எனத் தேற்றேகாரமாக்கிக் கூட்டினுமாம்.

பகுதி - இடந்தலைப்பாடு. துறை - மருங்கணைதல்.

---

1. "எண்ணிய அவயவம் எவையும் உருவகமாக்
கண்ணுதல் செயும்அநே காங்க உருவகம்"
—இலக். 644.



அவயவவுருவகம் என்பது அவயவமே உருவகஞ் செய்து அவயவியை வாளாது கூறுவது :—

நிறத்தாரை வேலிமையா நீடுறையை நீக்கிப்
புறத்தா யிடரிழைக்கும் போர்மே—லறத்தான்
வருந்தா விரங்குவதென் மாலரங்கத் தின்பம்
பொருந்தா னனத்தாய் புகல்.

இஃது அவயவவுருவகம்.

திருமால் அரங்கத்தினிடத்து அழகு குடிகொண்ட முகத்தினை யுடையாய்! நினது செவ்வரி பரந்த கண்ணாகிய வேல் இமையாகிய உறையை நீக்கி வெளிப்பட்டுத் துன்பத்தைச் செய்யும் பூசன் மேலும் யான் மிகவும் வருந்தும்படி கலுழ்வதற்குக் காரணம் யாதெனக் கூறுவாயாக என்றவாறு.

தாரை - கண். உறை - [1]கவிசனை. அற - மிக. வருந்தா - வருந்த. இரங்குதல் - அழுதல். [2]இன்பம் - ஆகுபெயர்.

பகுதி - பொருட்குப் பிரிதல். துறை - கருத்தறிந்தழுத கண்ணீர் துடைத்தல்; என்னை? பொருள்வயிற் பிரிந்த தலைவன் உள்ளக் குறிப்பினைக் கரந்து பன்னாளும் புத்துவதுவாக உறுப்பினைப் பாராட்டியதால் இஃதொன்றுடைத்தென அவனது பிரிவையுட் கொண்டழுத கண்ணீராதலின்.

அவயவியுருவகம் என்பது அவயவியை உருவகஞ் செய்து அவயவத்தை வாளாதே கூறுவது :—

மூதிரா முலையு முறுவற் குறிவந்
தெதிர்பாயுங் கண்களுங்கண் டெய்தி—வதனமதிப்
பொற்றொடியை மாறன் பொருப்பிடைவைத் திங்கெதிர்ந்த
வற்புதனே திண்ணியனா வான்.

இஃது அவயவியுருவகம்.

---

1. வாட்கூடு.
2. இன்பத்தையுடையானைக் குறித்தது. ஆனனம் - முகம்.

துறை - பாங்கன் றலைவனை வியத்தல். இதனுள், 'வதனமதி'யென்றது அவயவியுருவகம்.

பெண்ணமுதே யங்கையாற் பேரைமால் தண்சிலம்பிற்
றண்ணறும்பூ வேங்கை தலைநாட்செய்—கண்ணி
தனைக்கொய் தனமேற் றமரித் செறிப்பான்
தினைக்கொய் திறம்விளையா தே.

இது [1]மகா அவயவியுருவகம். இதனுள், பெண்ணமுதே என்றது மகா அவயவியுருவகம். தண்ணறும் பூ வேங்கை தலைநாட்செய் கண்ணி - குளிர்ந்த நறுவிதாம் பூவா முன்னே வேங்கை வைத்த அரும்பு.

பகுதி - பகற்குறி. துறை - வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல்.

முற்றுருவகம் என்பது அவயவ அவயவிகளை ஏற்றவிடத் தோடும் பிறவிடத்தினோடும் முற்ற உருவகஞ் செய்வது :—

வட்ட வதன மதியு நுதற்பிறையும்
பெட்ட நகைநிலவும் பேர்த்தறியாக்—கட்டளகக்
கங்குலின்மேன் மாறன் கனவரைவண் டீரிருந்தா
லிங்கிவளுக் குண்டோ விடை.

இது முற்றுருவகம். பெட்ட - விரும்பப்பட்ட. பேர்த்தறியா - நீக்கியறியாத. கட்டளகக்கங்குல் - ஐம்பாலாகக் கோலஞ் செய்த குழலாகிய இருட்பிழம்பின்மேல். ஒழிந்த அகல முரையிற் கொள்க.

பகுதி - இடந்தலை. துறை - வண்டகற்றி மருங்கணைதல்.

மண்படர்தாட் டாமரையு மைபடர்கட் காவியையுங்
கொண்டுமுலைக் கோங்கரும்புங் கொண்டதோர்-பெண்கொடியைக்

1. அவயவ அடியாய் அவயவியை உருவகிக்காது முழுமையை உருவகித்தமையால் மகா அவயவி என்றார். 'வதனமதி' என்றதையும், 'பெண்ணமுதே' என்றதையும் கருதுக.



கண்டனையே யன்பா கழறலைமா றன்சிலம்பில்
வண்டமர்தண் பூஞ்சோலை வாய்.

இதுவுமது.

பகுதி - பாங்கற் கூட்டம். துறை - கழற்றெதிர் மறுத்தல்.

இதன் பொருள் உரையிற் கொள்க. ஆக இயைபுருவக முதலாக முற்றுருவக மீறாகப் பதினாறும் அடைவே கண்டுகொள்க. (௩௫)

36. உரைபெறு சிலேடைவேற் றுமையுட னேது
வபனுதி யுவமையென் றவற்றொடும் விரவும்.

எ - ன். அவ்வுருவகம் என்னும் அலங்காரம் பிறவாகிய அலங்காரங்களோடும் விரவிவருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சிலேடை முதலாக உவமை யீறாகக் கூறப்பட்ட ஐந்தலங்காரங்களோடும் விரவியும் வருமென்றவாறு.

'உரைபெறு சிலேடை' என்றதனால் [1]வினை முதலிய நான்கு காரணத்தான் உவமை பிறப்பதேயன்றி இரட்டுற மொழியுஞ் சொற்பொருள் காரணமாகவும் உவமை பிறக்கும் என்பதும், சிலேடை இக் கூறிய உருவகத்திற்குங் காரணம். இனிமேல் வரும் பிற அலங்காரங்கட்கும் உபகாரங்களாம் என்பதும் தோன்ற நின்றதுங் காண்க. இச் சூத்திரஞ் சிங்க நோக்காம்.

அவற்றுட் சிலேடை யுருவகம் என்பது ஒரு பொருளை ஒரு செய்யுளகத்து இரு பொருள் பயப்பதாகப் பலவிடத்தினும் புணர்த்து இறுதியினும் இரு பொருள் பயப்பதாக உருவகஞ் செய்வது :—

விற்புடைக்கீழ் மன்னி மிகுநா ணிடைதழீஇச்
சுற்றுடைமான் கோதைத் தொடைசெறியும்-பொற்புடைத்தாம்
பாணிழையா வண்டுலவும் பைந்துளவ மாலுறையூர்
மாணிழையார் சேயரிக்கண் வண்டு.

1. வினை பயன் உறுப்பு உருவு. —மாறன். 6.

இது [1]செம்மொழிச் சிலேடை யுருவகம்.

கண்ணிற்கும் அம்பிற்குஞ் சிலேடை.

கண்ணின்மேற் சொல்லுங்கால்; வில் - புருவம். இஃதுவமப் பேர். புருவத்தின் பரப்பின்கீழ்த் தங்கிப் பெருத்த நாணிடத்துக் கூடிச் சுற்றுதலுடைய மாட்சிமைக் குழலின்மேல் மாலையை மேனோக்கத்தாற் பொருந்துங் கண்ணாகிய வண்டெனவும், அம்பின்மேற் சொல்லுங்கால், தனுவின் அகன்ற விடத்துக்கூடி மிகுந்த நாணுக்கு நடுவே யெய்தி விரலிற் கட்டுதலுடைய விற்சாடுறத் தனுவிற்கு வல்லார் தொடுத்தெய்வதை யெய்தும் அம்பு எனவுங் கொள்க.

பகுதி - சேட்படை. துறை - கண்ணயப் புரைத்தல்.

பூங்குமிழ்மீ தேறிப் புணர்க்குமத னன்கலைதோய்ந்
தோங்குவனத் தாமரையி னுட்பயிலுந்—தேங்குபுனல்
வெள்ளக் குளத்துறைமால் வெற்பினில்வாழ் மெல்லியலார்
வள்ளைக் குழையார்கண் மான்.

இது [2]பிரிமொழிச் சிலேடையோடுங் கூடிய வுருவகம். கண்ணிற்கும் மானிற்கும் சிலேடை.

கண்ணின்மேற் சொல்லுங்கால்; பொலிவையுடைய மூக்கின் மீதேறிக் காமன் புணர்க்கும் நல்ல கலையைக் கற்றுப் பெருத்தெழுந்த தண்ணீரகத்துத் தாமரை போன்ற முகத்தினுள் தங்கும் மிகுந்த புனலையுடைய திருவெள்ளக்குளத்து உறையுந் திருமால் வெற்பில் வாழும் மெல்லியலாராகிய வள்ளைக் குழையினை

1. வில் (புருவம், வில்) நாண் (நாணம், கயிறு) கோதை (மாலை, முன்கைத் தோற்கட்டு) என்பன செஞ்சொல்லாய் நின்று இருபொருள் பயந்தன ஆகலின் செம்மொழிச் சிலேடையாம். செஞ்சொல் - பிரித்தறிய வேண்டாது நின்றபடியே பொருள் பயத்தல்.

2. மதனன் கலை (மன்மதன் கலை, காமத்தையுடைய நல்ல கலைமான்) வனத்தாமரை (அழகிய தாமரை. வனத்து உளவாம் மரை) வள்ளைக் குழை (வள்ளைக் கொடியன்ன காது, வள்ளைக் கொடியினது குழை) எனச் சொற்கள் ஏற்றவாற்றாற் பிரிந்து பொருள் தருதலால் பிரிமொழிச் சிலேடையாயிற்று.



யுடையார் கண்ணாகிய மான் எனவும், மானின்மேற் சொல்லுங்கால்; பூவினோடுங் கூடிய குமிழாகிய மரத்தினைப் பாய்ந்து காமத்தைத் தன்னிடத்தே விளைக்கும் நல்ல கலைமைப் புணர்ந்து ஓங்கி வளருங் காட்டின்கண்ணுளவா மரைகண்டு பழகும் மெல்லிய இயல்பு மிகுந்த வள்ளைக் கொடியினது குழையைப் பருகுங் குறிப்பினையுடைய மானெனவுங் கொள்க.

இதனுள், 'கண்மான்' என்பது உருவகம். 'புணர்மதன்' என்பதனை மதன்புணர் எனப் பாடம் மாற்றுக.

துறை - இதுவுமது.

மன்பார் குளிர்விக்கு மாறன் குடைமதியு
நன்பான் மதியுமதி நாடுங்கால்—முன்பாங்
குடைமதிக்குண் டாவதல்ல குன்றுதன்மை வானத்
தடைமதிக்குண் டாங்குன்று தல்.

இது [1]குண வேற்றுமை யுருவகம். வடநூலார் வெதிரேக வுருவகம் என்பதும் இது. குன்றுதல்-தேய்தல். மை-களங்கம். 'குடைமதி' என்பது உருவகம்.

திணை - பாடாண். துறை - குடை மங்கலம்.

பேரழகார் காரிதரும் பிள்ளைமா ணிக்கநெறி
சீரியமா ணிக்கமூறுஞ் செய்கைத்தோ—வாரியக்கா
ளுற்றுளதேற் றத்துவங்க ளெல்லா முணர்ந்துணர்த்தக்
கற்றுளதாய்க் காணேன் களித்து.

[2]இதுவுமது. இது விலக்குருவகம் என்றும் கூறப்படும்.

துறை - அறுமுறை வாழ்த்தினுள் அடங்கும்.

1. மாறன் குடை மதிக்குக் குன்றுதல் இன்று; வான் மதிக்குக் குன்றுதல் உண்டு என்றமையால் குணவேற்றுமை.

2. காரிதரும் மாணிக்கம் (மாறன்) தத்துவங்கள் உணர்ந்து உணர்த்தும்; மற்றை மாணிக்கம் உணர்த்தா. வேற்றுமையை விலக்கு என்றது இரண்டையும் ஒப்புக்கூறி ஒன்றை ஒவ்வாதென விலக்கியமையின்.

வேகத்தால் வாயுவதாம் வெண்ணீர்மை மேதகுகே
ழாகத்தாற் றாரசயி லாதியா—மோகநிலை
காய்ந்தவுணர் வாற்சுகனுங் காசின் றயிந்திர நூ
லாய்ந்துணர்ந்த வானரசிங் கம்.

இஃது ஏதுவுருவகம்.

வெண்ணீர்மை மேதகுகேழாகம் - வாலிதாந் தன்மை பெருமையோடு பொருந்துந் திருமேனி. தாரசயிலாதி - வெள்ளியாங் கயிலை. மோகநிலை - காமத்தினிலைமை. சுகன் - சுகப்பிரம இருடி. ஆசின்று - குற்றமின்றி. அயிந்திர நூல் - ஐந்திரவியாகரணம். [1]வானரசிங்கம் - சிறிய திருவடி.

திணை - வாகை. துறை - சால்பு முல்லை.

முத்திரைக்கை யன்று முளரிமல ரீதிதபூந்
தொத்தணிமார் பன்று சுவணகிரி—பத்தி
திகழா னனமன் றிதுதிங்கள் வாச
மகிழ்மாற னன்றிவனா மால்.

[2]இஃது அபனுதி யுருவகம். பத்தி - பரமபத்தி; அஃதாவது அன்பு. சுவணகிரி - பொன்மலை. இதனுள், மகிழ்மாறன் அன்று இவனாம்மால் என்பது உருவகம்.

திணையும் துறையும் இதுவுமது.

விடமனைய கட்காவி மெல்லியலாள் சோர்ந்தாள்
குடவரைபுக் கான்வெயிலோன் கொல்வா—ரடல்வேடர்
வேலவனே கங்குல் விருந்தருந்தி வைகறைவாய்
மாலுறையூர்க் கெய்தன் மதி.

இஃதுவமை யுருவகம்.

1. வானரமாகிய சிங்கம் என்றது அனுமனை.

2. குறையாத சிறப்பினதும் பொருளினதும் குணத்தினதுமாக ஒருபொருட்கு ஒறிய உண்மையை மறுத்து அவற்றிற்கு எதிராய மற்றொன்றாய்ப் பொருட்கு உயர்வு தோன்ற உரைப்பது அபநுதி என்னும் அணியாகும். —மாறன். 226.

இதனை அவநுதி என்பார் தண்டியலங்காரமுடையார். (74)



பகுதி - உடன்போக்கு. துறை - நெறி விலக்கல்; விருந்து விலக்கென்பதுமிது.

இதனுள், 'விடமனையகட்காவி' என்பது உவமையுருவகம்.

[1]"மையேர் குவளைக்கண் வண்டினம்வாழும்"

என்பதும் இது.

கட்டளைக் கலித்துறை

பொற்பிற் குரிய திருமால் கரிசொன்ன போழ்தினிலச்
சொற்பிற் படச்சென் றுதவிய மாயன் றுவரையின்வாய்
வெற்பிற் புடைக்குந் தனவேழ மான விலங்கறுத்தாற்
கற்பிற் குரியவிப் புல்லோ தடுத்திடை காப்பதுவே.

இதுவும் உவம வுருவகம். இதனுள், 'வெற்பிற் புடைக்கும் தனவேழம்' என இடையில் அடையடுத்து வந்தவாறுங் காண்க.

பகுதி-மணஞ்சிறப்புரைத்தல். துறை-அக்கினிசாட்சியாகத் தலைவன் தலைவியைக் கைப்பற்றித் தீவலம் செய்து வசிட்டனையும் அருந்ததியையும் இருவருங் கண்டு மணவறைக்கட் பள்ளியிடத்தார் ஆங்காலைத் தலைவன் அருமறைச் சடங்கிற்குப் படுத்ததருப்பையை நோக்கித் தலைவி காதலையுந் தன்றாற்றாமை மையும் உட்கொண்டுரைத்தல். (கூசு)

37. ஒழிவற வுருவக முடனே யுவமையும்
மொழிவதற் கடங்கா முறைமைய வாகலின்
மொழியப் புகும்யான் மூதுணர் விலனால்
இவற்றினுக் கிதனு ளிசைத்தவை யொரீஇவரு
மவற்றையு மிவற்றி னகப்பட வுரைகொளீஇ
முற்ற வுணர்த்திய முறைமைய வாக்குதல்
கற்றோ ரறிவின் காட்சிய தாகும்.

எ - ன். மேற்சொல்லிய உருவகமும் உவமையும் என்னும் இரண்டிற்கும் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

1. குவளை போன்ற கண்ணாகிய வண்டின் தொகுதி.

(இ - ள்.) உருவகமும் அதற்குக் காரணமாகிய உவமையும் என்னும் இரண்டலங்காரமும் முற்றக் கூறுவதற்கு அடங்கா முறைமையை யுடையவாகலானும் அவற்றைக் கூறுவதற்காக முந்துநூ லுணர்ந்தோரவையின்கண் புகுதாநின்ற யான் முதிய வுணர்விலனாதலானும் இக் கூறிய இரண்டலங்காரத்திற்கும் இந் நூலுள் யானிசைத்த தொகை விரிகளைக் கடந்து வருவனவாம் உருவக உவமங்களையுங் கூறிய விவற்றுள் அகப்படுவதாக உரை கொளுத்தி முழுதும் உணர்த்திய முறைமையவாக்குதல் அலங்காரம் முதலிய இலக்கணங் களோடும் இலக்கியங்களையும் முற்றக்கற்றோர் அறிவினுக்கு அழகென்றவாறு.

உவமையின் வழி பிறந்தது உருவகமாதலின் உவமைக் குரைக்கத் தகுவனவெல்லாம் உருவகத்திற்கும் உரைத்துக் கொள்க. ஈண்டுருவகம் முற்கூறியதனால் அதிகாரம் இடையறுதெனக் கொள்க.

கூறியவற்றை யொரீஇயின போல் வருமவற்றுட் சில வருமாறு :—

காமரதத் தோகை களிவண் டினமுலவுந்
தாமரைசா ராம்பற் றளிநறவுண்—டேமுறுபே
ரின்பத் தினும்பெரிதே யெவ்வுண்மா லைப்பணிந்து
துன்புற் றவர்சேர் சுகம்.

இது பேதத்தை [1]அபேதமாக்கின வாய்பாட்டால் வந்த உருவகம். இது முதலே உவமேயமும் உவமவுருபுந் தொக்க தொகை யுருவகம். என்னை? கண்ணாகிய வண்டினம், முகமாகிய தாமரை, வாயாகிய ஆம்பல், பானமாகிய நறவு என்பன முறையே தொக்கதால் என்றறிக. ஆனால், அவற்றினை அவ்வாறுக்கியது என்னை? வண்டினம் போன்ற கண்களுலவுந் தாமரை போன்ற முகத்திலென்பனவோடும் ஏனையவுந் தொக்கதாக விரித்துத் தொகை யுவமமாக்கப் பெறுவோ வெனின், ஆகாது; என்னை? முற்றுவமை வாய்பாடாக

1. பேதம் இன்மை.



உவமம் ஒன்றனையுங் கூறும் வாய்பாடு உவமை உருவகம் என்னும் இரண்டற்கும் பொதுவாய்பாடேனும் ஈண்டு மருட்கை யென்னு மெய்ப்பாட்டு வயத்தஞ்கிப் புணர்ச்சியை மகிழ்ந்து பேதத்தை அபேதமாக்கி விதந்துரைத்தானாதலின் தொகை யுருவகமாக உரை கோடலேயாம். காட்சிக்கு "திருவளர் தாமரை" யென்னு [1]முதற்பாட்டு மருட்கை வயத்தனாகிக் கூறிய இவ் வாய்பாடென்றுணர்க.

அற்றேல், இதனகததுப் பேதத்தை அபேதமாக்கிய தியாதோ வெனின், தாமரை வேறு முகம் வேறாயிருக்கவும் முகத்தைத் தாமரையென்றே பேதமறக் கூறிய வாற்றானும் ஏனையுவமேயத்தினையும் அவ்வாறே கூறியவாற்றானும் உணர்க.

பகுதி - இயற்கை. துறை - புணர்ச்சி மகிழ்தல்.

மேலிருந்த விண்ணோர் வியத்தக்க செம்மையதாய்ப்
பாலிகையுட் டெள்ளமுதம் பாலிக்குஞ்—சால்புடைய
திங்களைக்கண் டான்மாறன் செம்பொற் றுடரியுள்யார்
தங்களுளங் கோடா தவர்.

இஃது அபேதத்தைப் பேதமாக்கிய சிலேடை வாய்பாட்டான் வந்த அற்புதவுவமை. இதனுள், அபேதத்தைப் பேதமாக்குதல் சந்திரனொருவனன்றிப் பிறனொரு சந்திரன் இன்றாகவும் செம்மை யுடையதாய்ப் பாலிகையுள் தெளிந்த அமிர்தத்தை விளம்பும் திங்களெனப் பேதித்துக் கூறினமையான் அறிக.

பாலிகை - [2]வள்ளமும் அதரமும் ஆதலாற் சிலேடை.

பகுதி - இதுவுமது. ..துறை - தலைவனை வியத்தல்.

இதுவுந் தொகை நிலையுள் அடங்கும்.

காவிற் பிறவாக் கனகக் கொடிகமல
வாவிக் கடங்கா மடவன்னம்—பூவிற்

1. திருக்கோவையார் முதற்பாட்டு.
2. கிண்ணமும் இதழும்.

பிறவா நறுந்தேறல் பேர்நகர்மால் வெற்பி
லுறவர்ய் நிறையுண் ணுரு.

இது சம்பந்தமுள்ளதைச் சம்பந்தமில்லையாக்கி வந்த உருவகம். அன்றியும், காவியிலும் வாவியிலும் என்றமையால் விரோத அலங்காரமும் இதனுள் விளைப்பாருமுளர்.

"மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமுதே என்கோ"

என்பனவற்றையும் விரோத அலங்காரம் ஆக்குமாறுபோல என்றறிக.

பகுதி - இதுவுமது. துறை - இயல்பிடங் கூறல்.

கோதிலாப் பொன்னைக் குழைத்துமதன் றாரியக்கோல்
காதலாற் கைப்பற்றிக் காட்கரைமால்—போதங்
குழைந்தருள்பொற் கொம்பிற் குறித்ததென் கோவின்பந்
தழைந்தருளிக் கொம்பினையே தான்.

இது சம்பந்தமில்லாததனைச் சம்பந்தமாக்கிக் கூறிய மோகவுவமை. விகாரவுவமை அதிசயவுவமை எனினுமாம்.

பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந் துரைத்தல்.

மாயன் குருகா புரியனைய மாதரா
ளாயந் தொழுவா ழருமையுறிற்—றூய
கனவென்கோ கூடிக் குழைந்ததனைக் காமர்
நனவென்கோ யாதென்கோ நான்.

இதனுள், 'குருகாபுரியனையாள்' என்பது குருகாபுரி செயற்கையான் அன்றி இயற்கையானும் முதலே அழகுடையது போன்று இவளும் இயற்கையான அழகுடையள் என்பது தோன்ற நின்றமையால் இதுவும் உவமையுள் ஒரு பேதம்.

பகுதி - இதுவுமது. துறை - 'ஆயவெள்ளம் வழிபடக் கண்டு இது மாயமோ' என்றல்.



[1]"பாயும் விடையரன் றில்லை யன்னாள்"

என்பதுமிது.

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

எனவும்,

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

எனவும் இவை போல்வன பிறவும் இவற்றின்பாற் கூட்டி யுணர்க.

நேரிசைச் சிந்தியல் வெண்பா

திருந்திழையாய் மாறன் றிருவாய் மொழியே
மருந்துபிற விப்பிணிக்கு மாதர்—தரும்பிணிக்கு
வாய்ந்தமருந் தென்பார் மடல்.

இது மாதர்தரும் காமமாகிய பிணிக்கு என்பது மாதர் தரும் பிணிக்கு என மாட்டேறிலாது வந்த உருவகம்.

பகுதி - மடல். துறை - உலகின்மேல் வைத்துரைத்தல்.

பா - இரண்டு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

வழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னாலுமிணை வெற்பெழுதி னாலு
மொழியெழுத லாமோ மொழி.

இது மாட்டேறில்லாது வந்த ஏகாங்க வுருவகம்; என்னை? முலையென்பவற்றை உவமை வாய்பாடு தோன்றக் கூறினமையால்

---

1. "பாயும் விடையரன் தில்லையன் னாள்படைக் கண்ணிமைக்குந்
தோயும் நிலத்தடி தாமலர் வாடும் துயரமெய்தி
ஆயு மனனே அணங்கல்ல ளம்மா முலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே"
—திருக்கோ. ௩.

உபய மூலையாகிய இணைவெற்பெனக் கோடல் வேண்டுமென் றுணர்க.

பகுதி - இதுவுமது. துறை - எழுதவரி தென்றல்.

பா - ஒருவிகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

### இன்னிசைச் சிந்தியல் வெண்பா

நாணு நிறையு நறுநுதாஅன் மாணிழையார்
தந்தவெங் காமத் தழல்கதுவ வெந்து
தருமடன்மா வேற்றந் தரும்.

இஃது ஏகதேச வுருவகம். இதனுள், நாணும் நிறையுமாகிய பஞ்சென உருவகஞ் செய்யாது 'காமத்தழல்' என ஒன்றையே உருவகஞ் செய்தமையான் என்றறிக.

பகுதி - இதுவுமது. துறை - நாணழிவுரைத்தல்.

பா - அடிதோறூஉம் ஒரூஉத்தொடை பெற்று வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

### கலி விருத்தம்

தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
யருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு பானில மன்னனே.

என்பதும் ஒருவகை உருவகம்; என்னை? தண்ணளியால் மன்னனாகிய தருமன், தனதீகையால் மன்னனாகிய வருணன், உயிர் மாற்றலால் மன்னனாகிய கூற்று, அருமையால் மன்னனாகிய வாமன், அழகால் மன்னனாகிய காமன் என உருவகஞ் செய்துணர்க.

மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
யன்ன நடையினர்க் காரமிர்தந்— துன்னும்



பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்
எரிசினவேற் றானையெங் கோ.

என்பதும் கூறிய [1]ஒருவகை யுருவகம்.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வருந்தி யீன்றாண் மறந்தொழிந்தாள்
வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள்
முருந்தின் காறுங் கூழையை
முனிவார் நின்னை யென்முனிவார்
பொருந்திற் றன்றா லிதுவென்னாய்
பொன்று மளித்திவ் வுயிரென்னாய்
திருந்து சோலைக் கருங்குயிலே
சிலம்ப விருந்து கூவுதியால்.

என்றற் றொடக்கத்தன உருவக இலக்கணம் விளங்க நின்றில வேனும் அதனிடத்து மயங்கி நின்றன கொள்க. என்னை கொள்ளுமாறெனின், ஈன்ற குயிலாகிய பெண் மறந்தொழிந்த - காக்கையாகிய பெண் இல்கடிந்த - [2]பெண் குயிலாகிய பெண்ணை யெனக் கொள்வதை மயக்கி நின்றமை காண்க. (கள)

உருவக அலங்காரம் முற்றிற்று.

---

1. மன்னராகிய யானைக்கு மடங்கல் என்பதுபோல உருவகம் விரித்துக் கொள்க.

2. மறந்தொழிந்த பெண் குயிலாகிய பெண், இல்கடிந்த பெண், குயிலாகிய பெண் என இயைக்க. இல்கடிதல் - கூட்டினின்று அகற்றல்.

## 4. உள்ளுறை யுவமம்

38. உணர்வதற் கரிதா முவமப் போலி
புணர்திறம் வினையே பொருண்மெய் யுருவெனப்
பிறப்பொடு மைந்தாம் பெற்றித் தாகிச்
சிறப்புறு திணைகளிற் றெய்வத மொழிந்த
கருப்பொருள் களனுக் கட்டுரை பயின்று
முவமையோ டெதிருள் ளுறுத்தலுற் றயலா
யுவமச் சொற்றொக லொருதலை யாகியு
மன்பின தளவா மகத்திணை யிருவயி
னின்ப துன்பத் திசைதிரிந் திசையாத்
துணைவன் றுணைவி தோழி செவிலி
யிணையெனும் பாங்கன் பாணனென் றிவராற்
கொள்கையின் வரூஉங் குறிப்புரைத் தாகும்.

எ-ன். வைத்த முறையானே உள்ளுறை யுவமம் என்னும் அதற்குப் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. 'உவமப்போலி' யென்றும் அதற்குப் பெயர்.

(இ-ள்.) உணர்வினால் உணர்தற்கு அரிதாகிய உள்ளுறை யுவமம் என்பது முற்கூறிய வெளிப்படை யுவமம்போல 'வினைபய மெய்யுருவு' காரணமாகத் தோன்று மவற்றினோடும் பிறப்புங் கூட்டி நிலைக்களனைந்தினோடும் அவ்வவ நிலங்களில் தெய்வதம் ஒழிந்த கருப்பொருள் நிலைக்களனாகவும் அழகிய வுரையுட் பயின்றும் வெளிப்படையாக வரும் உவமப் பொருளோடும் அதற்கெதிராகிய உவமேயப் பொருள்களை உள்ளுறுத்துக் கொள்ளும்படித் தாயும் உவமேயம் பாடலுட் பயின்றுவாராது அயலாகியும் உவமவுருபு தொகுதல் ஒருதலையாகவும் களவு கற்பென்னும் கைகோளின் இரு வகையினும் இன்பதுன்பம் காட்டுவனவாய் இசை திரிந்து இசைப்பனவாய்த் தலைவன் தலைவி முதலிய பெயர்களாற் குறிப்புரையாய் வரும் என்றவாறு.

'உணர்வதற்கரிதாம்' என்பதனால் ஏனையுவமம் புலப்படக் கூறுத உள்ளுறை யுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச்



சிறப்புக் கொடுத்துக் கூடி நிற்குமென்பதாம். 'கொள்கையின் வரூஉம்' என்பதனால்,

"கிழவி சொல்லி னவளறி கிளவி
தோழிக் காயி னிலம்பெயர்ந் துரையாது"

எனவும்,

"கிழவோற் காயி னுரனொடு கிளக்கும்
ஏனோர்க் கெல்லா மிடன்வரை வின்றே"

எனவும்,

"கிழவோட் குவம மீரிடத் துரித்தே"
"கிழவோற் காயி னிடன்வரை வின்றே"

எனவும்,

"தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான"

என்வும் வரும் கூற்றுக்களோடும் தோழியும் உழையரும் தலைவன் கொடுமை கூறும் வழியினும் பிற வழியினும் தலைவனூரின் கண்ணுள்ள கருப்பொருள்களானவை சொல்லத் தலைவற்கே அன்றியுந் தலைவிக்கு ஏற்றனவாம் உவமத் தன்மைத் தோற்றத் தனவாய் உள்ளுறை யுவமங் கேட்டலும் பிறவாறு வருவனவாம் அவைகளும் குறிப்புரைத்தாகும் என்பதனானும் உய்த்துக் கொள்க.

பிறப்பாவது அவ்வவ நிலங்களில் [1]இழிந்த பிறப்போடுஞ் சார்த்திக் கூறல். உள்ளுறுத்தல் - உள்ளே குறித்தல். ஒருதலை - நிச்சயம். அகத்திணை இருவயினென்பது 'இறந்தது போற்றல்' என்னுந் தந்திர வுத்தி. [2]'இசை திரிந்திசைத்தல்'

1. அஃறிணையுள்ளும் இழிசெயலியற் பாற்பட்டவை.
2. "சொற்கள் தத்தம் பொருளுணர்த்தாது வேறுபட்டிசைப் பினும் இவ்வதிகாரத்துள் யாத்த பொருள்கள் நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகிய புலனெறி வழக்கில் திரிந்து இயன்றிசைப் பினும் அவை மிகவும் பொருளேயாய்ப் பொருந்துமென்று தொல்லாசிரியர் கூறுவர். "சொல்லாவது எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளறிவுறுக்கும் ஓசையாதலின் அதனை இசையென்ருர். அஃது ஆகுபெயர். அசைக்கப்பட்டது அசையென்பதும் ஆகுபெயர்"
—தொல். பொருளியல் 1. நச்.

என்பது செய்யுட் சொற்கள் தம் பொருளுணர்த்தாது வேறுபடக் கூறுதல். இசையாவது சொல். சொல்லாவது எழுத்தினு லாக்கடபட்டுப் பொருளறிவுறுத்தும் ஓசையாகலின் இசை யென்றார். இஃது ஆகுபெயர். என்னை?

"இசைதிரிந் திசைப்பினு மிசையுமன் பொருளே
யசைதிரிந் தியலா"

என்னும் பொருளியற் சூத்திரத்தான் (1) உணர்க. இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

நேரிசை ஆசிரியப்பா

காமர் பன்மலர் கஞலிய பொதும்பர்
மாமரப் பணையின் மதுகர மிழைத்த
முதுநறுந் தேற னெதுமலர் முன்னுபு
கொளத்தகு மரபிற் குன்ற வாண
வரைதலின் வரையா தொழுகலி னிருவிரு
மாறுபட் டொழுகிய மதியினி ராகலிற்
றிருமகிழ் மாறன் றிருவருட் கிலக்கா
யொழுகா தவருளத் தோன்று
மழுகா மதியின் மறுகுவல் யானே.

என்பது வினையுவமப்போலி; என்னை? மாமரப் பொதும்பரகத்து மதுகரங்கள் தமக்குப் பின்னைக்கு நுகர்வதாக மறைத்துவைப்ப விளைந்த தேனை நொதுமலர் ஆராய்ந்து கைப்பற்றிக் கொடுபோம் குன்றவாணனே என்றதனாற் களவினோடுங் கூடிய கூட்டத்தை நீட்டித்துப் பின்னர் இவளை வரைந்து கொள்ளக் கடவேன் என நினைந்த நினைவு தவறும்படி பருவமுதிர்ந்த இவளையும் பிறர் நயந்து பொன்னணிந்து கொடுபோவர் அதுபோல என்ப வாகலான் உவமைக்குப் பிறிது பொருள் எதிர்த்துவமஞ் செய்யாது ஆண்டுப் பிறந்த கருப்பொரு ளவற்றோடும் உள்ளுறுத்த வைத்தலின் இஃது உள்ளுறை யுவமமாயிற்று. அவற்றோடு மிஃது நொதுமலர் கொடுபோவரென்னும் தொழிலோடும் இவளையும் பிறர் கொடுபோவரென்னும் தொழில் உவமங் கொள்ள நின்றமையின் வினையுவமப் போலியாயிற்று. அன்றியுங் காமர்



பன்மலர் கஞலிய பொதும்பர் என்பது நற்றாய் தோழி செவிலி முதலியோர் வைகும் மனைக்குவமையாம். காமர் - அழகு.

திணை - குறிஞ்சி. கைகோள் - களவு. கூற்று - தோழி. கேட்போன் - தலைவன். இடம் - முன்னிலை. காலம் - நிகழ்வு. பயன் - இற்செறிவுரைத்து வரைதல் வேண்டும் என்றது. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பகுதி - பகற்குறி. துறை - வருத்தங் கூறி வரைவுகடாதல். ஒழிந்தனவும் உரையிற் கொள்க.

நேரிசையாசிரியப்பா

இறைவறங் கூரா வீர்ந்தண் பொய்கைத்
துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்
மாந்துபு வயினிறை வெய்திய கவரி
யேங்தெழின் மாடத் தீன்றகன் றுள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைக் குறுங்கண்
மடைதிறந் துவளக மடுநிறைத் தொழுகு
பாற்றொடி யினயற் பழிதீர் பேடையைப்
போற்றறு களிப்பிற் புணர்ந்தவண் மூழ்கிப்
புனிதமுற் றிருசிறை புலர்த்திய வோதிமந்
தணந்தயற் கழனிச் சாதிப் பெடைகளை
மணந்தத னனந்தலை மள்ளர்தா முழுத
நாற்றடி யதன்க ணறுந்தழை பதனழிந்
தூற்றெழு களங்க வுறுபுன லாடிப்
பண்டுதான் மரீஇய பானிறப் பேடையைக்
கண்டுதான் வளைக்குங் காமரு கடல்கெழு
கண்ணகன் ஞாலங் கண்டுகண் ணயப்பான்
விண்ணவர் வியப்பான் மேதகு படிவத்
தரவணைத் துயின்றரு ளரங்கத் தமுதி
னுரவுநீர்க் காவிரிக் குறுபுன லூர
புல்லேன் பொதுவுணின் மார்பெனச்
சொல்லேன் புன்மனத் தொடர்புடை யேனே.

இதுவும் வினையுவமப் போலி. இதனுள், 'இறைவறங் கூரா' என்பது சிறிதும் வற்றாத என்றவாறு. ஈர்ந்தண் பொய்கை - மிகவுங் குளிர்ந்த பொய்கை.

"துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்
மாந்துபு வயினிறை வெய்திய கவரி"

இடந்தோறும் நெருங்கின இதழ் விரிந்த தாமரை முதலிய பல மலரையுமுண்டு வயிற்றை நிறைத்தல் பொருந்தினகாரான்.

"ஏந்தெழில்......தொடர்புடையேனே"

என்றது உயர்ந்த அழகையுடைய மாளிகையினிடத்து ஈன்றகன்ற குழக்கன்றை நினைந்து செல்லுமிடத்து முறுகின முலைக் குறுங்கண் மடைதிறந்து பள்ளவாவிகளைப் பெருக்கியோடா நின்ற பாலாற்றின் பக்கமே குற்றமற்ற தனது பேடையைப் பாதுகாப்பற்ற களிப்பினோடும் புணர்ந்து அப் பாலாற்றின் நடுமூழ்கிப் பவித்திர முற்று இருசிறகரும் புலர்த்திய சேவல் ஓதிமப் பேடையை நீங்கி, அயல்வயற் கூட்டப் பெடைகளை மணந்து அக் கழனிநடுவண் மள்ளர் உழுத நாற்றடி நனந்தலை நறியதழைகள் அழுகி யூற்றிருந்த சேறு மிகுந்த புனலிடையாடி முன்னர்த் தான் மணந்த வெண்ணிறப் பேடையைப் புணர்ச்சி குறித்து வளையும், அரவணைத்துயின்ற அரங்கத்தமிர்தின் உரவு நீர்க் காவிரிக் குறுபுனலூரனே! புல்லேன். பரத்தையர் பொதுவுண் நின்மார்பெனச் சொல்லேன் புன்மனத் தொடர் புடையேன் என்றவாறு.

பொதுவுணல் - பரத்தையர் பலராய் ஏக காலத்து இன்பத்தைப் பொதுவாக அநுபவித்தல். இதனுள், 'பரத்தையர்' என்பது சொல்லெச்சம். ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

அஃதாக இதனையும் வினையுவமப்போலி என்ற தென்னை யெனின், தனக்குரிய பேடையோடும் பாலாற்றினயற் புணர்ந்து அதன் பின்னர் அப் பாலாற்றின் முழுகிய சேவல் அன்னப் பெடையை நீங்கி அயற்கழனியிடத்து வேற்றுப் பேடைகள் பலவற்றையும் புணர்ந்து அதனள்ளிடை நாற்றடிக் களங்க வுறுபுனலின் முழுகி அக் களங்கப் புனல் புலரா முன்னம் பண்டுதான் மரீஇய பேடையை வளையும் என்பதனால் நமதகச் சோலையினடுவண் பனிநீராற் பூரித்த புழுகு சுனையினது அயல் என்னோடும் பாதுகாப்பற்ற களிப்புடன் உவர்ப்பில்லா



இன்பத்தைத் துய்த்துப் பவித்திரமெய்த வேண்டி முழுகி ஈர ஆடை களைந்து நனைந்த குழற்கற்றை புலர்த்தி எதிர்முகமாக இருந்த நீ நீங்கி எனது மாளிகைக்கு அயலே சேரிப் பரத்தையர் பலரையுந் தோய்ந்த வேர்வோடுங் குழம்பிய மானமதச் சேறு புலராமுன்னம் வாயில் வேண்டாது வந்தெனது பள்ளியிடத் தானாகி மணிமேகலையைப் பற்றுதற்கு இருகையால் வளையா நின்றாய் என்னும் உவமேய வினை கருப்பொருள் களானகத் தோன்றி நின்றமையான் என்றுணர்க.

இது திணை - மருதம். கைகோள் - கற்பு. பகுதி - பரத்தையிற் பிரிதல். கூற்று - தலைவி. கேட்போன் - தலைவன். இடம் - முன்னிலையாய பள்ளியிடன். காலம் - நிகழ்காலம். பயன் - ஊடல் தீர்தல். மெய்ப்பாடு - வெகுளியைச் சார்ந்த உவகை.

இதற்குத் [1] திணையுள் திணை - பெண்பாற் கூற்றுப் பெருந் திணை. துறை - இல்லவை நகுதல்; அல்லது பரத்தையிற் பிரிந்து வந்தான் ஆற்றாமையே வாயிலாகப் புகுந்த தலைவனால் ஊடல் தீர்கின்றாளாய இற்பரத்தை கூற்றுமாம்.

### நேரிசையாசிரியப்பா

குவளையுங் குமுதமுந் தவளவொண் பதுமமுந்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் செவ்வியிற் பொதியவிழ் புனிதச்
செய்ய தாமரைத் தேறலை யளவளா
யுவட்டா தருந்தியு முருகிய சுரும்பதன்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தநீர் முள்ளியிற்
பாடவிழ்ந் தயர்சுரும் புளர்ந்துணப் பதனழி
பூநறு வுண்டின் புறுபுன லூரன்
றெண்டிரைக் காவிரித் திரவரங் கேசன்

---

1. அகமாகிய ஐந்திணைக்கும் புறமாகிய திணை கைக்கிளையும் பெருந்திணையும் ஆகலின் பெருந்திணையைத் திணையுள் திணை என்ப. அகப்புறத்திணை என்பதும் இது.

றுண்டர்நந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புரந்தரப் புரைதீ ரின்னுயிர்க்
கேதங் கொள்ளு நிரையம்விட் டகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி வினுட்குடி புகும்புன் மையனே.

இது பயவுவமப்போலி. என்னை? பொய்கையுள் பவித்திரச் செய்ய தாமரை பருவத்தின் மலர்ந்துகு புதிய தீந்தேறலை அளவளாய் உண்ணத் தெவிட்டாது உள்ளமுருகிய சுரும்பு அதன் கரையினில் மலிந்த முள்ளிடை நீர்முள்ளியை முறுக்கவிழ்ந்த பருவத்து வேற்றுச் சுரும்பு பலவும் துவைத்துண்ணச் செவ்வி யிழந்த பழம்பூவிற் சுருங்கிய தேனை யுண்டு இன்புறு மெனவே நமது தலைவர்க்கு உயர்ந்த மகளிர் இழிந்த மகளிர் என்பதில்லை; புணர்ந்து இன்புறுதற்கு யாவருமுரியர் என்னும் பயன் உள்ளுறுத்திக் கொள்ளக்கிடந்தமையான் என்றுணர்க.

திவ்விய - நல்ல. புனிதம் - பவித்திரம். அளவளாய் - உடலுமுயிருங் கலந்து. வெள்ளிடை - வெளி. கலித்தல் - மிகுதல். புன்மையன் - அறிவினற் சிறுமையன். வெளியில் நிற்கு நீர்முள்ளி எனவே வீதியில் நிற்கும் வேசை என்பதாயிற்று. ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையுட் காண்க.

திணையும் பகுதியும் இதுவுமது. துறை - உழையரியற் பழித்தல்.

நேரிசையாசிரியப்பா

இனியதென் எமிர்தா யெறித்தெழு கிரணப்
பனிமதி யகடுழப் பணைநெடும் பொங்கர்ப்
பூந்துணர் ததைஇய பொழிலெழி னள்ளிடை
யீர்ந்தண் கோட்டகத் தினமலர் முற்றிய
பொதியவிழ் தாமரைப் பொகுட்டா சனத்து
மதிநல னுறப்புணர் மாண்புடைப் பெடையொடும்
வீற்றிருந் தின்புறு மேன்மையோ திமமொரு
பாற்படு கரைசேர் பன்மரக் காவிற்



குறுகுபு கொடுமுட் டாழைக் கூன்சினை
வெறுநிலத் தடர்தர விரித்தபா சடைமேற்
றளிநறை மாந்துபு சார்பெடைக் குருகொடு
புணர்தலு நானுறும் புனன்மலி யூரன்
பூமக ளிலைகுலாம் பூண்முலை முகடுழத்
தேமவிழ் பசுந்துழாய்த் திருமணி மார்பன்
றென்னரங் கேசன் றிருவருட் கிலக்கா
முரனுடை யோர்க ளுயிர்த்துணை யெனவா
ழில்லறம் பழிபிறங் காதிருந் தில்லி
னகனமர்ந் தாளு துறையுந்
தகவேது மிலாத தவறு ளோனே.

இதுவும் பயவுவமப்போலி. என்னை? இரு மனமும் ஒரு மனம்போலப் பேரானந்த மெய்தப் புணர்ந்த பேடையோடும் பொதியவிழ்ந்த தாமரைப் பொகுட்டில் அரசு வீற்றிருந்து இன்புறுஞ் சேவலோதிமப் பேடையைப் பிரிந்து வாவிக்கொரு பக்கமான கரைசேர் பன்மரக்காவின் புறத்து வளைந்த முள்ளுடைத்தாழை முடச்சினை வெறுநிலத்துத் தகடுபடவிரித்த பாசடை மேலிருந்து அதனிடத்துத் துளித்துவிழுந் தேனை யுண்டு களிப்பினால் வெளுத்த சிறையுடைப் பெடைக் குருகைப் புணர்தலும் ஆனந்த மெய்தும் புனன்மலியூரனெனவே இப் பொற்புடை யில்லினகணிருந்து இக் கற்புடையவளோடும் இரு மனமும் ஒரு மனமாகப் புணர்ந்து பேரானந்த மெய்திய பின்னர் யாம் புடைசூழ அரசு வீற்றிருந்தோன், இவளை நீங்கி எமது மாளிகைக்கு அயலாய்ப் பொலிவிழந்த சேரிப் பரத்தையைப் பெண்டன்மை மாத்திரம் ஒத்தலிற் காம பானத்தை யுண்ட புத்திப் பிரமையால் உவர்ப்பின்றிப் புணர்ந்ததனால் இன்ப மெய்தும் ஊரன் தகுதி யொன்றுமிலன் என்றுரைத்த பான்மை உள்ளுறுத்திக் கொள்ளக் கிடந்தமையான் என்றுணர்க. இதற்கும் விரித்துரை நம்பெருமாள் மும்மணிக்கோவை யுரையுட் காண்க.

பகுதி - இதுவுமது. துறை - தோழி தலைவனை இயற் பழித்தல்.

### நேரிசையாசிரியப்பா

நீர்நிலை முற்றிய நிழன்மலி சோலையுட்
கார்வழங் காத காலையுங் கவின்பெற
வேர்முதற் பழுத்து வியன்சினைப் பலவு
வளங்கெழு நாடவெம் மணிபுரை மாண்கவின்
புறந்தரு மாயினும் புனிதநின் னின்று
லரவணைத் துயிலமர்ந் தருளரங் கேசன்
றாநீர்க் காவிரித் துறைபடிந் தல்லதை
யொல்லேன் மலரம ளியினுறப்
புல்லேன் பரத்தையர்ப் புணர்ந்தநின் மார்பே.

இது மெய்யுவமப்போலி. என்னை ? கார் வழங்காத காலையும் நிழன்மலி சோலையுள் பலவு வேர்முதற் பழுத்து வாட்டமின்றி வளனெய்தினாற்போல நீ என்னிடத்து அருளின்றிப் பரத்தையர் மாட்டுப் பிரிந்த காலத்தும் ஆயவெள்ளம் விட்டு நீங்காத எனது மனையிடத்து இல்லறங் கோடாது நடத்துதற்பொருட்டு இத்துணைப் போதும் உளளானேன் என்றதாக உள்ளுறுத்திக் கொள்ளக் கிடந்தமையான் என்றறிக. இதற்கு மொழிந்த விரித்துரை மும்மணிக்கோவை யுரையுட் காண்க.

பகுதி - இதுவுமது. துறை - அணைந்த வழியூடல்.

### நேரிசையாசிரியப்பா

உலைவினீ ரமுவத் துறுசிறை யதன்க
ணலைகொழித் தலைதொறு மலைதொறு மொத்துண்
டழுங்களு ரெய்திய யாக்கைய தாகியுந்
தன்னால் வளர்க்கத் தகுசினை யதன்மேன்
மன்னு தரவின் வளர்மீன் வைத்தகண்
வாங்கா துய்த்து வளர்புன லூரற்
கேவலிற் பிழையா வின்னிசைப் பாணர்
புதுவது வாய்வழி பிழைத்திவண் போதரு
மதுகினைந் தருவிருந் தளித்திடற் கந்தோ
மதுமகிழ் மார்பினன் வழுதிநன் னாட்டவர்
குடிமையைக் காய்திறன் குறிப்பது மின்றாற்
காதோ டுலவுகட் காரிகை
யாதோ கறியீங் கினிதலைமப் பதுவே.



இதுவும் மெய்யுவமப்போலி. என்னை ? அழிவில்லாத நீர்க்கயத்துண் மிக்க சிறையிடத்துத் திரையெடுத்து எற்றுந்தோறும் எற்றுந்தோறும் அதனாலெற்றுண்டு மிகவுந் துன்பமெய்திய யாக்கையோடும் கூடிய மீன் தன்னால் வளர்க்கும் சினையின்மேல் வைத்தகண் வாங்காது வளர்த்தாற்போல யானுந் தலைவர் பிரிந்து எனக்களித்த துன்பம என் மேனியை வருத்தவும் அம் மேனியோடும் இல்லின் கணிருந்தும் என்னால் ஓம்பப்படும் இல்லறம் ஒங்குதற் குளளானேன் எனபதுள்ளுறுத்திக் கொள்ளக் கிடந்தமையான் என்றறிக.

இதுவும் பகுதி அது. துறை - பாணனைப் பழித்தல்; தலைவி கூற்று.

இதற்கும் விரித்துரை கூற வேண்டுவதில்லை.

### நேரிசையாசிரியப்பா

பன்மலர் கஞலிய பழுமரச் சோலையுட்
டன்னிழ றுணையாத் தளிர்த்தமௌ வலின்மலர்
விரிகதிர் தெறுதலின் வெம்மையுற் றுணங்க
முட்புறக் குடக்கனி முடப்பல வதனயற்
செங்கிடை மலர்கவின் சிறப்பவு நிழற்று
மொண்புன லூரற் குறுபழி விளைகுகும்
யாமே திலமே திலமென வெங்கையர்
மாளிகை பயின்று மதங்கருத் திலராற்
புவிப்பா வலர்புகழ் புரவலன் மதுர
கவிப்பா வலன்புகழ் கருணையங் கடவுண்
மதுமகிழ் மார்பினன் வண்குரு கூரன்
சதுமறைப் பொருளாற் றருதமிழ் மறையினுண்
முதுமொழி யுணரா மூடம தடைந்த
மனனக மலமிக மறுகுந
ரினமென லொன்று மிகழ்பொய்ம் மையனே.

இது [1] நிறமல்லாத பண்புவமைப்போலி. என்னை ? சோலையுள் தன்னிழலை துணையாகத் தளித்த முல்லைக்கொடியின்

---

1. நிறப்பண்பு, குணப்பண்பு என்னும் இரண்டனுள் குணப்பண்பு குறித்த உள்ளுறை இஃதாகலின் நிறமல்லாத பண்புவமப்போலி என்றார்.

மலரானது விரிந்த கதிர் தெறுதலான் வெம்மையுற்று உணங்க முடப்பலவு தனக்கு அயலாகத் தோன்றின செங்கிடை மலர்க் கழுகுமிக அதற்கு நிழல் செய்யு மதுபோலத் தலைவனும், தன்னையே துணையாக ஆவிதளிரா நின்ற இவளும் காமத் தீயால் வெந்து மேனிவாடத் தனக்கு அயலாய பரத்தையர்க்கு உடலும் உயிருந் தளிர்ப்ப நலங்கொடா நின்றான் எனப் பண்புள்ளுறுத்திக் கொள்ளக் கிடந்தமையான் என்றுணர்க.

பகுதி - இதுவுமது. துறை - பாணனொடு வெகுளல். கூற்று - தோழி.

### நேரிசையாசிரியப்பா

ஒன்றாய்ப் பரந்த வுறுவளி கறங்கலின்
மின்றாழ் பன்மீன் மிளர்விசும் புழுசினை
சுமைமலிந் தொசிதரத் துணர்த்தமென் பூமுகை
பொறிச்சுரும் புளர்தொறு முளர்தொறும் பொதும்பருண்
முறுக்குடைந் திழிதரூஉ மொய்ந்நறுந் தேறல்
பரந்துபன் முகத்தவாய்ப் பவளக் கொடியொடுங்
குரூஉக்கட் பரூஉத்தாட் குடம்புரை செருத்தற்
றயுவாய் மேதி கட்கமு நீருண்
டுயவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பிற்
புறக்காழ் வயிர்ப் பூங்கழை தடிந்துகு
சிறக்காழ் நித்தில நிரந்தரம் வரன்றயல்
வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை
யுள்ளுயிர்ப் பெடையை யுறையுளி னிருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகந்தய லிடைப்படிந் தெழுமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றவக்கற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகுபுன லூர
பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பன் றிருவரங் கத்துப்
பொதுநலப் பெண்டிர் பொதுவுணின் மார்ப



மல்ல னீர்படிந் தல்லது
புல்லேந் தீண்டலெம் பொன்னடிச் சுவடே.

இதுவும் பண்புவமப்போலி; என்னை? சேவலன்னம் நித்திலங்கள் வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை வாலுகவைப் பெனக் குறுகி யிருத்தற்கு மென்மையில்லாததனோடும் அறிவிற்குப் பிரமையுற்றதனால் இலச்சையுற்றுத் தன் பேடையை யிருத்திப் போந்த பொய்கையுட் புகாநிற்குமதுபோல நீயும் கற்பும் நாணும் முதலிய நற்குணங்கள் இன்றித் தனம் முதலியன எய்தும் பெண்டன்மை மாத்திரமேயுடைய பரத்தையரையும் நற்குண நற்பெண்டிரென்று தோயுமளவிற் [1]பொருண்மேற் சென்று வற்கென்ற துர்க்குணர்த்தாராதல் கண்டு அதனோடு நினது புத்திப் பிரமையுற்றதையும் நினக்கு இழிபென நாணி எம்மனையிடத்து வந்து வாயில் வேண்டா நின்றாய் என்பது உள்ளுறுத்துக் கொள்ளக் கிடந்தமையான் என்றுணர்க.

வெள்ளிடை - வெளி. நிவந்தது - உயர்ந்தது. சுவல் - மேடு. வாலுகவைப்பு - மணற்குன்றாகிய இடம். தவக்கு - இலச்சை; நாண். கருத்துப் பொருளாய பண்புவமப்போலி.

பகுதி - இதுவுமது. துறை - அணைந்த வழியூடல். இது கூற்று - இற்பரத்தை.

### நேரிசையாசிரியப்பா

ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுதைபெய் தாற்றலிற் சுடுமண் பன்முறை
ததைவுறப் படுத்த சால்பீற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர்க் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் துபுதுடித்

1. பொருட்பெண்டிர் புற்கென் னுஞ்சொல் புன்மை குறித்தாற் போன்றது இவ்வற் கென்னும் சொல்லும். வற்கு - வன்மை.

தயல்விழ் வதனை யற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழுநெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுகிர்ச் சேவ லோதிம
மொருசிறை யிருந்த வோவாச் செவ்வி
யிருசிறைப் பேடை யெழின்மலர் குறுகு
நளிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவரங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்த நின்மார்பிற்
றனக்குறி யாகிற் றழுவுபு சிதைவுறின்
மனக்கிட ரிழைப்பது மன்றி
நினக்கிட ருறுமா னெருங்கலெம் மிடனே.

இது பிறப்புவமப்போலி. என்னை? இழிந்த [1]குரண்டம் தன் பேடைக்கு அருத்தும் கயலை அது வாய்க்கொள்ளத் துடித்து அயலே வீழ்ந்ததனை மிச்சில் என்றறிந்தும் அறிவினாலுயர்ந்த அன்னம் அதனை அற்றம் பார்த்து எடுத்துண்ட புலானாற்றத் தோடும் தனது உத்தமப் பேடையுறையும் அழகிய சேக்கையாகிய தாமரை மலரைக் குறுகுமதுபோல நீயும் உயர்ந்த குலத்துள் பிறந்தும் இழிந்த குலத்துளோர் தோய்ந்து அகன்ற மிச்சிலாகிய பரத்தையரிடத்து இன்பத்தைத் துய்த்து வேற்று நாற்றத் தோடும் எமது நன்மனைக்கண் எம்மைத் தீண்ட வந்தனை ஆதலால் எம்மைத் தீண்டல் பொருந்தாது எனக் கூறினாள் என்று உள்ளுறுத்துக் கொள்ளக் கிடந்தமையான் என்றுணர்க.

பகுதி - இதுவுமது. திணை - பெண்பாற் கூற்றுப் பெருந் திணை. துறை - பள்ளியிடத் தூடல். கூற்று - இதுவும் இற்பரத்தை.

நேரிசையாசிரியப்பா

விசும்பு தூர்த்தெழு வியன்சினை மரத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇ நுகர் கடுவன்
புரப்பவர் குறுகுப புலம்புறீஇப் பொங்க

1. குரண்டம் - கொக்கு; குரண்டகம் என்பதும் அது.



ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்ட புன்றொழிற் றன்மையர்க்குப்
பழிப்பின் றாகப் பாகுசெய் தட்ட
கோதறு மான்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் தாறும் பெற்றி யெய்ப்ப
முடவடிப் பலவின் முதிர்பொற் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழி பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பரவுசீ ரரங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த
பேராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரா வள்ளத் தமிர்தமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்ததற்
கிரத்த லீங்கியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இஃது,

"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே"

என்னும் அகத்திணையியற் சூத்திரத்தான் உள்ளுறையுவமந்தான் ஏனையுவமமென்று கூறும்படி உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாய் நின்று உள்ளுறை யுவமத்தினைத் தருங் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது; என்னை? "ஆகாயத்தை மூடியெழா நின்ற அகன்ற கொம்பர் மாமரத்திற் செம்மை முற்றாப் பசுத்த இனிய கனியைப் பறித்து நுகர் கடுவனது அச்சோலையைக் காப்பவர் முடுகத் தனிமையுற்று அதனயற் கொம்பரிற் சுற்றித் திரியுங் காவினுள் புளிப்பாகினை உண்ணவேட்ட புன்றொழிற் றன்மை உற்றவர்க்கு ஊட்டுவதாகக் குற்றமில்லையாம்படி பாகுபடுத்திக் காய்ச்சின எப்பிணியுந் தீர்க்கும் பசுவின்பாற் குழம்பு பொன்னின் கலத்துட் பெய்திருந்து ஆறுமுறைபோல முடப்பலவின் வேரிற் குடக்கனி முற்றிப் பழுத்து விரிந்த பொன்போல் நிறத்தையுடைய இனிய சுளை அருந்தும் பருவத் தருந்தாது செவ்வி யழியாநிற்கும் பரந்த புனலூரனே,"

என்றதற்கு, "ஊரனே! நீ உத்தமநாயகி யில்லின்கண் மாலைக் காலத்தினுஞ் செல்லாது இளைய செவ்வியுடைய சேரிப்பரத்தையைப் புணர்ந்து விளையாடா நின்றகாலத்து அவள் பொதுமகளாதலிற் பிறர் அப் பரத்தை மாளிகையைக் குறுகத் தனியுற்றுத் தணந்து அப் பரத்தை மாளிகையைச் சுற்றித் திரியுமிவ்வூரிடத்து யானும் நின்வரவு பார்த்து என்னை அலங்கரித்து மிகுந்த காந்தியோடுமிருப்ப நின்வரவு தாழ்ப்பக் கவினழியா நின்ற என் வருத்தத்தைத் தீர்ப்பான் ஒரு சேரியினிடத்து என்மாளிகைக்கண் வந்து வாயில் வேண்டா நின்றாய் என்னிடத்து இன்பம் நினகாதற்கு ஆர்த்தியுடையதொன்றல்ல இன்னும் அச் சேரிப்பரத்தை மாளிகையிற் பிரிதல் நினக்குக் கடனென்று" காமக்கிழத்தி உள்ளுறையுவமங் கூறினளாதலின் எனவுணர்க.

அன்றியும்

"உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே"

என்னும் பொருளியற் சூத்திரத்தானிது சிறப்பென்ற வுள்ளுறை.

இச் சிறப்பென்றவுள்ளுறை [1]"விரிகதிர்மண்டிலம்" என்னும் மருதக்கலியுள்ளும் வந்தமை காண்க. இது சேரிப்பரத்தையினிற்

---

1. 'விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்
துளிசிறந் திழிதரும் கண்ணின்னீர் அறல்வார
இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு
நனிவிரைந் தளித்தலின் நகுபவள் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரை
தனிமலர் தளைவிடூஉம் தண்டுறை நல்லூர."

"இதனால் வைகறைக் காலத்து மனைவயிற் செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே கிளைப் பெறாது சுற்றத்திடத்தே இருந்து கண்ணீர் வாராநிற்க நீ ஒரு காலத்து அளித்தலிற் சிறிது செவ்வி பெற்றாளா இருக்கும்படி தலைவியை வைத்தாய்; என்னை வருத்துதல் கூற வேண்டுமோ எனக் காமக் கிழத்தி உள்ளுறை உவமங் கூறினள்.



புணர்ந்து வந்த தலைவன் வரவுகண்டு காமக்கிழத்தி ஊடியவாறு கண்டு சென்றுசார்ந்த தலைவனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையுட் காண்க. கோது - ஆகுபெயர்.

நேரிசையாசிரியப்பா

மழைதவழ் பலவின் வான்சினை நீழற்
றழைதரு மரம்பை தான்பொறை யுயிர்ப்ப
விசும்புமிழ் திவலையின் விழுமிதின் முற்றிய
பசுங்காய் மதுரப் பலன்படு காலை
யிறத்த பாசடை நீள்சினை வாட
விறப்பளித் துலகிற் பிறர்க்குறு பயனு
மடலவிழ் நறைமகிழ் மாலிகை மார்பன்
துடரிமால் வரைதுறந் தனளாய்த் தொடர்ந்த
வினையேன் பெற்ற மெல்லிய லொருத்தியுங்
கனைகதிர் வேற்கைக் காளையுங் கடத்திடை
மன்னிய திருவு மாயோ னும்போன்
முன்னிய துளவெனின் முக்கோற் பகவீர்
மதிபெற [1]வணங்கினன் மகிழ்ந்தே
சதிர்பெற விளம்புமென் னளர்வகன் றிடவே.

என்பது, "மேகந்தவழாநின்ற பலவினது பெரியகொம்பர் நீழலில் வளர்ந்த வாழை ஈனுகிற்ப முகில்பெய்யுந் துளியின் நன்றாய் விளைந்த பசுங்காய் இனிய கனியான பருவத்துப் பசுத்த இலையாகிய நீண்ட சினைவாடுதலோடும் அதற்கு இறத்தலையும் கொடுத்து உலகின்கண் பிறர்க்கு மிக்க ஊதியமாகும் மாறனது துடரிமால்வரையை நீங்கினளாதலின் தொடர்ந்து போந்த வினையேன் பெற்ற மெல்லிய சாயலையுடையாள் ஒருத்தியும் நெருங்கிய கிரணத்தையுடைய வேற்கைக்காளை ஒருவனுமாக

---

'முகம்போல' என்ற ஏனை உவமம் தாமரை மலர் பனிவாரத் தளைவிடும் என்ற உள்ளுறை உவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. இஃது உவமப்போலி. —கலி. 71 நச்.

1. மதிபெற்று என்பது மதிபெற என நின்றது.

இருவரும் விட்டுநீங்காத திருமகளும் மாயோனும்போல, முக்கோற்பகவிர்! சுரத்தினிடத்து எதிர்வரக்கண்டது உளதேல் யான் கூறியவையெல்லாம் புத்தியுட்கொண்டு மகிழ்ந்து எனது தளர்வுநீங்கச் சதிராக விளம்பும் நும்மை வணங்காநின்றேன்'' என்றவாறு.

[1]இதனுள் செய்து என்பது செயவென்னும் வினையெச்ச வாய்பாடாக நின்றது. இச் செய்யுள் நால்வகை யுவமப்போலியும், விரவிவந்த வுவமப்போலி. என்னை? பலவினகீழ் வளராநின்ற வாழையீன்ற தாறுபோல நற்றாயால் வளராநின்ற என்னாற் பெறப்பட்டாள் என வினையுவமப்போலியும் விசும்புமிழ் திவலையில் தாறுமுற்றியதுபோல என்னாலும் மாயத்தாலும் இளையள் விளைவெய்தினள் எனவே மெய்யுவமப்போலியும், பசுங்காய் மதுரப் பலன்படுகாலை நிறத்த பாசடைநீள்சினை வாட இறப்பளித்து உலகிற் பிறர்க்குறுபயனும். எனவே அங்ஙனம் இளையளாய் விளைவெய்திய தலைவி இந்திரியகலினம்வந் தின்பத்திற்குரியளாயின காலத்து எனது மேனிக்கும் வாட்டந்தந்து என துயிரையுங் கொல்லாது கொன்று எனக்கொரு பயனுமின்றி அயலானை கணவறகே ஊதியமாயினள் என்று கொள்ளப் பயவுவமப்போலியும், பண்புவமப்போலியும், வினையுவமப்போலியும் இதனோடேகூடி முன்னும்பின்னு மிவ்வண்ணமே நால்வகை யுவமப்போலியும் உள்ளுறுத்துக்கொள்ள நிகழ்ந்தமையான் என்றுணர்க.

பயவுவமப்போலியாவது, வினைகாரணமாகப் புலப்படுங் காரியத்தை யுள்ளுறுத்துக் கொள்ளப்படுவதாம். அஃதீண்டுக் கூட்டத்தாற் பிறகும் பேரானந்தம்.

என்னாற் பெறப்பட்டாள் என்மகள் என்பன அன்பின் அதிகத்தானும் நற்றாயென்றும் தானென்றும் வேறல்லவாம் ஐக்கியத்தானும் கூறினாள். பாலைக்கலியுள்ளும் [2]''என்மக ளொருத்தியு'' மெனக் கூறியவாற்றானு முணர்க.

---

1. ''என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ.'' —கலி. 9.



பகுதி - உடன்போக்கு. துறை பின்சென்ற செவிலி [1]முக்கோற்பகவரை வினாதல்.

இதனுள் தலைவி தோழி செவிலி இற்பரத்தை காமக்கிழத்தி உழையர் என்போர் கூற்று வந்தன. ஒழிந்தோர் கூற்றும் வந்தவழிக் காண்க. (கூஅ)

உள்ளுறை யுவமம் முற்றிற்று.

---

## 5. ஒட்டலங்காரம்

39. குறித்ததை மறைத்துக் குறிக்கொள நிகர்த்ததை
நுவல்வகை தாமே யொட்டென நுவல்ப.

எ - ன் வைத்தமுறையானே [2]ஒட்டென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புலவனாற் குறித்த பொருளை மறைத்து அதனைக் கற்று வல்லோர் உட்கொள்ளும்படிக்கு அதற்கு ஒத்த பிறிதொன்றினை வெளிப்படையாய்க் கூறுங் கூறுபாடு தாமே ஒட்டென்னும் அலங்காரமென்று கூறுவர் பெரியோரென்றவாறு.

வெளிப்படையாக வென்பது சொல்லெச்சம். (ஙகூ)

---

1. அந்தணர். இவரை
''எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவற் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்''
என்றார் கலியினும்.

2. ''கருதிய பொருள்தொகுத் ததுபுலப் படுதற்
கொத்ததொன் றுரைப்பின் ஒட்டென மொழிப.'' —தண்டி. 51.

40. அஃதுவே,

பொருளிடஞ் சாதி வினைகுணம் பொழுதொடும்
மருளறு நெறித்தாய் வருதிற னுடைத்தே.

எ - ன். இஃதவ் அலங்காரத்தின் கூறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அதுவே-அச் சொல்லப்பட்ட ஒட்டுப் பொருள் முதல் காலம் ஈறுகச் சொல்லப்பட்ட ஆறும் இடனாக மயக்கமற்ற நெறியுடைத்தாய்த் தோன்றுங் கூறுபாடுடைத்தாம் என்றவாறு. இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு :—

கற்றுணர்ந்த வாய்மைக் கவிப்புலவீர் கண்ணனருள்
பெற்றியன்ற செய்பொருளைப் பேணியே—சுற்றம்
வளைத்தருந்த வாழாது வந்தயலார் கூண்டு
திளைத்தருந்த வாழ்வார் சிலர்.

என்பது கற்பனவாம் நூல்களைக் கற்றுணர்ந்த உண்மையோடுங் கூடிய கவிப் புலவீர்காள்! கண்ணனருளைப் பெற்றதனால் உண்டான உண்மை நிதியை அழியாதோம்பி அதனை மாதா பிதா முதலிய உரிமைச் சுற்றங்கள் தம்மை வளைத்திருந்து நுகர்வெய்தத் தாமும் உடனுண்டு வாழும் வீழ்வெய்தாதே சிலர் தம்மோடொரு வழியும் உறவில்லாத அயலார் களித்தருந்த வாழ்வார் அவரறியாமை தகாதென்றவாறு.

இது புலவன் குறித்த பொருளை மறைத்து அதனைக் குறிக்கொளற்கு அதற்கு ஒத்த பிறிதொன்றனை வெளிப் படையாய்க் கூறியது.

குறித்த பொருளாவது கண்ணனருள் பெறுதலால் உண்டான உண்மைப் பொருளாகிய கல்வியோடுங் கூடிய கவி. பேணுதல் - வாய்மையிழவாது போற்றுதல். சுற்றம் வளைத் தருந்த வாழாது என்பது ஆன்மாவை யீடேற்றும் உறுதிச் சுற்றமான பரமபதநாதனாகிய பிதாவும், பெரிய பிராட்டியாகிய மாதாவும், ஆசிரியனும் அதனைக் கேட்டு,மகிழ்வெய்த அவர்களைப் புகழ்ந்து அப் பாடலை அவர்களுக்கே கொடுத்து இம்மைப் பயனோடும் மறுமைப் பயனும் முத்தியையும் பெற்றுப் பேரின்ப மெய்தி வாழாது என்றவாறு.



சிலர் வந்து அயலார் கூண்டு வளைத்தருந்த வாழ்வா ரென்பது முன்பில் அவர்களைப்போலக் கவிகளாற் புகழ்தற்கு யாதும் இயைபில்லாத மானிடராகிய அயலாரை வாய்மை யிழந்து புகழ்வதனை அவர்கேட்டு உட்கொண்டு களித்தளித்த கூறை சோறு முதலியன உடுத்தும் உண்டும் வாழ்வார் இஃதென்ன உலகியற்கை என்றவாறு.

இது பொருள் நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு; என்னை? இருவகைப் பொருள், கல்விப் பொருளுஞ் செல்வப் பொருளு மென்பதனானுணர்க. ஒட்டென்பதற்கு நுவலா நுவற்சி, பிறிது மொழிதல், சுட்டு என்பன பரியாயம்.

திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து.

உழவுபயன் கொள்வா ருயர்நிலத்தி னுள்ளாய்
விழைவுபெற வித்தியவித் தல்லா—லழகமையா
வன்பாரில் வித்தியதூஉ மால்பொருட்டாற் போர்நிலத்தா
மென்பவர் புலவீ ரெவர்.

என்பது உழவினாற் பயன் கொள்வார் நல்ல கழனியகத்தவாய் மகிழ்வெய்த விதைத்த நல்ல வித்துச் சீமன்னாராயணன் பொருட்டால் விளைந்து களம்புகுமென உலகங் கூறுவதல்லால் உழவினுக்கு யாதுஞ் சிறப்பில்லாத வலிய பாறை நிலத்தில் விதைத்ததும் விளைந்து களம் புகுதும் என்று கூறுவார் புலவீர்காள் உலகத்து ஒருவருமில்லை என்றவாறு.

இதுவுங் குறித்த பொருளை மறைத்ததற்கொத்த பிறிதொன்றனை வெளிப்படையாய்க் கூறியது. குறித்த பொருளாவன :—

தவமாகிய தொழிலால் தமதுயிர்க்கு முத்தியாகிய ஊதியத்தை எய்தும் ஆரியர்கள் பரவுபகாரத்தாற் பூலோகமாகிய செய்யகத்து நல்ல கழனியாகிய கோயில் முதலிய திருப்பதிகளுள் விருப்பமுற் றிருத்திய சிறப்புடையுயிர்களே திருமால் பொருட்டாற் பரமபதம் எய்துமென்று உலகங் கூறுவதல்லாற் சிறப்பில்லாத பாறை நிலத்தில் விதைத்த வித்து விளைந்து களம் புகுதாதது போல மனநலன் யாதுமில்லாத தறுகண்மையோர் வைகும் பாறை

யாம் பாலைநிலங்களில் வைகிய வுயிர்கள் அறியாமை ஏதுவாக முத்தியைப் பெறும் என்று கூறுவார்கள் ஒருவரும் உலகின்கண் இல்லையென்றவாறு.

தவம் - பெயர்ச்சொல்லெச்சம். உயர்நிலம்-கோயில் முதலிய திருப்பதிகள். விழைவுபெற - விருப்பம் பெற்று. வித்தியது - நியமித்திருத்தல். வித்து - ஆன்மாக்கள். இது மாட்டேறில்லா வுருவகம். வன்பார் - திருப்பதிகளல்லாத பொல்லாதவூர்கள். மால், போர்நிலம் இரண்டுஞ் சிலேடை. மால் - திருமாலும், அறியாமையும்; அல்லது மேகத்தின் பொருட்டால் என்பதும் ஒன்று. போர்நிலம் - சூடு நிற்குங் களமும் பரமபதமும். எல்லா அண்டத்தையும் ஈன்று அகத்திடும் பிரகிருதிக்கு மேற்பட்டு அகன்ற விரசையையும் அகத்திடு நிலமாதலால் முத்திக்குப் போர்நிலமென்றும் பெயராயிற்று. போர்த்தல் - மூடுதல். இஃது இடம் நிலைக்களனாகிய ஒட்டு.

திணையும் துறையும் இதுவுமது. ஓம்படை எனினுமாம்.

வாய்ந்ததமிழ் மாறனருட்புலவீர் மத்திமநோய்க்
கேய்ந்தமருந் தாவின்பா லென்றக்கா - லாய்ந்ததையக்
கற்றுவின் பாலுணர்ந்து கைக்கொளார் மேதியின்பால்
பெற்றார்க்கும் போமோ பிணி.

இதனுள், ‘மத்திமநோய்’ என்பது பித்தம். அதற்கு மருந்து ஆவின்பால் என்றக்கால் என்பது வாகடநூல். அதற்கு ஆவின் பாலே மருந்தென்று கூறியக்கால் என்றவாறு. ‘மேதியின்பால் பெற்றார்க்கும் போமோ பிணி’ என்பது அப் பித்தமாகிய பிணி எருமைப் பாலைப் பெற்றார்க்குத் தீராது என்றவாறு.

இது வெளிப்படையாகக் கூறிய பொருள். குறித்த பொருளாவது; மத்திம நோய்க்கு (என்பது:—பிறர் கூறும் பதி பசு பாசம் என்பவற்றுள் இடைநின்ற ஆன்மாவிற்குச் செய்த தீவினையடியாக எய்தும் பிறவிமாகிய பிணிக்கு) நால்வேதத்தின் சாரமாகிய திருவாய்மொழி என்னும் ஆவினிடத் துண்டாகிய வுண்மை ஞானமாகிய பாலை ஆன்ம ஞானத்தி னிடத்துத் தலைப் பெய்யாது, வேதமார்க்கமல்லாத புன்பனுவ



லாகிய மேதியினிடத்துண்டான புன்மை ஞானமாகிய பாலால் தீராது என்றவாறு.

வாய்ந்தது - உண்டானது. உம்மை - இழிவு சிறப்பு. ஓகாரம் - ஒழியிசை. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க.

இது சாதி நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு. என்னை? ஆவின்பால் மேதியின்பால் என்பவற்றால் அவை நிலைக்களனாகப் புலப்படுதலான் என்றறிக.

திணை - இதுவுமது. துறை - செவியறிவுறூஉ; அல்லது பாடாண் சார்ந்த பொதுவியற்பாற் சார்த்திற் பனுவல் வாழ்த்துமாம்.

வளைதவழ்நீர் மண்மேன் மதிப்புலவீ ரந்தோ
விளைகழனிச் சார்புள் விராய - களைகளைய
வாங்குங் களைக்கோலான் மாநிலத்தார்க் கேலாத
தீங்கு புரிவார் சிலர்.

என்பது, “சங்கினந்தவழுங் கடல்சூழ்ந்த பூமியினுண்டாய புலவீர்காள்! செந்நெல் விளையுங் கழனியிடத்து விரவுங் களையைக் களைவதற்குக் [1]கத்தன் கொடுத்துக் கைக்கொண்ட களை களையுங் கோலால் களையைக் களையாது, பெரிய நிலத்தின்கணுள்ளார்க்குப் பொருந்தாத தீங்காகச் சிலர் தமது. கண்ணைக் களையுந் தீயதொழில் விரும்பிச் செய்வார். இஃதென்ன பேதைமையோ?” என்றவாறு.

இது வெளிப்படையாகக் கூறிய பொருள். விளைகழனி - சீவியாநின்ற வுடம்பு. உள் - ஆன்மா. சார்பு - இடம். விராயகளை - உம்மை இழைத்த தீவினை. களைய - அதனைப் போக்குதற்கு. வாங்குங் களைக்கோலால் - சீமந் நாராயணன் கொடுப்பக் கைக்கொண்ட மனோவாக்குக் காயங்களால். அவனைச் சிந்தித்தும், துதித்தும், கண்டும், கீர்த்தியைக் கேட்டும், [2]தாமஞ் சாத்தியும், கோயில் வலம் வந்தும போது போக்காது, முத்தியை விரும்புவார் பதிக்குப் பொருந்தாத தீத்தொழில்களை விரும்பிச் செய்து தமக்குள்ள வாழ்நாளை அந்தோ அவமே

1. தலைவன். 2. மாலை.

போகாநின்றார். இனி எங்ஙனம் ஈடேறுவர் என்றவாறு. இதற்கும் அவரைப்போலெனக் கூட்டுக. உள் - ஆகுபெயர். 'அந்தோ' என்பது இரக்கத்தின்கட் குறிப்பு. [3]மாநிலம் - சிலேடை. இது குறித்த பொருள். இது வினை நிலைக்களனாகத் தோன்றிய வொட்டு. என்னை? தீங்கு புரியுந் தொழில் நிலைக்களனாகத் தோன்றுதலான் என்றுணர்க.

திணை - இதுவுமது. துறை - வாயுறை வாழ்த்து.

வாழ்ந்த மதிப்புலவீர் மால்வழங்குந் தூயநீர்
வீழ்ந்த நிலத்தியல்பான் மெய்திரிந்தாற் - சூழ்ந்ததனைத்
தேற்றிற் றெளிப்பதல்லாற் சேற்றிற் செறிகளங்க
மாற்றப் படுநெறித்தோ மற்று.

என்பது, "முற்றவுணர்ந்த மூதறிவாளரோடுங் கூடிவாழ்ந்த மதியையுடைய புலவீர்காள்! மேகம் பெய்யுந் தெளிந்தநீர் தான் விழுந்த [2]நிலத்தினியல்பால் நிறம் வேறுபட்டால் அதனைப் போக்குதற்கு உலகம் விசாரித்தறிந்த [3]தேற்றினால் அந்நீர் தெளிவதனறிச் சேற்றுநீரால் அதற்கடைந்த களங்கத்தை ஒருவராலும் நீக்கப்படும் மார்க்கமுடைத்தன்று" என்றவாறு.

இது வெளிப்படையாகக் கூறிய பொருள். அது தெளியாத்துபோல மாயோனளித்த நற்குணம் சிற்றினங்களை விரும்பிக்கொண்ட உறவினது பெற்றியான் உண்மை வேறு பட்டால் எல்லா நூல்களையும் மனத்தாலுள்ளி அறிவறிந்தோர் தெளிந்த ஞானத்தாற் டண்டுபோல் தெளிவதன்றிக் கரிய சேறு போற் செறிந்த சிற்றினத்தார் மாசுகண்ட ஞானத்தால் தேற்றப்படாது என்றவாறு. ஆதலான், மூதறிவுடையோர் நட்புவிடாது கொள்ளவேண்டுமென்றவாறு.

---

1 மாநிலம் - உலகம்;
'மானிலம்' மாயோனால் அமைக்கப்பட்ட நிலம் என்பதாம்.
"மானிலத்தார் - மாயோனால் அமைக்கப்பட்ட பூமியின் கண்ணுள்ளார்" என்பது காண்க (48)
2. "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்" —திருக். 452.
3. தேற்றாங் கொட்டை. அது கலங்கல் நீரைத் தெளிவிப்பது. 'தேறுபடு சின்னீர் போல' என்பது மணிமேகலை.



இது குறித்த பொருள். இதனுள், [1]மால், நீர், வீழ்ந்த, மெய், தேற்றில், களங்கம் என்பன சிலேடை. ஆதலான், இஃது அடைபொதுவாய்ப் பொருள் வேறுபட்டுப் பண்பு நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு; என்னை? வீழ்ந்த நிலத்தியல்பான் மெய்திரிந்தாலெனக் குண நிலைக்களனாகக் குறித்த பொருடோன்றுதலான் என்றுணர்க.

திணை - இதுவுமது. துறை - ஓம்படை.

நன்புலவீர் கங்குற் கிசைந்ததெலா நாரணனு
ளின்புறவா ராய்ந்தியற்று மெஃகத்தே - புன்புலன்பெற்
றீட்டா தவரெவனோ வெண்ணியது தாமுடிக்க
மாட்டா தழுங்கு மதி.

என்பது, "நல்லறத்தினது பகுதியறிந்த புலவீர்காள் இரவிற்கு வேண்டுவன எல்லாம் நன்பகலே நாரணன் அருளாற் புத்தி களித்தியற்றுங் கூரறிவிலராகித் தமது மந்த புத்தியால் அவற்றை இயற்றாதிருந்தவர் அக்கங்குல் வந்த காலத்துக் தங்குற்கு வேண்டுவன இன்றித் தாம் எண்ணியது முடிக்க மாட்டாது அழுங்குகின்றது என்ன பேதைமையோ?" என்றவாறு.

இது வெளிப்படையாய்க் கூறிய பொருள். அவரைப்போல நிலையாமையோடுங் கூடிய யாக்கை நிலைமைத்தாம் உயிரோடுங் கூடியிருக்கப் பெற்ற காலத்து இம்மைக்கண்ணே மறுமைப் பயனும் முத்தியைப் பெறுதற்கு ஏதுவாம் ஞானநூல்களை ஆராய்ந்து சித்து அசித்து ஈச்சுரங்களை அறிந்து அவற்றோடும், [2]'அன்றறிவாம் என்னாது அறங்'களைப் பயிலாதார் மரணம் வந்து அடுத்த காலத்தில் எண்ணியிருந்த முத்திமை யெய்த வேண்டுவன செய்து முடித்திலம் என்று இயமதூதுவர் கூட்டத்தைக் கண்டு அழுங்குகின்றமை என்ன பேதைமையோ? என்றவாறு.

---

1. மால் என்பதை மேகம், திருமால் எனக் கொண்டு சிலேடைப் பொருள் அறிக.
2. அன்றறிவாம் என்னா தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. —திருக். 36

எனவே; முத்தியை எய்துதற்கு வேண்டுவன யாக்கை யிருக்கப்பெற்ற பொழுதே பின்னை என்னாது செய்து முடிக்க வேண்டும் என்பது பயன். இதனுள், நல்லறத்தின் பகுதி யறிந்த என்பது சொல்லெச்சம். [1]நன்பகலே என்பது எதிர்மறை யெச்சம். இது காலம் நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு. என்னை? இரவிற்கு வேண்டுவனவெல்லாம் நன்பகலே இயற்ற வேண்டு மென்னுங் கால நிலைக்களனாகக் குறித்த பொருள் தோன்றுத லான் என்றுணர்க.

திணையும் துறையும் இதுவுமது. [2]பொழுதொடும் என்னு மும்மையாற் சினை நிலைக்களனாகத் தோன்றும் ஒட்டுமுள. அதற்குச் செய்யுள் வருமாறு:—

எம்பெருமா னின்னருள்சே ரின்புலவீர் வான்பொருட்குச்
செம்பொ னுள தீவிற் செலவுற்றாற் - பம்புதிரைச்
சங்கந் தவழ்கடலைத் தாம்பொடுபாய் கூம்பின்றி
வங்கங் கடந்துறுமோ மற்று.

என்பது, "புலவீர்காள்! பெரும் பொருட்குப் பொன் விளை தீவிற் செல்ல நினைந்தாற் கப்பல், கயிற்றாற் கட்டப்பட்ட பாயோடுங் கூடிய பாய்மரமின்றி அத்தீவில் தலைப்படாது என்றவாறு.

இது வெளிப்படையாற் கூறிய பொருள். அதுபோலப் பொன் மயமான பரமபதத்திற் செல்லக் குறித்தவர்கள் மனோவாக்குக் காயங்களால் நினைத்தும் துதித்தும் தாமனு சாத்துவது முதலான சரியையின்றி யாண்டுத் தலைப்படார் என்பதாம். இது குறித்த பொருள்.

கடல் - பிறப்பாய கடல். வங்கம் - ஆன்மா. தாம்பும் கூம்பும் பாயும் - மனம் வாக்குக் காயம்.

திணை - இதுவுமது. துறை - வாயுறை வாழ்த்து.

1. கங்குல் (இரவு) குறிக்கப் பெற்றமையால் அதன் எதிர் மறையாகிய நன்பகல் கொள்ளப் பெற்றது.

2. நூற்பாவைக் காண்க. (40).



தாந்த னுறையுளெனுந் தண்பொருநை யின்வடபால்
வாய்ந்த கிரணமுழு மாணிக்க - மேந்திழாய்
ஞான முணர்ந்துணர்த்து நன்முத்தி யைவிளைக்குந்
தானவனு மீதெவனோ தான்.

இதனுள், [1]தாந்தன் உறையுளெனுந் தண் பொருநையின் வடபால் - செம்பொன் மாடத் திருக்குருகூர். கிரண முழு மாணிக்கம் - காரிமாறப்பிரான். இஃது அடைவிபரீதப்பட்டுப் பொருள் வேறுபட்டது; என்னை? [2]"ஞான முணர்ந்து" என்பது முதலாயின நான்கும் மாணிக்கத்திற்கு இல்லையாதலின் அடை விபரீதமாயிற்று. இது முதலதுபோலப் பொருணிலைக் களனாகத் தோன்றின ஒட்டு.

திணை - இதுவுமது. துறை - செந்துறைப் பாடாண் பாட்டு.

தென்னம் பொதியந் தருபொருநைத் தென்கரையின்
மன்னும் புளிக்கீழ் வளர்தருவொன் - றின்னமிர்தொத்
தான்றசுவைத் தீங்கனியோ ராயிரமுந் தண்ணளிகூர்ந்
தீன்றளித்த தன்பா லெமக்கு.

இதனுள், மன்னும் புளியென்பது திருப்புளியாழ்வார். திருப்புளிக்கீழ்வளர் தருவாவது காரிமாறப்பிரான். இன்னமிர்து ஒத்து ஆன்றசுவைத் தீங்கனி ஓராயிரம் என்பது திருவாய் மொழியாயிரப் பாடல். இதுவும் பொருணிலைக் களனாகத் தோன்றின ஒட்டு; அல்லது சாதி நிலைக்களனாகத் தோன்றிற் றெனினுமாம். இவை இரண்டிற்கும் ஒழிந்த அகல முரையிற் கொள்க.

தருவும் கடவுளாதலில் துறை - கடவுள் வாழ்த்துமாம். இதுவு முன்னதுபோற் செந்துறைப்பாடாண் பாட்டு.

அஃதேல் இதன் முன்னர்க் கூறிய உள்ளுறை யுவமத்தினோடும் ஒட்டென்னும் இதனிடை வேற்றுமை யாதோவெனின், அஃதே

1. தாந்தன் - தவம் செய்தலால் உண்டாம் துன்பத்தைப் பொறுப்பவன்.

2. ஞானம் உணர்தல், உணர்த்தல், முத்தியை விளைத்தல், அருளல் என்பவை.

நன்று சொன்னாய்! உள்ளுறை யுவமம் என்பது அகத்திணைக் கைகோளிரண்டிற்குமே உரித்தாம் அகத்திணையைந்தினும் அவ்வவ நிலங்களில் தெய்வத மொழிந்த கருப்பொருள் களனாகப் பிறக்கும் எனவும், அவ்வுள்ளுறை யுவமங் கூறுவார், தலைவன் தலைவி செவிலி தோழி பாங்கன் பாணன் ஆக அறுவரெனவும், உள்ளுறை யுவமங் கூறுதற்குரியரல்லாதார், நற்றாய், தந்தை, தன் ஆயத்தார், ஐமன்மார் ஆக நால்வரெனவும், அங்ஙனங் கூறுதற்குரியோர் கூறுமிடத்து மருதம் நெய்தல் என்னும் ஈரிடத்து மிகுந்தும், குறிஞ்சிக்கண் அவ்வளவின்றியும், ஒழிந்த நிலமிரண்டினும் அதனிற் குறைந்தும் வருமெனவும், அங்ஙனம் கூறுமிடத்தும் வெளிப்படக்கூறு மூவமையிடத்து உவமேயங் கேட்போர் மனத்தின்கண்ணும் புலவன் குறித்தவாறே நிகழ்த்து தலின் உள்ளுறை யுவமமெனவும், மேற்கூறப்படுங் கருப்பொருள் களனாகப் பிறக்கும் இறைச்சிப் பொருளோடுங் கூடாதனவாயும் வருமெனவு முணர்க.

இஃதன்னதன்றாய்க் கருப்பொருளிற் பிறக்க வேண்டுமென்னும் யாப்புறவின்றிப் புறத்தினும் புறப்புறத்தினுஞ் சென்று செய்யுட் செய்யும் புலவன் முதலாயினோர் கூறுங் கூற்றாய்ச் சுட்டென்னும் உள்ளுறையவாய் நடத்தல் வேற்றுமை யென்றுணர்க.

அங்ஙனமாதல்,

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

"நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்"

எனவும்,

"நெடும்புன லுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற"

"கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து"

"காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு"



எனவும் திருவள்ளுவர் கூறிய வலியறிதல், இடனறிதல் என்னும் இரண்டினுள்ளும், பிறநூல்களினுங் கண்டுகொள்க.

தண்டியாசிரியர் ஒட்டென்னும் அலங்காரத்தினுள் அடையும் பொருளும் அயல்பட மொழிவதாக,

"வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவி"

என்றதில் உள்ளுறை யுவமமும், அடை விபரீதப்படப் பொருள் வேறுபடக்,

"கடைகொ ளுலகியற்கை"

என்பதிற் கருப்பொருள் களனாகாது ஒட்டுங் கூறினாரெனினும், இந் நூலுடையார்,

"உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே"

(தொல். பொருளியல், 48)

என உள்ளுறையை ஐந்தாய்ப் பிரித்தமையான் [1]உள்ளுறை யுவமம் ஒட்டு இறைச்சியென மூன்றாக்கினார். இங்ஙனம் ஆராய்ந்து பிரித்தவிவர் நோக்கமும் தெள்ளிதின் ஆராய்ந்து கொள்க. (௫௦)

ஒட்டலங்காரம் முற்றிற்று.

---

1. தண்டியாசிரியர் உள்ளுறை, இறைச்சி என்பவற்றைத் தனித்தனி அணியாக்காது ஒட்டணியுள் அடக்கினார். இவர், ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளுறை மொழியை ஐந்தெனக் கூறியமை கொண்டு இம் மூன்றையும் தனித்தனி அணியாக்கிக் கொண்டார்.

# 6. உல்லேக அலங்காரம்

41. ஒருபொருட் குவமச் சொற்றொகக் கவர்த்த
பொருவமர் பொருள்பல புணர்ப்ப துல்லேகம்.

எ - ன். வைத்த முறையானே உல்லேகம் என்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புலவனால் குறிக்கப்பட்டதோர் உவமேயப் பொருட்கு உவமவுருபு தொகப் பல வேறு வகைத்தாய்க் கவர்த்த வினைபயம் மெய்யுரு என்னும் ஏதுக்களான் ஒத்த உவமானப் பொருள்களை அதற்குக் கூறுவது உல்லேகம் என்னும் அலங்காரமாம் என்றவாறு. (சக)

42. அதுவே,
யொருவர் பலர்குறிப் புரைப்பது மொன்றும்.

எ - ன். இதுவும் அதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இச் சொல்லப்பட்ட உல்லேகம் ஒருவர் தன்மையிற் கூறப்படுவதோடும், அவர் பிறராயுள்ளார் பலர் குறிப்புரையையும் பெய்துரைப்பதும் பொருந்தும் என்றவாறு. உம்மை, எச்சமாதலால் வினாவினும் வருமென் றுணர்க.

கட்டளைக் கலித்துறை

என்னா ருயிரென் னிருகண் மணியென் னிதயத்துள்ளாய்
மன்னா ரமிர்தமென் மெய்க்கணி யாரம் வகுளப்பிரான்
முன்னா ளெனையடி மைக்கொண்ட பேருண் மூர்த்திமண்மே
லன்னா வலர்தம்பி ரானுயர் வானவர் நற்றுணையே.

இஃது ஒருவர் பல கவர்ப்பாய் உரைத்தது. இருகண் - அகக் கண்ணும் புறக்கண்ணும்.

இடம் - தன்மை. துறை - கடவுள் வாழ்த்து.

கட்டளைக் கலித்துறை

முத்திக்கு வித்தென்பர் முத்திபெற் றார்முத் தியைவிளக்கும்
பத்திக்கு வித்தென்பர் பத்தியுற் றார்பனு வற்றொகைதேர்



புத்திக்கு வித்தென்பர் முத்தமிழ் வாய்மைப் புல்வர்மண்மே
லெத்திக்கும் போற்றுந் திருமகிழ் மாலை யிறைவனையே.

இது பலர் பல கவர்ப்பாய்க் கூறுவரெனப் பெய்துரைத்தது.

முத்தமிழ் - சித்து அசித்து ஈச்சுரத்தைக் கூறுந்தமிழ், அது திருவாய்மொழி; எழுத்துஞ் சொல்லும் பொருளுந் தேரும் வாய்மையுமாம். வாய்மை - உண்மை.

துறை - இதுவுமது.

கட்டளைக் கலித்துறை

அருளதென் கோநல் லறமதென் கோகற் றறிந்தவர்மெய்ப்
பொருளதென் கோசிற் குணமதென் கோதொண்டர் [புந்தியுள்ளாந்
தெருளதென் கோபிற தெய்வமென் றேதிரி கின்றசெய்கை
மருளதென் பாலணு காதென்னை யாண்மகிழ் மாறனையே.

இது தன்றொழிலுரைக்கும் வினாவின்கண் வந்தது. என்கோ என்பது யான் என்று கூறுகோ என்னும் பொருட்டு. அருள் - கருணை. நல்லறம் - துறவறம். மெய்ப்பொருள் - சீமந் நாராயணன். சிற்குணம் - சுத்த சாத்துவிக குணம். புந்தியுள்ளாந் தெருள் - பரம ஞானம். மருள் - அறியாமை. அஃது என்பால் அணுகாமை - அம்மருளென்னிடத்துச் சிறிதும். உறாமை. என்னையாள் மகிழ்மாறன் - என்னை யாட்கொண்ட மகிழ்மாறன் என்றவாறு.

இதனுள், தன்றொழிலுரைக்கும் வினாவின்கண் ஈற்றி னோகார முன்னர் வருமொழி முதற்கண்ணதாங் கசதபக்கள் மிகாதியல்பாயின. என்னை?

"மாறுகோ ளெச்சமும் வினாவு மையமுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்"
(தொல். உயிர்மயங். 88)

என்பதனாலறிக.

திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப் பரவல். (சஉ)

உல்லேக அலங்காரம் முற்றிற்று.

———

## 7. ஒப்புமைக்கூட்ட அலங்காரம்

**43.** தக்கதோர் பொருளினைச் சாற்றுழி யதுபோன்
மிக்கபல் பொருள்களை யுடன்விளம் புதரு
வொப்புமைக் கூட்ட மெனவுரைத் தனரே.

எ - ன். வைத்த முறையானே [1]ஒப்புமைக் கூட்டமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முக்கியமானதோர் பொருளினைப் புலவன் கருதிச் செய்யுளகத்துக் கூறுங்கால் அது போன்ற மிக்க பல பொருள்களையும் அதனுடன் பொருளொப்புமையுடைத்தாய்க் கூட்டமுறச் சொல்லுதல் ஒப்புமைக் கூட்டமென மேனூல் கற்று வல்லோர் உரைத்தனர் என்றவாறு. (சரு)

**44.** உயர்புகழ் பழியவற் றொடுமுறு மதுவே.

எ - ன். இதுவும் அவ் வலங்காரத்தின் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ் வொப்புமைக் கூட்டம் என்னும் அது உயர்ந்த புகழோடும் உயர்ந்த பழியோடும் பொருந்தி வரும் என்றவாறு. [2]உயர்வு முதனிலைத் தீவகம். ஏகாரம் ஈற்றசை.

வையம் பரவு மகிழ்மா றன் வண்டமிழுஞ்
செய்ய சதுர்மறையுந் தேசிகராய்—மெய்யுணர்ந்தோர்
பேரறிவும் பேருலகுண் டானே பிரமமெனப்
பாரறிந்த தாரறிதற் பாற்று.

இதனுள், மகிழ்மாறன் வண்டமி ழென்றது – திருவாய் மொழி. தேசிகர் - ஆசாரியன்மார். பேருலகுண்டான் - சீமந்

---

1. "கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்
தொருபொருள் உரைப்பது ஒப்புமைக் கூட்டம்"
"புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே"
—தண்டி. 79-80.

2. உயர்புகழ், உயர்பழி என இயைக்க.



நாராயணன். பாரறிந்தது - பெரியோர்களறிந்தது. அவையல்ல வெனில் என்பதனைச் சொல்லெச்சமாக்கிக் கூட்டிப் பிரமம் என்பது ஆரறிதற்பாற்று என்பது ஒருவரும் அறியும் பகுதியுடைத்தன்று என்பதாம்.

திணை - வாகை. துறை - சால்பு முல்லை. அல்லது திணை - பொதுவியல். துறை - பனுவல் வாழ்த்துமாம். இது புகழொப்புமைக் கூட்டம்.

என்றும் பிறர்மனையா ளின்ப நயவாரும்
நன்றி மறவா நலத்தாரு - மொன்றினைக்கொன்
றான்பரிந்துண் ணாத வுரவோரும் பூமகள்கோன்
வான்புரந்து நீடுவாழ் வார்.

இதுவும் புகழொப்புமைக் கூட்டம். இதனுள், நீடுவாழ்வார்- அழிவின்றி வாழ்வார் என்றவாறு. ஒழிந்த அகல முரையிற் கொள்க.

திணையுந் துறையும் இதுவுமது.

வேரி மலர்மகள்கோன் மேவுந் திருமேனி
பாரி லுலோகமெனும் பாவிகளு - மாரியனை
மாந்தரிலொன் றென்பாரும் வன்றொண்டர் சென்மிலை
யாய்ந்துரைப்பா ருந்நரகத் தார்.

இது பழியொப்புமைக் கூட்டம்.

திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து.

பொல்லா வழுக்காறு பூண்குநரு மாலடியார்க்
கில்லாப் பழியொன் றிடுகுநரு - நல்லாற்றிற்
செல்குநரை மீட்குநருஞ் சேயிழையா யெய்துவன
நல்குரவு தீவாய் நரகு.

இதுவுமது. நல்குரவு - வறுமை. தீவாய் நரகு - அக்கினி நரகம். எனவே, இம்மைக்கு வறுமையும், மறுமைக்கு நரகும் என்பதாம். [1]சிறப்பு... 

திணையுந் துறையும் இதுவுமது.

---

1. நல்குரவும், நரகும்

கலித்துறை

மைந்தர் மூரல் வாய்முத்த முண்ணுத வாய்வாயோ
மைந்தர் சொற்கொளாச் செவியுமோர் செவிகொலோ மழலை
மைந்தர் சீறடிச் சுவடுழா மார்புமோர் மார்போ
மைந்தர் காட்சிகண் டின்புறுக் கண்கள்கண் மலரோ.

இதுவுமது.

திணை-வாகை. துறை-பொருளொடு புணர்தல். அன்றித் திணை - பொதுவியல். துறை - மகப்பெருதழுங்கல். (௪௪)

ஒப்புமைக்கூட்ட அலங்காரம் முற்றிற்று.

---

## 8. வேற்றுமையலங்காரம்

45. ஒப்புடை யிருபொரு ளுரையினுங் குறிப்பினு
மெய்ப்பட வேற்றுமைப் படுத்துதல் வேற்றுமை.

எ - ன். வைத்த முறையானே [1]வேற்றுமையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உலகத்து ஒப்புடையனவா யிருக்கும் இரண்டு பொருளை வைத்து அவற்றைக் கூற்றினுலாதல் குறிப்பினுலாதல் பொருள்பெறத் தம்முள் வேற்றுமைபடக் கூறுவது வேற்றுமையென்னும் அலங்காரமாம் என்றவாறு. (௪௫)

46. அதுவே, ஒருபொரு ளிருபொருள் சமமுயர்ச் சியதெனும்
பொருள்பெறு மரபிற் புலப்படு மென்ப.

எ - ன். இதுவும் அவ் வலங்காரத்தினது பொருட் கூறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. "கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யணியே"—தண்டி. 48.



(இ - ள்.) அவ் வேற்றுமையென்னும் அலங்காரமாகிய அது, ஒரு பொருளான் வேற்றுமை செய்தலும், இரு பொருளான் வேற்றுமை செய்தலும் அங்ஙனம் வேற்றுமை செய்யுங்கால் ஒன்றினுக்கு ஒன்று சமமாந்தன்மையும் உயர்ந்துள தன்மையும் உடைத்தெனப் பொருள்படும் இலக்கணத்தோடும் தோன்றுமென்று [1]கூறுவர் பெரியோர் என்றவாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு :—

உண்ணத் தெவிட்டா துடலுமுயி ருந்தளிர்ப்பத்
தண்ணென் றினிமை தருமமிர்தம்—பெண்ணமிர்தின்
செவ்வா யமிர்தனைய தென்றாலுஞ் செவ்வியினில்
ஒவ்வா ததுபழமைத் தொன்று.

என்பது உண்ணுநிற்ப உண்டோர் உடலும் உயிரும் தழைக்கும்படி குளிர்ந்து தெவிட்டாது இனிமையைக் கொடுக்கும் தேவர் பானமாகிய அமிர்த மொத்து இப் பெண்ணுகிய வமிர்தின் செவ்வாயிடத் துண்டாகிய பானமாகிய அமிர்தம் என்றேன் ஆனாலுங் காலத்தினுற் பார்க்குமிடத்துப் பழமையுடைத்து அஃது; இஃது அப்படியன்று; புதிது புதிதாம் தன்மையையுடைத்து ; ஆகையாற் காலச் செவ்வியால் ஒவ்வாது என்றவாறு.

இதனுள், பெண்ணுகிய அமிர்தின் செவ்வாயிடத் துண்டாகிய பானமாகிய அமிர்தமென உருவக வாய்பாடுகள் மாட்டேறு பெற்றும் மாட்டேறு பெருதும் வந்ததூஉங் காண்க. இஃதொரு பொருள்.

பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

வண்ணவாய் மைச்சுடர்கண் மன்னு னனத்துலவு
கண்ணதா யம்பரமாய்க் கண்டவற்று—ளொண்மை

---

1. "வேற்றுமை என்னுது அதுவே என்ற மிகையால் அவை ஒரு பொருளான் வேற்றுமை செய்தலும், இருபொருளான் வேற்றுமை செய்தலும் உடையன. அல்லதூஉம் அவ்விலேசானே வேற்றுமைப் படக் கூறுதலேயன்றி ஒன்றின் ஒன்று மிகுதிப்படக் கூறவும் படும்" என்ருர் தண்டியலங்கார உரையுடையார்.

வெளியொன்று வேங்கடத்துண் மெய்ப்பொருளாய் நின்ற
வொளியொன் றெனும்பே ருலகு.

இதனுள், அழகினோடுங் கூடிய உண்மைச் சுடர்கள் - சந்திரனும், ஆதித்தனுமாம். ஆகாயமும் திருவேங்கட முடையானும் ஒப்புடைப் பொருள். ஆகாயத்தின்மேற் சொல்லுங்கால் சுடர்கள் பொருந்திய மகிழ்ச்சியோடுஞ் சுற்றிவரும் இடமுடைத்தாய்ச் சலத்தைத் தரிக்கப்பட்டதாய் எனவும், திருவேங்கடமுடையான் மேற்சொல்லுங்கால் சுடர்கள் நிலைபெற்ற திருமுகமண்டலத்துட் பிறழுந் திருக்கண்களாகவுடைய அழகிய பாதத்துவமாம் எனவும் கொள்க. இஃதிரு பொருள். ஒரு பொருள், இரு பொருள இவையிரண்டும் சமம். கூற்று.

துறை - கடவுள் வாழ்த்து.

மாறன் றமிழ்மறைக்கு வாய்ந்தமறை முப்பொருளுங்
கூறுந் திறத்தாற் குறிப்பொக்குந்—தேறத்
துயவரவே கூறுமிது சோதியையுட் கொள்ள
மயர்வறவே கூறு மறை.

என்பது உயர்ச்சி. துயவு - அறிவு திரிதல். இதுவும் கூற்று.

திணை - பாடாண் சார்ந்த பொதுவியல். துறை - பனுவல் வாழ்த்து.

வெய்ய நயனத்த செவ்வாய வெண்ணகைய
தையல் வதனமிறை தண்காவுட்—பொய்கைதான்
வண்கழுநீர் சேதாம்பல் வால்வளைக டாமுயிர்த்த
தண்டரள நீணிரைய தாம்.

இது சமம். இது குறிப்பு. உயிர்த்த - பெற்ற.

பகுதி - இடந்தலை. துறை - தடங்கண்டு மகிழ்தல்.

மாதராள் வெய்யமுலை மாணிக்க முத்துவட
மீதுலா வுந்தகைத்தாம் வேரிமகிழ்ச்—சோதி
துடரிவரை தேனருவி தூநீ ரருவி
படரியல நல்காதின் பம்.



வெய்யமுலை விருப்பத்தைத் தரு முலை. வேரிமகிழ்ச்சோதி - காரிமாறப்பிரான். இன்பம் நல்காது என்பதனால் இதுவுங் குறிப்பு. உயர்ச்சி.

பகுதி - இதுவுமது. துறை - நலம் பாராட்டல். (௪௬)

47. அதுவே,

[1]பொருளா தியவாம் நான்கொடும் புணரும்.

எ - ன். இதுவும் அவ் வேற்றுமை யலங்காரத்தின் விதப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அது - அவ் வேற்றுமை யலங்காரம் என்னும் அது பொருள் குணஞ் சாதி தொழிலென்னும் நான்கினோடும் பொருந்தி வரும் என்றவாறு.

அலையுட் படியு மரும்புனலை வாங்கி
யுலைவி லுலகுய்ய வோங்கு—மலைமேற்
களிக்கும் புயல்வேங் கடவனைப்போன் முத்தி
யளிக்குந் திறனறியா தாம்.

இதனுள், அலையுட் படிதல் - திருப்பாற் கடலுள் கண்வளர்தலும், புனலையுண்ணக் கடலுள் தாழ்தலுமாம். அரும்புனலை வாங்கி உலைவில் உலகுய்ய ஓங்குதல் - பெறுதற்கரிய புனலை மாவலிபால் வாங்கி உலகத்துள்ளார் பிழைக்க விச்சுவரூபங் கோடலும், கடலிற் புனலை வாங்கி யுண்டு உலகு பிழைக்க விசும்பின்மேல் நிமிர்தலும். இது பொருள் வேற்றுமை.

துறை - கடவுள் வாழ்த்து.

செம்பவள முந்திருமால் சேறைமான் செவ்வாயின்
விம்பவள முங்குணத்தால் வேறன்றே—யம்பவளம்
வல்லென் றிருக்குமலர் மாதர்வா யெஞ்ஞான்று
மெல்லென் றினிமை மிகும்.

---

1. "அதுவே,
குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்"
—தண்டி. 49.

இது குண்வேற்றுமை. செவ்வாயின் [1]விம்பவளம் - வடிவின் செல்வம். ஒழிந்த அகல முரையிற் கொள்க.

துறை - நலம்புனைந்துரைத்தல்.

மந்திரத்தால் வாகடஞ்சொன் மாமருந்தாற் றீராது
புந்தியிடங் கொண்டுபுறம் போகாவாஞ்—சந்ததமு
மைவளைவேற் கண்மடவீர் மாறன் றழுவாத
பெய்வளைபாற் காமப் பிணி.

இது [2]சாதி வேற்றுமை.

திணை - பெண்பாற் கைக்கிளை. துறை - கண்டு கை சோர்தல்.

மாறுங் கொலைகமற்கு மாறன் மணிவரைமேற்
றேறு மயில்விழிக்குஞ் சேர்வினைதான்—வேறன்றே
கின்றுறுக்குங் கூற்றுயிரை நேரிழைகண் மன்னுயிரைக்
கொன்றளிக்கு மீட்டுங் குழைந்து.

இதனுள், 'தேறும்' என்பது (மானிட மகளெனத்) தெளியும், எனவும், 'மயில்விழிக்'கென்பது, மயில்போற் சாயலை யுடையாள் விழிக்கெனவுங் கொள்க. இது தொழில் வேற்றுமை. கொன்றளிக்கை - [3]நோய் செய்யும் நோக்கும், அதற்கு மருந்தாகிய நோக்கும். நோய் செய்யும் நோக்கு - இன்பத்தினைய காமக் குறிப்பினை வெளிப்படுத்துகின்ற நோக்கு. மருந்தாய நோக்கு - தன்கண் நிகழ்கின்ற அற்பு நோக்கு.

பகுதி - இயற்கை. துறை - குறிப்பறிதல்.

'கான்கொடும் புணரும்' என்றது எச்சவும்மை ஆதலாற் பிறவலங்காரங்களோடும் கூடியும் வருவனவுள. அவை வருமாறு:—

1. விம்பம் - வடிவம்.

2. பிணி - உடற்பிணியும், காமப்பிணியும். இவ்விரண்டும் பிணி என்னும் சாதி பற்றியவை. அவற்றுள் வேற்றுமை கூறலின் சாதிவேற்றுமையாயிற்று.

3. "இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" —திருக். 1091.



ஊர்தியன மம்போ ருகமா சனஞான
நீதி வழுவா நெறிபடைத்தும்—வேதநெறி
யோதிப் பொறியிழந்தா னென்குரவ னெங்கோமான்
ஆதித் திருமகிழ்மா றன்.

இது சிலேடை வேற்றுமை. பொறி யிழத்தல் - பிரமன் தலை யிழத்தல். எங்கோமானாகிய மாறன் [1]பொறியென்னும் பெயரை யுடைய பெரிய பிராட்டியருளை யெய்தினவன் என்றமையாற் சிலேடையால் வேற்றுமை யாயிற்று.

திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப் பரவல்.

ஓவாத செம்மை யுதயத் துளதெனினுந்
தாவா மறுப்படைத்த தன்மையான்—மூவா
[2]முதனமது கண்ணனெனு முத்திரைக்கைம் மாறன்
வதனமது நேரா மதி.

இது விலக்கு வேற்றுமை. இன்னும் வேறுபட வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இது திணையும் துறையும் அது. (சஎ)

வேற்றுமையலங்காரம் முற்றிற்று.

———

## 9. திட்டாந்த அலங்காரம்

48. ஒருபொருட் டிறமுதற் குறித்தோப் புமைகொளத்
தெருள்புரி பிறபொருட் டிறமுஞ் செவ்விதின்
அவ்விய லகத்தறை வதுதிட் டாந்தம்.

எ - ன். வைத்த முறையானே திட்டாந்தம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

1. பொறி - திருமகள்.
"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே"

2. முதனமது—முதல் + நமது.

(இ - ள்.) யாதாயினும் ஒரு பொருட்கு எய்திய நன்மை தீமைக் கூறுபாட்டைப் புலவனுட் கொண்டு அதனைத் தன்னாற் கூறப்படும் செய்யுளகத்து முதலே கூறி, அதன் பின்னர் அதனோடு ஒப்புமை கொள்ளும்படிக்குத் தெளிவைத் தரும் மற்றொரு பொருளின் கூறுபாடும் அச் செய்யுளகத்து அழகு பெறக் கூறுவது திட்டாந்தமென்னும் அலங்காரமாம் என்றவாறு.

எனவே, உள்ளுறை யுவமம்போல உவமப் பொருள் செய்யுளகத்து வெளிப்படையாக நிற்ப ஏனை உவமேயப் பொருள்கள் எஞ்சி நிற்பக் குறிப்பினாற் கொள்ளப்படுவதன்று என்பதாயிற்று.

நேரிசை ஆசிரியப்பா

பூரணன் மலர்மகள் புணர்மணி மார்ப
னாரணன் மதிநல னயக்தனன் புரப்ப
முத்திரைக் கராம்புய முதல்வ னுவீற
னுத்தமச் சுருதியை யோதா துணர்ந்துணர்ந்
துரனுடை யவற்றுளு மூபனிட தத்தால்
வரனுடைத் தாக வடித்தவண் டமிழ்மறைப்
பாடம் போற்றிநாப் பவித்திரம் படைத்தோ
ராடக பருமணிக் கிரணமோ டளவளாம்
வீட்டை வதுமெய் மெய்யே யாயினு
நாடரி தாகி நடைபெறுந் தொடர்புடைப்
பொதிந்தசொற் பொருணிலை புலப்படப் புந்தியுட்
பதிந்தறி யாரிரு பசையறுத் துண்மை
யுணர்ந்திட லுயிர்தளிர்ப் பதுரு ருறுமவர்
சுணம்பய னிலவாங் காலங் கழியாத்
தேசிக ரைவரைத் தேர்ந்துநற் றுணைக்கொளும்
பூசுரன் றிருப்பெரும் பூதூர் முனிவன்
குருபரம் பரையுரைக் குறிப்பினைத் தமிழ்மொழிப்
பொருண்மலி நோக்கினைப் புணர்த்துணர்ந் தொன்மை
யிருநிலத் தொருவடி வெடுத்தகாட் சியதாந்
திருமலை யாழ்வார் திருவருட் கிலக்கெனு
மறையவர் பிரான்மண வாளமா முனிவர
னிறைநிலை யுயிர்நிலை யஃதிஃ தெய்து
முறைநெறி யிஃதென முழுவது முனிவறத்
துறைதொறுந் துறைதொறுஞ் சோர்வறத் தொடுத்தெடுத்
துணர்த்திய விசித்திரக் காண்டிகை யொழிவின்முற்
குணத்தொடும் பழகுபு கூர்ந்துள் ளூறுத்தித்
தோய்ந்துவட் டாத தூயபே ரின்பம்
வாய்ந்தவர் தாமே புலவிர்காண் மன்ற
விமிழ்திரைப் பாற்கட லினிற்பல வளஞ்சா
ரமிழ்தினைப் பசும்பொற் றசும்பகத் தடக்கியும்
பரிசிப் பதனொடும் பரிமளிப் பதலா
லுருசித் தறியா அசிதமா மதன்சுவை
வானவர் சுவைக்கொளும் வாய்மை
நானிலத் தெவர்தெளி யாதவர் நயந்தே.



என்பது திட்டாந்தம்.

சொரூபமும், ரூபமும், ஞானமும், குணமும், விபூதியும், கருணையும் முதலாகியவற்றுள் யாதுமோர் குறைவிலனும் இறைவுளான் பூமகள் விட்டு நீங்காத கவுத்துவ மணியோடுங் கூடிய மார்பனுஞ் சீமந் நாராயணன் ஞானத்தையும் பேரானந்தத்தையும் அன்புற்றளித்தலான் ஞான முத்திரைக் கைத்தாமரை நாவீறுடைய பிரான் ஒரு நூல்களும் ஒப்பில்லாத நன்மையையுடைய சுருதியை நாவினாலோதாது பாடந் தரித்துஞ் சத்தவிற் பத்தியால் வரும் அத்தங்களை உட்கொண்டும் ஞான மிகுந்த அச் சுருதிகளுள்ளும் நுட்பமாம் உபநிடத வாக்கியங்களாற் [1]சேட்டமாகக் கோதற வடித்துரைத்த திருவாய் மொழியின் மூலம் முழுதும் பழுதறவோதித் தமது நாவிற்குச் சுத்தியுண்டாக்கினோர் இவ் வுலகிற் பேதந்தரும் இரணியத்தளவு அருமணிக் கிரணத்தளவோடும் ஒரு தன்மைத்தாகக் கலக்கும் [2]அந்தாமத்தை அந்திய காலத்து அடைவதோடும் சிறிது தமதுளத் தீண்டிருந்தானந்த மெய்துவதும் பிறராற் பூசனை யெய்துவதும் மெய்.

---

1. முதன்மையாகக் குற்றமற. 2. வீடுபேறு.

மெய்யேயாகிலும் அதன்கண் ஆராய்தற் கரியதாகி யொழுகும் பொருட்டொடர்புடைய மறைந்த சொல்லின் பொருள் சென்று முற்றுதல் வெளிப்படைபோலப் புலப்பட்டுத் தமது புந்தியுள் தங்கி யறியாதார் அயன் அரன் என்னும் இருவரால் எய்தும் பயனைவிட்டுச் சீமந் நாராயணனே பரத்துவமென்னும் வாய்மை யுணர்ந்து தமது வாழ்நாளுள் உடலும் உயிருந் தளிர்ப்பப் பேரானந்தமெய்துவது அறியார்.

அறிபவர் யாரெனிற் கணப்பொழுதும் உயிர்க்கு இலாப மின்மையாம் அவப்பொழுது கழியாத பெரிய நம்பி முதலாம் ஆரியரைவரையும் ஆராய்ந்து முத்திக்கு நற்றுணையென்ன உறவு கொண்ட பூலோக தேவனும் திருப்பெரும்பூதூர் முனிவன் குரு பரம்பரை நோக்கத்தோடு முதலே சொன்ன தமிழ்மொழிப் பொருளான் மிகுத்த நுட்ப நோக்கத்தினையும் ஒன்றெனப் புணர்த்து உட்கொண்ட ஒள்ளிய ஞானம் பெரிய நிலத்து ஒப்பற்ற மனுகுல வடிவெடுத்த காட்சிப் பொருளென்று கூறத் தகுவதாய **திருமலையாழ்வார்** திருவுள்ளக் கருணைக்கு இலக் கென்னும் மறையவர்க்கு அதிபதியாம் **அழகிய மணவாள மாமுனிவ** னென்னும் சேட்டவான் இறையிலைமை இஃதுயிரிலைமை இஃது இறையை உயிர் சென்றெய்தும் நீடைவாகியவழி இஃது எனவும் அவற்றோடும் ஏனைய இரண்டுமாகிய யாவையும் யாவரும் விரும்ப **முதற்பத்து முதலாய்ப் பத்தாம் பத்தீறாகும்** இடந்தோறும் இடந் தோறுஞ் [1]சந்தயமறத் தொடுத்தெடுத்து உபதேசித்த பேரழகுடைத்தாம் உரைநடையை ஒழிவில்லாத சுத்த சாத்துவிக குணத்தோடும் பயின்று வரம்பறுத்து உட்கொண்டு அழுத்தி அனுபவித்துத் தெவிட்டாத வீறில் பேரின்பம் பலித்துள்ளார் தாமே சந்தயமில்லை.

அஃது எப்படி யொன்றெனில் ஒலிக்குந் திரையையுடைய திருப்பாற் கடல் பெற்ற சங்கநிதி முதலிய செல்வத்தோடும் பொருந்தியதாம் அமிர்தினைப் பசும் பொன்னாலாய குடம், தனது வாய்க்கொண்டு உள்ளடக்கியும் ஊறு கொள்வதனோடும் பரிமளிப்பதல்லால் அதற்கு யோக்கியமான மதுரத்தை உருசித்

1. சந்தயம் - சந்தேகம்.



தறியாதென்பதும், துறக்கத்தவரே [1]இரதிக்கும் பெருமை யுடையோர் என்பதூஉம் உலகத்துள் அன்புற்றுத் தெளியாதன வில்லையாதலால் அப்படியொன்றெனக் கொள்க.

இதனுண் முதலே குறித்த பொருளாவது திருவாய் மொழியும் பத்தரும். அவை அப்படியே முதல்வந்து அதன் பின்னர் அதனோடு ஒப்புமைக் கொள்ளும்படிக்குத் தெளிவைத் தரும்படிக்குக் குறித்த அமிர்தமாம் பொருட்டிறமும் அதன் பின்னர் இச்செய்யுளகத்துக் கூறியதூஉங் காண்க. எனவே, போந்த பொருள் திருவாய்மொழிப் பாடம் போற்றுவதோடும் அதனகத்து ஐந்து பொருளையுங் குருபரம்பரையாய் ஓராசான் வழியாய் வரும் வியாக்கியானமுங் கேட்பதே பேரின்ப மெய்துதற்கு உறுதியென்பதாயிற்று.

திணை - பாடாண். துறை - ஓம்படை.

ஆதித் திருமா லடியார் கிரப்பீடும்பை
வாதிக் கினும்வளர்ப்பார் வண்மையே—பாதிப்
பிறையா கியுமதியம் பேரருள்சீத் தற்குக்
குறையா குறையா குணம்.

இதுவுமது.

கிரப்பு - வறுமை. வண்மை - கொடை.

திணை - இதுவும் அது. துறை - கொடுப்போர்ப் புகழ்ச்சல்.

ஈத்துவக்கு மின்ப மியைந்தார்க ளேற்பவர்க்குச்
சேய்த்திருந்து மீத்துவப்பர் திண்ணமே - வாய்த்தமுகில்
வானம் பதியாயு மானிலத்தார்க் கேயுதவுந்
தானந் தவறுது தான்.

இதுவுமது.

இதனுள், மானிலத்தார் - மாயோனுலமைக்கப்பட்ட பூமியின்க ணுள்ளார்.

இதுவுந் திணையுந் துறையும் அது. (சஅ)

திட்டாந்த அலங்காரம் முற்றிற்று.

1. நுகரும்.

## 10. தற்குண அலங்காரம்

49. ஒருபொருட் குணத்தைமற் றொருபொருள் சார்ந்துறீப்
பற்றுத றற்குண மெனப்பகர்ந் தனரே.

எ - ன். வைத்த முறையானே தற்குணம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) யாதாயினும் ஒரு முக்கியப் பொருளினது குணத்தைச் சார்ந்த விடத்து அக் குணத்தைப் பிறிதொரு பொருள் பற்றுதல் தற்குணம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

காமர் திருப்பாற் கடலுங் கருங்கடலா
நாமந் தனைப்பயிலு நாடோறும்—பூமடந்தை
சீர்மேனி யைத்தழுவுந் தேவேச நாகணையான்
கார்மேனி வண்ணங் கவர்ந்து.

கவர்ந்து - உட்கொண்டு.

சாந்த மலர்ப்பொதும்பர்ச் சார்ந்தவெளிற் றுத்தருவுஞ்
சாந்த மணநல்குஞ் சால்பீற்றே—யேந்தெழில்கூர்
வாசவனுர் நான்முகனுர் வந்திறைஞ்சி வாழ்வுபெறுங்
கேசவனுர் சேட கிரி.

இதுவும் தற்குணம். சேடகிரி - திருமலை. ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

அஃதேல், குணவதிசயத்திற்குந் தற்குணத்திற்கும் வேற்றுமை யாதோ எனின் அதிசயம் சிறுமையை மிகுத்துக் கூறும்; இது மிகுந்ததை மிகுந்ததாய்க் கூறல்.

இவ்விரண்டனுண் முன்னையது கடவுள் வாழ்த்து. இது மலை வருணனை. (சுகூ)

தற்குண அலங்காரம் முற்றிற்று.

---

## 11. பிரத்தியனீக் அலங்காரம்

50. ஒருபொருட் கொருதிறத் துடைபொருண் மற்றதற்
கத்திறத் தினிலொப் புடைப்பொரு ளதன்மேல்
அமர்வினைப் பதுவே பிரத்திய னீகம்.

எ - ன். வைத்த முறையானே பிரத்தியனீகம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) யாதாயினும் ஒருவமேயப் பொருட்கு ஒரு திறத்தால் தோற்ற உவமைப் பொருள் அத் திறத்தால் அதற் கொத்ததோர் உவமப் பொருண்மேல் அமர் வினைப்பதாகக் கூறுதல் பிரத்தியனீகம் என்னும் அலங்காரமாம் என்றவாறு. [1]அனீகம் - படை.

இது தற்குறிப்பேற்றத்தைப் பின் சென்றதோர் பேதம்.

தேமலர்வா விப்புதுவைச் செல்விமுகப் பொற்பினுக்குத்
தாமதியந் தோற்றதற்பின் றேலாத—காமருசீ
ரந்தா மரைமே லமர்விளைக்குங் கங்குலின்கண்
வந்தாடல் பெற்ற மதி.

இது பிரத்தியனீகம். தேமலர்வாவிப் புதுவைச் செல்வி - சூடிக் கொடுத்த செல்வி; ஆழ்வார் திருமகள். ஒழிந்த அகலம் உரையிற் கொள்க.

துறை - பெண்பாற் கடவுள் வாழ்த்து. (ஞo)

பிரத்தியனீக அலங்காரம் முற்றிற்று.

---

1. பிரத்தியனீகம் - பகைப்படை.

## 12. சந்தய் அலங்காரம்

51. உற்றதோர் பொருளினை யையுற் றுணர்தல்
கற்றவர் சந்தய மெனக்கழ றினரே.

எ - ன். வைத்த முறையானே சந்தயம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புலனுகர் பொறிகளானுதல் கருத்தினுனுதல் உற்றதோர் பொருளினை ஐயமுறுதலும் தெளிதலும் சந்தய மென்னும் அலங்காரமாம் என்று 'கற்றோர் கூறினர் என்றவாறு. (ருக)

52. அதுவே,
சுத்த சந்தயம் நிச்சய கெர்ப்பம்
நிச்ச யாந்த மெனநிகழ் மூன்றும்.

எ - ன். இதுவும் அதன் கூறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச் சந்தயமென்னும் அலங்காரம் [1]சுத்த சந்தயமென்றும், நிச்சய கெர்ப்பமென்றும், நிச்சயாந்தமென்றும் மூன்று கூறுய் நடைபெறும் என்றவாறு.

குறள் வெண்பா

திருமகளோ பார்மகளோ தென்னரங்கன் வெற்பில்
வருமகளோ யாரோவிம் மாது.

இது சுத்த சந்தயம்.

பகுதி - இயற்கை. துறை - ஐயுறல்.

பா - குறள் வெண்பா.

---

1. ஐயுறுதல் ஒன்றே வருவது சுத்த சந்தயம்;
ஐயுற்று அதனை விலக்கி ஐயுற்றுரைப்பது
நிச்சயகெர்ப்பம்; ஐயுற்று விலக்கிப் பின்னை
இஃதெனத் தெளிந் துரைப்பது நிச்சயாந்தம்.



மெய்த்தமிழ்மா றன்றுடரி வெற்பிலெதிர் நின்றதுபூங்
கொத்தமைந்த பொன்னங் கொடியோகொல்—இத்தரணி
மீதா யுடுத்தொடுத்து மேயதகை மின்னுருவோ
யாதாய தொன்றோ விது.

இதுவுமது. இதனுள், பூங்கொத்தென்றது [1]கோடு, கொடி, நீர் என்னும் பல்வகைப் பூக்களை. அமைந்தது - மிகுந்தது. இத்தரணி......மின்னுருவோ - மேகத்தைவிட்டுப் புவியிடத்தாய் மேக படலத்தின் மேலாய உடுக்கணத்தினைத் தனக்குறுப்பாம தொடர்படுத்திப் பொழிலிடத்தடைந்ததொரு மின்னுருவமோ? யாதாயதொன்றோ? இஃது என்பது. எவ்வுருவம் அவ்வுருவாய தொன்றெனத் தெரிதற்கரிதென்றவாறு.

பகுதி - இயற்கை. துறை - ஐயுறுதல்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

குன்றுபோற் புடைத்தெழுந்த தனத்தாளைச் சிறைவைத்த
கொடுமை யானைத்
துன்றுபோர்க் களத்தெதிர்ந்து தொடுகணையான் முரணழியத்
துயரம் பூட்டி
யின்றுபோய் நாளைவா வெனவிமையோர் கணம்பரவ
வெம்பி ரானே
யன்றுபோர்க் களத்துரைத்த தறமிலையோ மறமிலையோ
வறிகி லேனே.

இதுவுமது.

திணை - பொதுவியல். துறை - வில்வென்றி. திணை - வாகையெனினுமாம்.

முண்டகத்தா னென்னின் முகமொன்றே நான்குமுகங்
கண்டனமற் றில்லையாற் கண்ணனெனிற்—றண்டுளபத்
தாமத்தா னன்றுமகிழ்த் தாமத்தானைத்துதித்தெந்
நாமத்தா னென்றுரைப்பே நாம்.

இது நிச்சய கெர்ப்பம்.

---

1. கோட்டுப்பூ(மரம்) கொடிப்பூ, நீர்ப்பூ.

திணை - பெண்பாற் கூற்றுக் கைக்கிளை. துறை - நயப்புரைத்தல்.

பாடஞ் சுரும்பெனிலோ பண்மிழற்றுங் காவியெனி
லோடைக் குளன்றி யுதியாதால்—ஏடவிழ்தார்
வள்ள லருண்மாறன் மால்வரைமான் கண்ணேயென்
னுள்ளந் திறைகொண் டது.

இது நிச்சயாந்தம்.

பகுதி - இயற்கை. துறை - தெரிந்து தெளிதல். (௫௨)

சந்தய அலங்காரம் முற்றிற்று.

———

## 13. அற்புத அலங்காரம்

**53.** அற்புத வாய்மையி னறைவ தற்புதமே.

எ - ன். வைத்த முறையானே அற்புதம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆச்சரியந் தோன்றும் உண்மையினுன் மொழிவது அற்புதம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

கட்டளைக் கலித்துறை

உண்ணீர்மை யற்றவர்க் கண்டா லவர்மன் னுயிர்க்கிரங்கிக்
கண்ணீர் பனிற்றும் புயன்மனு ராமன்கைக் கொள்வதொன்றோ
வெண்ணீர்மை யுற்ற விருதரைச் சால வெறுத்தவர்மேற்
புண்ணீர் பனிற்றச் சரமாரி யன்று பொழிந்ததுவே.

இஃது அற்புதம்.

திணை - பொதுவியல். துறை - வில்வென்றி.



கட்டளைக் கலித்துறை

சங்கத் தமிழ்ச்சொற் கவிப்புல வீர்சல ராசிமண்மே
லுங்கட்கு மற்புத மாவதொன் றேசிங்க வோங்கலின்வாய்த்
துங்கப் படைக்கை யிரணிய [1]னாகஞ் சுகிர்ந்தநர
சிங்கத்தின் மார்பின் மலர்மக ளாம்பினை சேர்ந்ததுவே.

இஃது உருவக வாய்பாட்டால் வந்த அற்புதம். சிங்க வோங்கல் - சிங்கவேள் குன்றமென்னும் திருப்பதி. மலர் மகளாம் [2]பினை - பெரிய பிராட்டி. சிங்கம் - அழகிய சிங்கர். சிங்கத்தின் மார்பிற் பினை சேர்ந்தது என்பதனுல் அற்புதமாயிற்று.

துறை - கடவுள் வாழ்த்து. (௫௩)

அற்புத அலங்காரம் முற்றிற்று.

———

## 14. நிதரிசன அலங்காரம்

**54.** இவ்வகைக் குலகத் திவைநிகழ் திறமெனு
மவ்வகைக் கவைபோன் றொருபொருட் டிறங்களைக்
கோட்டமில் குணந்தீங் கெனுமிரு குறிப்பிற்
காட்டு மென்றே கழறுத நிதரிசனம்.

எ - ன். வைத்த முறையானே [3]நிதரிசனம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

---

1. ஆகஞ்சுகிர்ந்த - உடலைப் பிளந்த. ஆகம் - மார்புமாம்.

2. பினை - பின்னை; ஆவாள் நப்பின்னை.

3. நிதரிசனம் என்பது காட்சியணி. அது நற்பொருட்காட்சி, தீப்பொருட் காட்சி என இரு திறத்ததாம்.

“ஒருவகை நிகழ்வதற் கொத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை என்றிவை புலப்பட
நிகழ்வ தாயின் நிதரிசன மதுவே” —தண்டி. 84,

(இ - ள்.) உலகத்து இவ்வகைப் பொருட்கு இவை நிகழுங் கூறுபாடு என்னும் அக் கூறுபாட்டிற்கு அவை போன்ற பிற பொருட் கூறுபாட்டை மாறுபாடின்றி நன்மையினும் தீமையினும் இருதிறத்தாற் குறித்துக் காணக் காட்டுகின்றதெனக் கூறுவது நிதரிசனம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

கட்டளைக் கலித்துறை

வாழ்ந்தார் வரவர வேவறி தாவர் வறுமையொடுந்
தாழ்ந்தார் தலைச்செய்வ ரென்பது காட்டுந் தரியலரைப்
போழ்ந்தார் திகிரிப் பிரான்புரு டோத்தமப் பொன்னகரைச்
சூழ்ந்தாய் மதிகுறை வாய்நிறை வாம்வகை தூநகையே.

இது நிதரிசனம்.

இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் வாயில் வேண்டவூடியிருந்து வாயின்மறுத்த தலைமகளோடும் வாயில் நேர்விக்குந் தோழி கூறியது.

அன்றித் திணை - பாடாண். துறை - வள்ளி வாழ்த்தெனினுமாம்.

இதனுள், 'வாழ்ந்தார் வரவரவே வறிதாவர் வறுமையொடுந் தாழ்ந்தார் தலைச் செய்வர்' என்பது காட்டும் என்பது உலகத்து நல்வினையடிக்கொள வாழ்வெய்தினர் நல்வினை தேய்ந்து தீவினையடிக்கொள வறுமை யெய்துவர் ; தீவினையடிக்கொளத் தாழ்வெய்தினர் தீவினை தேய்ந்து நல்வினையடிக்கொள செல்வமெய்தித் தலைப்படுவர் என்பதைக் காண்பிக்கும் என்பதாம்.

'தரியலரைப் போழ்ந்தார் திகிரிப்பிரான்' என்பது சத்துருக்கள் உடலைப் பிளந்து உயிரைப் பருகுஞ் சக்கரத்தையுடையார் என்பதாம். ஆய்மதி - இயங்குமதி. குறைவாய் - இளம்பிறையாய். நிறைவாம் - பூரணையாம்.

அஃதேல், திட்டாந்தத்தோடு இதனிடை வேற்றுமை யாதோவெனின், திட்டாந்தம் புலவன் தன்னாற் குறித்த ஒரு பொருட் கூறுபாட்டிற்குப் பிறிதொரு பொருளின் கூறுபாட்டை அதற்கு



உவமை குறிக்கொள்ளும்படிக்கு உவமை வாய்பாடு தோன்றாதொகத் தன்வினையாக அப் புலவன் கூறுதல் ; இஃதன்னதன்று. ஒரு பொருளின் பண்பு தொழில் பயன் முதலிய கூறுபாட்டைப் பிறிதொரு பொருள் காட்டுவதாகப் படுத்திப் பிறவினையாற் கூறுதல் ; இவை தம்முள் வேற்றுமையாமென்றுணர்க. (ருச)

நிதரிசன அலங்காரம் முற்றிற்று.

---

## 15. தற்குறிப்பேற்ற அலங்காரம்

55. உலகினு ளொருபொருட் குற்றதன் மைத்திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென் றுட்கொண்
டேற்றுத லாகுந் தற்குறிப் பேற்றம்.

எ - ன்: [1] தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உலகின்கண் உண்டான இருதிணைப் பொருள்களுள் யாதாயினும் ஒரு பொருட்கு எய்திய தன்மைக் கூறுபாட்டை விலக்கிப் பிறிதொரு காரணத்தால் விளைந்ததெனப் புலவன் விதித்து உட்கொண்டதனை அதன்கண்ணதாக ஏற்றுவது தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரமாம் என்றவாறு. (ருரு)

56. அதுவே,
சராசர மெனுமிரண் டினுஞ்சார் தருமே.

எ - ன். இதுவும் அவ் வலங்காரத்தினது கூறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

---

1. "பெயர்பொருள் அல்பொருள் எனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயலொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம்" —தண்டி. 55.

(இ - ள்.) அத் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம் இயங்கு திணையும் நிலைத்திணையுமாகிய இரண்டினும் சார்ந்து பிறக்கும் என்றவாறு.

கலி விருத்தம்

செங்கேழ் இளர்வே ணியனு னுருவிற்
பைங்கே ழுமையா ளொருபா கமெனச்
சங்கே தமடைந் ததிவன் சமரிற்
இங்கே றுவனென் றெதிரெண் ணியதே.

இஃது உயர்திணையிடத்துத் தற்குறிப்பேற்றம். செங்கேழ் - சிவப்பாகிய நிறம். இளர்வேணி - ஓங்கிய சடை. பைங்கேழுமை - பச்சென்ற நிறத்தையுடைய உமாதேவி. எதிரெண்ணியது - வருங்காலங் குறிக்கொண்டது.

திணை - வாகை. துறை - பொருநன் வென்றி.

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பிலம்புகுந் தீரேழ் புவனமுந் தரித்த
பெருந்தகை யெம்பிரான் றனைவெண்
சலஞ்சலந் திகிரி யெனப்புரப் பவர்கள்
சந்திரசூ ரியரெனச் சயிலம்
வலம்பயின் றனரந்த ரத்தவர் வருந்தா
வகைதரித் திலமெனத் தரிப்பா
னிலம்புகுந் துயர்பூஞ் சினையொடுந் தருவாய்
நிலைமரீஇ யினதென லாமே.

இது நிலைத்திணைத் தற்குறிப்பேற்றம்.

இது பாடாண் புறத்திணையுட் சார்ந்த தாவர வாழ்த்து. (இவை குருகாமான்மியம்)

தற்பயந்து முற்றத் தனைவளர்த்த தண்டடர்
ரெற்பயந்த வெப்புந் திடையாதே—பொற்கமல



மின்பா சடைக்கவிகை மீகிழற்று [1]நீரகமே
யென்பா லுறைமாற் கிடம்.

இதுவும் நிலைத்திணைத் தற்குறிப்பேற்றம். நிழற்றும் - நிழலிடும்.

திணை - பாடாண். துறை - நகர வாழ்த்து. (௫௬)

57. உவமச் சொற்புணர்ந் தொழுகலு முளதே.

எ - ன். இன்னும் அதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அத் தற்குறிப்பேற்றம், போல மான என்னும் உவமவுருபு புணர்ந்து நடப்பனவும் உளதாம் என்றவாறு.

மாயன் குருகூர் வளர்மறையோர் விண்புரப்பான்
றாய வழல்வளர்ப்பத் தோன்றுபுகை—நேய
வகைத் தோட்டு வார்குழலாய் வாசவனை விண்போய்ப்
புகைத் தோட்டு கின்றதுபோன்ம் போன்ம்.

என்பது [2]ஈறொற்றுடனிலையாய ஒப்பில்போலி. இஃது உவமவுருபு புணர்ந்த தற்குறிப்பேற்றம்.

துறை - நகர வாழ்த்து. (௫௭)

தற்குறிப்பேற்ற அலங்காரம் முற்றிற்று.

மாறனலங்காரம் பொருளணியியல்
முதல் பதினைந்து அணிகளுக்குப் பழைய வுரையும்
புலவர் இராமு இளங்குமரன் இயற்றிய
குறிப்புரையும் முற்றும்.

———

1. திருநீரகம் காஞ்சியைச் சார்ந்ததொரு திருத்தலம். இது திருவூரகத்துள் அமைந்ததாகும்.

2. போன்ம் - போலும். 'போன்ம்' என்பது ஈறொற்றுடனிலை. இவண் 'போன்ம்' என்பது உவமைப் பொருட்கு இடனாகி நிற்காமல் போலும் என்னும் பொருண்மாத்திரையே நின்றமையால் ஒப்பில் போலியாம்.

# நூற்பா அகரவரிசை

[எண் : பக்க எண்]


| | | | |
|---|---|---|---|
| அடையிடை புணரினும் | ௯௬ | உவமேயத்தியல் | ௪௪ |
| அடையொடு பொருட்கடை | ௭௦ | உவமையின் வகையே | ௧௯ |
| அதுவே, ஓண்பொருள் | ௭ | உவமையும் உருபும் | ௩௩ |
| அதுவே, ஒருபொருள் | ௧௫௪ | உவமையும் உருபும் தொடர் | ௭௨ |
| அதுவே, சராசரம் | ௧௭௧ | உற்றதோர் பொருளினை | ௧௬௯ |
| அதுவே, சுத்த | ௧௬௯ | ஏது நுதலிய | ௭௪ |
| அதுவே, தொகையினும் | ௯௬ | ஒத்தது வென்றதென் | ௭௪ |
| அதுவே, நிறைவினும் | ௬௯ | ஒப்புடை யிருபொருள் | ௧௫௪ |
| அதுவே, பொருளிடம் | ௧௪௦ | ஒருதொடர்பினுள் | ௯௭ |
| அதுவே, பொருள் | ௧௫௭ | ஒருபொருட் குணத்தை | ௧௬௪ |
| அதுவே, பொருவர் | ௧௫௦ | ஒருபொருட் குவமச் | ௧௫௦ |
| அரும்பெறல் மக்கள் | ௮ | ஒருபொருட் கொரு | ௧௬௫ |
| அவற்றுள், புவனும் | ௨ | ஒருபொருட்டிற | ௧௫௯ |
| அவற்றுள், பொருளியல் | ௮ | ஒழிவற வுருவக | ௧௧௫ |
| அவற்றுள், முக்கியப் | ௨௭ | ஒன்றுதிய சில | ௨௮ |
| அவைதாம், வெளிப்படை | ௪௧ | குறித்ததை மறைத்துக் | ௧௩௯ |
| அற்புத வாய்மையின் | ௧௬௮ | சிறப்பினும் வருஉம் | ௬௯ |
| இயைபியை பின்மை | ௯௮ | சிறப்பிற் றீர்ந்த | ௮௯ |
| இருமையும் ஒருதொடர் | ௩௯ | தக்கதோர் பொருளினைச் | ௧௫௨ |
| இவ்வகைக் குலகத் | ௧௬௯ | பலபொருள் ஒருபொருள் | ௪௬ |
| இவைதத் தமவிலக் | ௭௮ | பிசியினும் புலப்படும் | ௭௬ |
| உணர்வதத் கரிதாம் | ௯௨ | பொதுவினுஞ் சிறப்பினும் | ௯௧ |
| உயர்புகழ் பழி | ௧௫௨ | பொருண்முதலினும் | ௯௫ |
| உருவகம் விரனிறை | ௭௮ | பொருளினும் | ௧ |
| உரைத்த நான்கினுள் | ௩௫ | மரபினும் வருவதோர் | ௭௯ |
| உரைத்தவை யினிவரும் | ௯௮ | முக்கியப் பொருட்கு | ௭௭ |
| உரைபெறு சிலேடை | ௧௧௧ | முக்கியப் பொருளை | ௯௪ |
| உலகினுள் ஒருபொருட் | ௧௭௧ | வழுவா மரபின் | ௬ |
| உவமச் சொற்புணர்த் | ௧௭௩ | | |

## மேற்கோள் நூற்பா அகரவரிசை

[எண் : பக்க எண்]


| | | | |
|---|---|---|---|
| அடுக்கிய தோற்றம் | சுஎ | சுட்டிக் கூறா | சக |
| அமரர்கண் முடியும் | சுஅ | செய்யுமென் எச்ச | ச0 |
| அறுவகைப் பட்ட | கஉ | செய்யுள் இறுதி | ச0 |
| அன்றி இன்றி | அஎ | தடுமா றுவமம் | சு, ருரு |
| அன்ன வாங்க | சுங | தத்த மரபிற் | கூங |
| அன்னவென் கிளவி | கூங | தன்வயிற் காத்தலும் | சுச |
| ஆண்பெண் பலரென | அ | தானே தனக்குவமை | கூ |
| இசைதிரிந் திசைப்பினும் | கஉச | தோழியுஞ் செவிலியும் | கஉங |
| இரட்டைக் கிளவி | எ0 | நாலிரண் டாகும் | உசு |
| இவ்விடத் திம்மொழி | கூச | நாலீரு வழக்கிற் | கஉ |
| உடனுறை யுவமஞ் | கஙசு, கசக | நிறுத்திய மனத்தினை | கக |
| உயர்ந்ததன் மேற்றே | உசு | நுண்மையும் சுருக்கமும் | எரு |
| உவம உருபிலவை | ஙசு | பாலறி மரபின் | கங |
| உவமத் தன்மை | சரு | பெருமையும் சிறப் | உசு |
| உவமத் தொகையே | ஙசு | பெருமையும் மெய்ப் | உசு |
| எள்ள விழையப் | கூங | பொருளே உவமம் | ருஉ |
| என்றும் எனவும் | ங, சசு | பொறியுணர் வெல்லாம் | கக |
| ஒப்பொடு புணர்ந்த | எசு | போல மறுப்ப | கூங |
| ஓரீஇக் கூறலும் | சு; உஅ | மனத்தினை ஒருவழி | கக |
| ஒன்றே பலவென் | அ | மாறுகோ ளெச்சமும் | கருக |
| கடுப்ப வேய்ப்ப | கூங | முதலும் சினையும் | உசு |
| கிழக்கிடு பொருளோ | உரு | மெல்லெழுத் தியையின் | ச0 |
| கிழவி சொல்லின் | கஉங | வடிவின் அளவின் | உரு |
| கிழவோட் குவம | கஉங | விரவியும் வருஉம் | உரு |
| கிழவோற் காயின் | கஉங | வினைபயன் மெய் | உரு |
| சிறப்பே நலனே | உரு | னகார முன்னர் | ச0 |
| சீர்கூ றுதல் | எ | | |


---

## இலக்கிய மேற்கோள் அகரவரிசை

[எண் : பக்க எண்]


| | | | |
|---|---|---|---|
| அகர முதல | உகூ | உதிக்கும் கரு | ருo |
| அஞ்சவரு தானை | க0ங | உலகம் உவப்ப | சங |
| அம்பவள | ருகூ | உலவினீ ரழுவத் | கங0 |
| அம்பவளச் செவ் | ஙரு | உழவுபயன் கொள் | கசக |
| அம்பனைய வேற் | எஉ | உழுத உழுத்தஞ் | எரு |
| அமிர்து புளித் | உச | உச்சவான் | ஙக |
| அரனம் பலத்தி | ருரு | உற்றபர மேட்டி | கஜ |
| அரிக்குழாம் அன்ன | உங | உற்றவயக் | ஙக |
| அரிமா வன்ன | உஉ | உறைகழித்துக் | ருகூ |
| அருள தென்கொல் | கருக | ஊர்தியனம் | கருகூ |
| அலையுட்படியு | கருஎ | ஊர்ந்த தேறே | உக |
| அவாப் போல் | உரு | ஊ றூறிய | எக |
| அளிமருவும் | அஅ | எண்ணிற் கடங்கா | சஎ |
| அறவாழி யந்தணன் | க0ங | எப்பொருளுங் | அசு |
| அறியாமை என்னும் | க0க | எம்பெருமான் | கசசு |
| அறிவுடையார் | அரு | என்றும் பிறர்மனை | கருங |
| அன்ன நடை | ஙஅ | என்று ருயிரென் | கரு0 |
| ஆதார பீடத் | கங | ஏழாவரண | கசு |
| ஆதித் திருமால் | கசுங | ஏறுபோற் | உச |
| ஆம்ப லூறும் | எஉ | ஐயவிரை மாண்பகழி | ச0 |
| ஆரவட நீர் | க00 | ஒன்றுய னின் | ருசு |
| ஆரா அமுதம் | உஎ | ஒன்றுயப் பரந்த | கஙஉ |
| ஆலம் போற் | சஅ | ஓங்கிய குரம்பு | கஙங |
| ஆனை யெருத்த | அக | ஓர்பொழுதும் | க0சு |
| இமிழ் திரைநீர் | சஅ | ஓவாத செம்மை | கருக |
| இலவிதழ் போற் | ஙச | கடல் கண்டன்ன | உச |
| இழிவறிந் துண்பான் | எஅ | கடலோடா | கசஅ |
| இறைவ றங் கூரா | கஉரு | கடைகொ ளுலகிய | கசக |
| இனிய தெள்ளமிர்தாய் | கஉஅ | கடையாயார் | எங |
| ஈத்துவக்கு மின்ப | கஊங | கண்கழுநீர் | கஎ |
| ஈர்ந்து நிலம் | கஎ | கதிர்முலைக் குவடுங் | கஎ |
| உண்ணத் தெவிட்டா | கருரு | கரப்பினும் கை | சுச |
| உண்ணீர்மை | கசஅ | கருங்கால் வேங்கை | எக |

| | | | |
|---|---|---|---|
| கருங்குவளை போற் | ௩௪ | செய்ய கமல | ௩௦ |
| கருஞாயி றன்னான் | ௨௪ | சொன்னவா றென்றும் | ௫௧ |
| கருநிறப் பரூஉ | ௩௩ | தருமன் தண்ணளி | ௧௨௦ |
| கருமணியம்பா லகத்து | ௩௦ | தற்பயந்து | ௧௭௨ |
| கலங் கவிழ்த்த | ௨௨ | தாகம் பெறு | ௫௨ |
| கறைவேல் விழி | ௩௭ | தாந்தன் உறையுள் | ௧௪௭ |
| கற்றுணர்ந்த வாய் | ௧௪௦ | திருந்திழையாய் | ௧௧௯ |
| கனையிருள் கடி | ௯ | திருமகளோ | ௧௬௯ |
| காமர் பன்மலர் | ௧௨௪ | தீங்கிளவி | ௧௦௯ |
| காமர் திருப் | ௧௬௪ | தீதற்ற மெய்ஞ்ஞானத் | ௧௦௪ |
| காமரதத் தோகை | ௧௧௬ | துடிபோற் சுருங்கு | ௩௦ |
| காருலா விய | ௮௦ | துப்புறழ்தொண்டை | ௭௨ |
| காலாம் களரில் | ௧௪௮ | தெண்ணறவை | ௭௪ |
| காவிற் பிறவாக் | ௧௧௭ | தெள்ளமிர்தம் | ௫௪ |
| காவின் மேற் | ௩௨ | தெள்ளமிர் தென்ன | ௨௪ |
| குமரன் அனையானும் | ௨௨ | தென்னம் பொதியந் | ௧௪௭ |
| குருமணி குயின் | ௯௯ | தென்னரங்க | ௯௫ |
| குவளையுங் குமுதமும் | ௧௨௭ | தேமலர் வாவி | ௧௬௫ |
| குழை பொருது | ௮௯ | தேவும் புவனமும் | ௧௭ |
| குறைபடு மதியம் | ௩௦ | தேன்சுவைக் | ௫௪ |
| குன்றுபோற் புடைத் | ௧௪௭ | தேனருவி நீரருவி | ௯ |
| கூரெயிற்றூர் | ௧௨ | நஞ்சும் அமிர்தமும் | ௩௦ |
| கூற்றுவன் வேல் | ௭௪ | நடுக்கற் றறை | ௮௨ |
| கைச் சிரத்தா. | ௧௫ | நமன் மடந்தை | ௯௪ |
| கோங்கைக் குவடுங் | ௧௦௮ | நல்லார்கட் பட்ட | ௧௧௯ |
| கொடிபோல் வடவரை | ௩௮ | நறை மல்கிய | ௭௦ |
| கொடிபோல் வளரு | ௮௫ | நன்புலவீர் | ௧௪௫ |
| கொடியும் ஓடி | ௪௭ | நாணு நிறையும் | ௧௨௦ |
| கோதிலாப் பொன்னை | ௧௧௮ | நாரங் குழலாய் | ௧௦௫ |
| கோ முரைய | ௩௦ | நித்தர் மூத்தரித் | ௯௯ |
| சங்கத்தமிழ்ச்சொற் | ௧௬௯ | நித்தியமாய் | ௧௮ |
| சாந்தமலர்ப் | ௧௬௪ | நிறத்தாரை | ௧௦௯ |
| சிலைவணக்குந் | ௮௫ | நீண்ட செவி | ௧௪ |
| சினமென்னுஞ் | ௧௦௩ | நீர்நிலை முந்திய | ௧௩௦ |
| சீதரனே மூத்தன் | ௭௭ | நீலம்போற் | ௩௫ |
| செங்கேழ் இளர் | ௧௭௨ | நுண்டுகிற் கொடி | ௯௧ |
| செங்கைத் தளிர் | ௧௦௮ | நுனிக் கொம்பர் | ௧௪௮ |
| செந்தாமரைவதனம் | ௭௩ | நெடும்புனலுள் | ௧௪௮ |
| செம்பவளமூந் | ௧௫௭ | நேரியரைத்தாய் | ௧௩ |
| செம்பொன் ஆடை | ௯ | பவளம் போன்ற | ௩௦ |





| | | | |
|---|---|---|---|
| பவளவாய்ச் | ௧௦௩ | மதியத் தன்ன | ௬௭ |
| பவளவாய்மூத்த | ௩௭ | மதுமகிழ்ந்த | ௭௯ |
| பனிமதிக் கிரணம் | ௨௮ | மந்திரத்தால் | ௧௫௮ |
| பன்மலர் கஞலிய | ௧௩௧ | மலைநடந்தன்ன | ௨௪ |
| பாடற் சுரும்பெனிலோ | ௧௯௮ | மலைமதிதேன் | ௭௯ |
| பாம்பு கடித்தற்கு | ௭௫ | மலையிடைப் | ௧௬௮ |
| பாயுங் கருங்கயல் | ௨௯ | மழைதவழ் பலவின் | ௧௩௭ |
| பாயும் விடை | ௧௧௯ | மனபார் குளிர் | ௧௧௩ |
| பாரிபாரி | ௪௫ | மன்னர் மடங்கல் | ௧௩௦ |
| பாவையன்ன | ௨௧ | மாடகுளி | ௮௭ |
| பாற்கடல் பெய் | ௪௨ | மாண்குலா மாறு | ௫௧ |
| பாற்கடலுண் | ௬௫ | மாதர் முகம் | ௨௯ |
| பிலம்புகுந் | ௧௭௨ | மாதராள் வெய்ய | ௧௫௬ |
| பிறப்பா ரிறப்பார் | ௧௦௩ | மாதரில விதழ் | ௬௦ |
| பிறைபுரை வெண் | ௨௩ | மாதில் வண் | ௬௩ |
| பீலிபெய் சாகாடு | ௧௪௪ | மாயன்குருகா | ௧௧௮ |
| புருவ நயனம் | ௮௦ | மாயன் குருகூர் | ௧௭௩ |
| புலிபோற் பாயும் | ௩௦ | மாரியன்ன | ௨௪, ௩௦ |
| புன்பிணுவல் நஞ்சம் | ௧௦௧ | மாறன் பனிவரை | ௧௦௭ |
| பூங்கமலக் | ௯௧ | மாறன் றமிழ் | ௧௫௬ |
| பூங்குமிழ் மீதேறிப் | ௯௨ | மாறுங் கொலை | ௧௫௮ |
| பூந்தண் வகுளா | ௭௯ | மான்மதங் கூர் | ௮௧ |
| பூரணமாங்கண் | ௮௮ | மிக்க வரிதாளின் | ௧௦௨ |
| பூரணன் மலர்மகள் | ௧௯௦ | மிக்க விறைநிலையும். | ௮௭ |
| பூரித் துடலம் | ௧௫ | மின்பதித்த கார் | ௪௩ |
| பெண்ணமுதே | ௧௧௦ | மின்னுமாவும் | ௮௬ |
| பெண்ணாமு தளித்த | ௯௭ | முண்டகத் தான் | ௧௯௭ |
| பெற்றுணிகழ | ௮௪ | முத்த நகை | ௨௩ |
| பேரழகார் | ௧௧௩ | முத்திக்கு வித் | ௧௫௦ |
| பைங்குவளை | ௯௦ | முத்திரைக்கை | ௧௧௪ |
| பைம்பொற் குன்றே | ௫௭ | முத்திரைக் கைம் | ௪௪ |
| பொருகயற்கண் | ௩௦ | முதிரா முலையும் | ௧௦௯ |
| பொல்லா அழுக்காறு | ௧௫௩ | முப்புரி நூல் | ௧௧ |
| பொற்பிற் குரிய | ௧௧௫ | முரசுமுழங்கு | ௨௧ |
| பொன்காண் கட்டளை | ௭௧ | முருகவிழளகக் | ௯௬ |
| பொன்மலை போல | ௫௦ | முற்குணத்தன் | ௬௮ |
| பொன்னங் கொடி | ௬௧ | முற்ற உணர்ந்து | ௬௩ |
| பொன் னெடுங் குன் | ௬௧ | மெய்த்தமிழ் மாறன் | ௧௯௭ |
| மகிழ்வார்க்கும் | ௨௨ | மெய் வேதம் | ௫௪ |
| மத்தம் புரிய | ௧௦௪ | மென்றோள் எனத் | ௫௨ |

மேலிருந்த விண்ணோர் ௧௧௭
மைந்தர்மூரல் ௧௫௪
மையமருண்கண் ௫௩
மொழியமுதம் ௩௯
வட்ட வதன ௧௧௦
வண்ணத்தால் ௫௫
வண்ணவாய் ௧௫௫
வண்ணவிசை ௪௮
வருங்குன்றினை ௭௯
வருந்தி யீன்றுண் ௧௨௧
வல்லிக்கொடி ௮௦
வழி மதுத்தார் ௧௧௯
வளைதவழ் நீர் ௧௪௩
வள்ளுகிரும் ௧௨
வள்ளைக் கொடி ௨௧
வாசமொடு ௩௧
வாய்ந்த தமிழ்மறை ௧௪௨
வாய்மை மறை ௫௬
வார் செறிந்து ௮௦
வாரியை மொண் ௯௮
வாலிலாச் சம்பு ௯௧
வாவித் திருக் ௨௯
வாவித் திரை ௪௯
வாழ்ந்த மதிப்புலவீர் ௧௪௪
வாழ்ந்தார் வரவர ௧௭௦
விசும்பு தூர்த்தெழு ௧௩௪
விசும்பு தோய் ௨௪
விட மனைய ௧௧௪
விண்ணோ ருயிர் ௫௮
வில்லேருழவர் ௧௧௯
விற்புடைக் கீழ் ௧௧௧
வீங்குபரா ௩௨
வெதிரெதிர் சென் ௩௨
வெய்ய நயனத்த ௧௫௬
வெள்ளைப் பிறை ௨௯
வெறிகொளினச் ௧௪௯
வேகத்தால் ௧௧௪
வேம்பா லிசைந்தவை ௧௦௫
வேரிமலர்மகள் ௧௫௩
வையம் பரவு...செவ் ௧௦௭
வையம் பரவு...வண்ட ௧௫௨


# பொருளடைவு

[எண் : பக்க எண்]


அஃறிணைத் தன்மை ௧௯
அடையுவமை ௭௨
அணி ௧
அணிகளின் பெயர்முறை தொகை ௨
அணிகளை வகுத்தமுறை ௬
அணி முறைவைப்பு ௩-௪
அணி வகை ௧
அத்தச் சிலேடை யுவமை ௮௪
அந்தாதி யுவமை ௬௬
அநியம வுவமை ௫-௭
அநேகாங்க வுருவகம் ௧௦௮
அவயவ வுருவகம் ௧௦௯
அவயவ வுவமை ௬௦
அவயவி யுருவகம் ௧௦௯
அவயவி யுவமை ௬௧
அவனுதியுருவகம் ௧௧௪
அவிருத்த வுருவகம் ௧௦௫
அத்புத அலங்காரம் ௧௯௮
அற்புத வுவமை ௮௬
ஆடூஉப் பொருட்டன்மை ௯, ௧௦
ஆடூஉ மக்கட் டன்மை ௧௧
இடத் தன்மை ௧௬, ௧௭
இடம் நிலைக்களனாகிய ஒட்டு ௧௪௨
இயைபிலுருவகம் ௧௦௦
இயை புருவகம் ௯௯
இரட்டை யுவமை ௭௦
இரண்டுபெற்ற வுவமை ௨௯
இல்பொருளுவமை ௫௦
இன்சொலுவமை ௫௯
உயிரில் அஃறிணைத் தன்மை ௧௪
உயிருள் இயங்காத் தன்மை ௧௩
உயிருள் இயங்கு தன்மை ௧௩
உருவக வலங்காரம் ௯௪-௯௬
உருவக விரி ௯௮
உருவக வுருவகம் ௧௦௪
உருவக வுவமை ௭௯
உலுத்த வுவமை ௩௦
உல்லேக அலங்காரம் ௧௫௦
உவமவுருபு ௯௧, ௯௩
உவமை உயர்ச்சியாற் பொருட்குயர்ச்சி ௨௪
உவமைக்கு வரும் ஒருபொது விலக்கணம் ௨௬
உவமை நிலைக்களம் ௨௧, ௨௨
உவமை பிற அலங்காரங்களுடன் வருதல் ௭௮
உவமை யுருவகம் ௧௧௪-௧௧௫
உவமை யுருவகப் புறனடை ௧௧௫
உவமை வகை ௧௯, ௨௦
உள்ளுறை யுவமம் ௧௨௨
உள்ளுறை ஒட்டுவேறுபாடு ௧௪௭
ஏகதேச வுருவகம் ௧௦௦-௧௦௩; ௧௨௦
ஏகவுவமை ௬௨
ஏகாங்க வுருவகம் ௯௭, ௧௧௯
ஏது நுதலிய முதுமொழி யுவமை ௭௫
ஏதுவுருவகம் ௧௧௪
ஏதுவுவமை ௮௭
ஒத்தது வென்ற வுவமை ௭௪
ஒப்புமைக் கூட்ட வுவமை ௮௬
ஒப்புமைக் கூட்டம் ௧௫௨
ஒருபொருளுவமை ௪௮
ஒருபொருளுருவகம் ௧௦௩
ஒருவகை யுருவகம் ௧௨௦-௧௨௧
ஒருவயிற் போலி யுவமை ௪௪

| | |
|---|---|
| ஒன்றுபல குழீஇய பலபொருளுவமை | ௪௭ |
| ஒன்றொத்த குறைவுவமை | ௨௯ |
| காலத்தன்மை | ௧௮ |
| குண அதிசய உவமை | ௮௦ |
| குணவேற்றுமை | ௧௫௬ |
| குணவேற்றுமை யுருவகம் | ௧௧௩ |
| குறிப்புவமை | ௪௨-௪௫ |
| குறையுவமை | ௨௮ |
| சந்தய அலங்காரம் | ௧௬௬ |
| சமுச்சய வுவமை | ௫௫ |
| சாதிநிலைக்களனாகிய ஒட்டு | ௧௪௩ |
| சாதிவேற்றுமை | ௧௫௮ |
| சிலேடையுருவகம் | ௧௧௧ |
| சிலேடைவேற்றுமை | ௧௫௬ |
| சிறப்பிற் றீர்ந்த வுவமை | ௮௯-௯௧ |
| சிறப்பிற்றீரா வுவமை | ௨௫ |
| சிறப்புருவகம் | ௧௦௪ |
| சிறப்புவமை | ௫௫ |
| சினைத்தன்மை | ௧௪ |
| சினைநிலைக்களவொட்டு | ௧௪௬ |
| சுத்த சந்தயம் | ௧௬௬ |
| செம்மொழிச் சிலேடையுவமை | ௮௧ |
| தடுமாறுவமம் | ௫௪ |
| தலைதடுமாற்ற வுவமை | ௫௩ |
| தற்குண அலங்காரம் | ௧௮௪ |
| தற்குண வுவமை | ௮௫ |
| தற்குறிப்பேற்ற அலங்காரம் | ௧௭௧ |
| தற்குறிப்பேற்றவுவமை | ௮௫ |
| தன்மை அலங்காரம் | ௬ |
| தன்மை இலக்கணம் | ௭ |
| தன்மை வகை | ௮-௯ |
| திட்டாந்த அலங்காரம் | ௧௫௧-௧௬௩ |
| திணையால் மயங்கா வுவமை | ௨௨ |
| திணைபால் மயங்கிய வுவமை | ௨௩ |
| தொகை யுருவகம் | ௯௭ |
| தொகை யுவமை | ௩௫-௩௮ |
| தொகை விரியுவமை | ௩௯-௪௦ |
| தொன்றுதொட்டுவரும் உவமை | ௩௦ |
| நட்புருவகம் | ௧௦௬ |
| நான்குவமையும் வருதல் | ௩௪ |
| நிச்சயகெர்ப்பம் | ௧௬௭ |
| நிச்சயாந்தம் | ௧௬௮ |
| நிதரிசன அலங்காரம் | ௧௬௯ |
| நிந்தை யுவமை | ௫௯ |
| நிரல் நிறையுவமை | ௮௦ |
| நியம உவமை | ௫௬ |
| நிறையுவமை | ௨௭ |
| நூல்செய்தற்கு ஏது | ௫ |
| பண்பு தன்மை | ௧௫ |
| பண்புநிலைக்கள ஒட்டு | ௧௪௫ |
| பண்புவமப் போலி | ௧௩௧ |
| பயவுவமப்போலி | ௧௨௮ |
| பலபொருளுவமை | ௪௬ |
| பலவயிற் போலி | ௪௧ |
| பழியொப்புமைக் கூட்டம் | ௧௫௩ |
| பிசியுவமை | ௭௬ |
| பிரத்தியனீக அலங்காரம் | ௧௬௫ |
| பிரிமொழிச் சிலேடை யுவமை | ௮௧ |
| பிறப்புவமப் போலி | ௧௩௪ |
| புகழுவமை | ௫௮ |
| புகழொப் புமைக் கூட்டம் | ௧௫௩ |
| புதுவதாக வரும் உவமை | ௩௦-௩௩ |
| பேதஅபேத உருவகம் | ௧௧௬-௧௧௮ |
| பொது நீங்குவமை | ௬௮ |
| பொருணிலைக் களவொட்டு | ௧௪௭ |
| பொருள்வேற்றுமை | ௧௫௭ |
| பொருளணி இயல் காரணம் | ௩ |
| ‘போன்ம்’ வருமுறை | ௪௦ |
| மகடூஉப் பொருட்டன்மை | ௧௧ |
| மகடூஉ மகட்டன்மை | ௧௨ |
| மகா அவயவியுருவகம் | ௧௧௦ |
| மரபுவமை | ௭௩ |
| மருட்கை யுவமை | ௭௩ |
| மறுபொருளுவமை | ௫௧ |
| மாலையுவமை | ௬௫ |





| | |
|---|---|
| முதல்சினை வினை குணம் இல்லா வுவமை | ௨௪ |
| மூன்று நூல்களிற் கூறுத அணிகள் | ௫-௬ |
| முற்றுருவகம் | ௧௧௦ |
| முற்றுவமை | ௬௧ |
| மெய்யுவமப்போலி | ௧௩௦ |
| மோகவுவமை | ௫௯, ௧௧௮ |
| வடிவப்பண்பு | ௨௫ |
| வண்ணப் பண்பு | ௨௫ |
| விகாரவுவமை | ௫௪ |
| விபரீதவுவமை | ௩௩ |
| வியனிலையுருவகம் | ௧௦௭ |
| விரியுருவகம் | ௯௭ |
| விரியுவமை | ௩௩ |
| விருத்தவுருவகம் | ௧௦௫ |
| விரோதவுவமை | ௮௬ |
| விலக்குவமை | ௮௮ |
| விலக்குவேற்றுமை | ௧௫௯ |
| வினைத் தன்மை | ௧௫ |
| வினையுவமப்போலி | ௧௨௪-௧௨௫ |
| வினைநிலைக்களனாகத்தோன்றிய ஒட்டு | ௧௪௪ |
| வெதிரேக வுருவகம் | ௧௧௩ |
| வென்றதொத்த வுவமை | ௭௪ |
| வேற்றுமை யலங்காரம் | ௧௫௪ |
| வேறுபல குழீஇய பலபொருளுவமை | ௪௭ |

கழக வெளியீடு : ௧௱௧௬


பதிப்பாளர் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.

தலைமை நிலையம் :

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.
மதுரை-1. கோயமுத்தூர்-1. கும்பகோணம்.
திருச்சி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1.